www.tamilarangam.net

களத்தில்

அன்பளிப்பு 40P

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 18-03-1994

### தீவுப்பகுதியுள் ஊடுருவித் தாக்குதல்

சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனக் கூறப்படும் ஊர்காவற்றுறைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் சிறப்பு அணி ஊடுருவி நடாத்திய வெற்றிகரமான கண்ணிவெடித் தாக்குதலில், நான்கிற்கும் மேற்பட்ட சிறீலங்காப் படையினர் தளத்திலேயே கொல்லப்பட்டதுடன் பன்னிரண்டுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இருபது சிறீலங்கா இராணுவத்தினருடன் சென்ற பஸ் வண்டி ஒன்றே விடுதலைப் புலிகளின் மேற்படி தாக்குதலுக்கு இலக்காகியது. இப்பிரதேசத்தில் எவ்விதம் ஊடுருவலும், கண்ணிவெடியும் நடைபெற்றது, என சிறீலங்கா இராணுவ அதிகாரிகள் திகைப்படைந்துள்ளனர்.

# பெரும் போருக்கு இராணுவம் பின்னடிக்கிறது சிறீலங்கா ஜனாதிபதி முன்தள்ளுகிறார்

இராணுவத் தீர்வின் மூலம், தமிழீழத் தேசிய இனத்தின் மீது தனது தீர்வுகளைத் திணிக்கும் கைங்கரியத்தில் சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மும்முரமாக ஈடுபட்டு வருகிறார். ஆயினும் விடுதலைப் புலிகளிடம் பல தடவை தோல்விகளைப் பெற்ற அனுபவத்தில், சிறீலங்கா இராணுவத்தினர் நேரடி யுத்தத்தில் ஈடுபடுவதற்கு அஞ்சுகின்றனர். இதனால், சிறீலங்கா ஜனாதிபதி படைகளுக்கென கோடிக்கணக்கான ருபாவுக்கு ஆயுதங்களும், இராணுவத் தளபாடங்களும் வாங்கிக் குவிப்பதன் மூலமும் கடற்படை, விமானப்படைகளை நவீனப்படுத்துவதன் மூலமும் தனது படைகளுக்கு புதுத்தெம்பூட்டி வருகிறார். அதேவேளை பாரிய யுத்தமொன்றில் ஈடுபட்டால், அதிகளவில் உயிரிழப்புக்களைச் சந்திக்க வேண்டுமென்பதை உணர்ந்த சிறீலங்கா ஜனாதிபதி, இதனால் சிங்கள மக்கள் கொதித்தெழாவண்ணம் சிங்கள பௌத்த பேரினவாத வெறியை மக்களிடை வலுவூட்டி வருகிறார். தனது அனல் பறக்கும் பௌத்த சிங்கள வெறிப் பேச்சுக்கள் மூலம், சிறீலங்கா என அவரால் அழைக்கப்படும் இலங்கைத் தீவு முழுவதும் பௌத்த சிங்களவர்களுக்கே சொந்தம் என்பதை சிங்கள மக்களிடையே ஆணித்தரமாக பதிய வைக்க முயற்சித்து வருகிறார். இவருக்குத் துணையாக புத்திஜீவிகள் மட்டத்திலும், 'சிறீலங்கா சிங்களவர்களுக்கே சொந்தம்' என அறிவியல் ரீதியான பொய்மைகள் முன்வைக்கப்படத் தொடங்கியுள்ளன. களனிப் பல்கலைக் கழக தொல்பொருளியல் பேராசிரியர் அபய ஆரியசிங்க, "தென்னிந்தியாவில் இருந்து ஆரியச் சக்கரவர்த்திகளால் கொண்டு வரப்பட்ட தமிழர்களே யாழ்ப்பாணப் பகுதியில் குடியேறி இன்று ஈழம் கோருகின்றனர்" என்ற புதுக்கதையை வரலாறாக திரிபுவாதம் செய்யத் தொடங்கியுள்ளார். ஆயினும் அவுஸ்திரேலியாவின் 'அடிலயிட்' (University of Addelaide) பல்கலைக்கழகப் பேராசிரியர் 'லிண்டி வரல்', "சிங்களப் பௌத்தர்களிடை பொறாமை" -Jealousy Among the Sinhalese Buddhists என்ற ஆய்வினை தென்னாசியா எனும் ஆய்வு இதழில் வெளியிட்டுள்ளமை, இன்றைய உலகுக்கு சிங்கள பௌத்தர்களின் மனோநிலையைத் தெளிவாகக் காட்டியுள்ளது. இவர், "தமிழர்கள் சிங்களவர்களை எதிர்க்கவில்லை, சிங்கள பௌத்தர்களில் ஒருபகுதியினர் பொறாமையினால் தமிழர்கள் மேல் மேற்கொள்ளும் செயற்பாடுகள், அத்தகையோரையும் அவர்களின் துணையாளர்களையும் எதிர்க்கும்படி தமிழர்களைத் தூண்டுகிறது" என ஆணித்தரமாக விளக்கியுள்ளார்.

இந்நிலையில், சிங்கள பௌத்த பேரினவாதிகள் தமிழீழத் தேசிய மக்கள் மேல் பாரிய யுத்தத்தைத் தொடுத்தால், தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்புக்கு பொறுப்புடையவர்களான -தமிழீழ அரசு நோக்கிய அரசின் தலைமையாளர்களான -விடுதலைப் புலிகள், தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட வேண்டிய நிலை தோன்றும். இதனால் சிங்கள பாதுகாப்புப் படைகள் எதிர்நோக்கும் அழிவுகளால் சிங்கள இராணு

தொடர்ச்சி 14ம் பக்கம் ...

# தமிழர் தாயகப் பிரிப்பு முயற்சியை சிறீலங்கா தீவிரமாக்குகிறது

சிறீலங்கா அரசாங்கம் கிழக்கிலும் வவுனியாவிலும் தான் நடத்திய போலித் தேர்தலையடுத்து, வடக்குக் கிழக்கைப் பிரிப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பு ஒன்றையும் நடாத்தத் தயாராகி வருகிறது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறீலங்கா ஜனாதிபதி வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பை நடாத்துவதற்கான ஒரு முன்னோடி முயற்சியாகவே உள்ளூராட்சிச் சபைகளுக்கான இந்த போலித் தேர்தலை நடாத்தினார். இருந்தபோதிலும் இதில் போட்டியிட்ட சிறீலங்கா அரசின் அங்கங்களான தமிழ்க்குழுக்கள் பிரச்சார மேடைகளில் வடக்கு -கிழக்கு பிரிப்புக்கு எதிராகவே தாமும் நிற்பதாக கூறியமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் இந்த போலித் தேர்தலும்கூட சிறீலங்கா அரசாங்கத்தின் வடக்கு - கிழக்கு பிரிப்பு என்னும் நோக்குக்கு எதிராகவே தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆயினும் இத்தேர்தல் நடத்தப்பெற்ற விதமும் பெருமளவு மக்கள் இதில் பங்களிக்க இடமளிக்கப்படாததும் இதனை ஜனநாயக விரோத செயலாக மாற்றியுள்ளது.

### நிவாரண உதவி நிறுத்தம்

மேலும் தேர்தல் முடிவடைந்ததும் இப்பகுதியில் சகஜ வாழ்வு திரும்பிவிட்டதாகக் கூறி இப்பிரதேசங்களில் வாழும் இடம்பெயர்ந்த அகதிகளின் நிவாரண உதவிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசாங்கம், நிவாரணத்துக்கெனவும் புனர்வாழ்வுக்கெனவும் பெற்ற வெளிநாட்டு உதவிகளை ஆயுதம் வாங்குவதற்கு திசை திருப்பும் நோக்கில் இந்நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

### பொய்ப்பிரச்சாரம்

இதற்கிடையில் ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் புடைசூழ கிழக்கிலும், வவுனியாவிலும் தேர்தல் நாடகமாடிய சிறீலங்கா அரசாங்கம் 60 சதவீத தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர் என சதவீதம் பேசி தமது தோல்வியை மூடிமறைக்கச் சதி செய்கிறது.

ஏறாவூரில் . சிறீலங்காப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து வாக்காளர்களை கலைத்துவிட்டு வாக்குச் சீட்டுக்களைக் கைப்பற்றி ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்துள்ளதாகவும் பின்னர் அங்கிருந்து காத்தான்குடிக்குச் சென்று அங்கும் இவ்வாறே தேர்தல் நடத்தினர் எனவும் முஸ்லீம் பிரமுகர்கள் பகிரங்கக் குற்றம் சாட்டியுள்ளனர். திருகோணமலையில் கடற்படையினர் வாக்குச் சாவடி ஒன்றைக் கைப்பற்றி அங்கிருந்த வாக்குப் பெட்டியை அபகரித்துச் சென்று வாக்குகளால் நிரப்பி மீளக்கொண்டு வந்து வைத்ததாக மற்றொரு செய்தி கூறுகிறது. வாக்களிக்க முயன்ற சில வாக்காளர்களை சிறீலங்காப்

தொடர்ச்சி 14ம் பக்கம் ...



தென்தமிழீழ மண்ணில் புலிவீரர் பயிற்சி

# சமாதானக் கதவுகள் திறந்தேயுள்ளது போர் தொடுத்தால் அதற்கும் தயார்

சமாதானத்திற்கான கதவுகள் இன்னமும் திறந்தே உள்ளதெனவும் அதனை அலட்சியப்படுத்தி சிறீலங்கா அரசாங்கம் போர் தொடுத்தால் அதனைச் சந்திக்கவும் தயாராக இருப்பதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

பெரும் போருக்கான ஆயத்தங்களில் சிறீலங்கா அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதேநேரத்தில் விடுதலைப் புலிகளும் எத்தகைய தாக்குதலுக்கும் முகம் கொடுத்து வெற்றிவாகை சூடக்கூடிய வகையில் மக்களையும் இராணுவ தந்திரோபாயங்களையும் நெறிப்படுத்தி வருவதாக தமிழீழச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயினும் வீணான உயிரழிவுகளையும் பொருட் சேதங்களையும் சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் சந்திப்பதை தவிர்த்துக் கொள்ள சிறீலங்கா அரசாங்கம் விரும்பினால் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கான எந்த முன்னெடுப்புக்களையும் பரிசீலிப்பதற்காக சமாதானக் கதவுகளும் திறந்தேயுள்ளதென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

### புலம்பெயர்ந்த தமிழரின் கடமை

தமிழீழத்தின் மீதும் எமது உடன் பிறப்புக்கள் உற்றார் உறவினர் மீதும் பயங்கரவாதத் தாக்குதலுக்கும் வான்வழி, கடல்வழி இராணுவப் பலாத்காரங்களுக்கும் சிறீலங்கா வேகமாக இயங்கிவரும் இன்றைய சூழ்நிலையில், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அனைவரும் தமது வரலாற்றுக் கடமையைச் செய்ய வேண்டிய நேரத்தில் உள்ளனர். எமது மக்கள் பகைவரை எதிர்த்து உலகம் வியக்கும் வண்ணம் சாதனைகள் படைக்க வைக்க அவர்களுக்கு பணபலம், மனபலம், ஆதரவுக்கை கொடுக்க வேண்டிய கடமை எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. இவ் வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற உங்கள் ஒவ்வொருவரையும் தமிழீழத் தாய் வேண்டிநிற்கிறாள். ■

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net





## இதுவே நேரம் !

போர் முரசம் கொட்டுகிறது பேரினவாதச் சிங்கள அரசு. எம் பெற்றோரை, பிள்ளைகளை, உடன்பிறப்புக்களை, உற்றாரை அழிப்பதில் வென்றிட முடியுமென கனவு காண்கிறது சிங்கள அரசு. இன்னும் நாம் நமக்கென்ன, அதற்கென்ன என்று வாழ்ந்தோமென்றால் நாளை நமக்கென்று யாருமின்றி, ஊருமின்றி, உணர்வுமின்றி வாழ்கின்ற நிலை தோன்றும். இது உண்மை.

வெள்ளையர் தேசத்து வளமான வாழ்வுகளும், வசதிகளும் நிரந்தரமானவையல்ல. இந்நாடுகளின் சலுகைகள், படிகள், உரிமைகள், அகதி அந்தஸ்து எல்லாமே விரைவில் மாற்றமடையலாம்; மறைந்தும் போகலாம். அந்நேரம் பொருள் இன்றி, நம் குழந்தைகள் கூட நமக்குச் சொந்தமின்றி, நம் குடும்பம் கூடக் குலைந்து போகலாம். அந்நேரம் தமிழீழத்தை நாம் தாயாகத் தேடுவோம். எங்கள் இன்னுயிர்ச் செல்வங்கள் நாளை இந்த உலகில் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்றால் எமக்கென்றொரு நாடு உதயமாக வேண்டும்.

தமிழ் எம் உயிர் என்கிறோமே, தமிழ் எங்கள் வாழ்வு என்கிறோமே இவையெல்லாம் நிலைபெற வேண்டுமானால் 'தமிழுக்கு' வாழவைக்கும் சக்தியை நாம் கொடுக்க வேண்டும். தமிழ் பேசும் 'மக்கள் கூட்டம்' தேவையென்றால் தமிழ் பேச நிலம் வேண்டும். தமிழரை வீரப்பரம்பரை என்பர். நம்மோடு பிறந்தது போர். போர் கண்டு பேர் படைத்தவர் நாம். இன்று மீண்டுமொரு போர் காணப்போகிறோம். பெரும்போர். பெருவெற்றி புவிமீது பலபெற்ற புலிகளுடன் -தமிழர்களின் புகழை மீண்டும் தழைத்து எழவைத்த வீர புருசர்களுடன் -தமிழீழத் தேசிய இனத்தின் பாதுகாப்பினை தம் உயிராலும், உடலாலும், மனஉறுதியாலும் உறுதி செய்து நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் -சிங்கள அரசு போர் நடத்தப் போகிறது. பூச்சியையும், புழுவையும் மனிதனோடு சம உயிராக மதிக்க வேண்டுமென்று சிங்களத்தில் அஃறிணையைத் தோற்றுவிக்காத சிங்கள பௌத்தர்கள், தமிழர்களை புழுவினும் கேவலமாகக் கருதி சுட்டுப் பொசுக்கப் புறப்படுகிறார்கள். பௌத்த பிக்குகளிடம் ஆசி வேண்டி இந்த இனப்படுகொலை நடக்கிறது; இன்னும் பெரியளவில் தொடர்ந்து நடக்கவும் போகிறது. இதைத் தெரிந்து கொண்டும் நாம் வாய்மூடி நிற்கலாமா?

கொடுங்கோலன் விஜேதுங்காவின் இனவெறியை உலகுக்கு எடுத்துரைப்போம். நாளை பெரும் போரொன்று ஏற்பட்டு எம்மக்கள் சின்னாபின்னமாவதை தடுப்பதற்கு முன்வருவோம். உங்கள் கைகள் எமது மக்களுக்கு பலம் சேர்க்கும் வல்லமை கொண்டவையாக மாறட்டும். உங்கள் அறிவு -உங்கள் ஆற்றல் -உங்கள் உணர்வு எம்மக்களுக்கு பலத்தினைச் சேர்க்கட்டும்.

ஏன் தயங்குகின்றீர்கள்? நாமே நம் உடன்பிறப்புக்களுக்காக உழைக்காவிட்டால் நாளை எவன் அவர்களுக்காக குரல் கொடுக்கப் போகிறான். பணம் பெரிதல்ல. பாசம் அதைவிடப் பெரிது. இரவல் தாய்நாடு இனிமை தரலாம். ஆனால் சொந்தத் தாய்நாடுதான் பெருமை தரும். சித்திரை வந்தால் போர் தொடங்கிவிடக் கூடும். அதன் முன் நித்திரை விட்டெழுங்கள். இத்தரை மீது தமிழன் எங்கு வாழ்ந்தாலும் அத்தரை மீதிருந்து தமிழீழ மக்கள் மேல் -தமிழர் மேல் சிங்கள பௌத்த சிறீலங்கா ஜனாதிபதி விஜேதுங்காவும் அவன் போர் வெறிக்கும்பலும் ஆடப்போகின்ற இன அழிப்பு வெறியாட்டத்தை தடுத்துநிறுத்த முடிந்தவரை தோள்கொடுங்கள்.

கண்கெட்ட பின்பு சூரியவணக்க நிலையை மாற்றுவோம். காலம் கடப்பதற்கு முன் கடமையில் இறங்குவோம். தமிழீழ அன்னைக்காய் கூடிவருவோம். சேர்ந்து உழைப்போம். இதுவே நேரம். ■

### சுவீடனில் தமிழ் அகதி தீக்குளிப்பு

# திருப்பி அனுப்பும் முடிவை மறு பரிசீலனை செய்யுங்கள்

## ■ மேற்கத்திய அரசுகளுக்கு தமிழர் சர்வதேச ஒன்றியம் கோரிக்கை

1994ஆம் ஆண்டு மார்ச்சு 2ம் திகதி, சுவீடன் என்கோபிங் நகரில் அகதியாகப் புகலிடம் கோரி வசித்து வந்த விக்கிரம ராஜா திசவீரசிங்கம் என்னும் 36 வயது தமிழ் அகதி தனக்குத் தானே தீமூட்டி கடுமையான காயங்களுக்கு உள்ளாகி பாதிப்படைந்துள்ளார்.

இலங்கைத் தீவின் வடகிழக்கிலுள்ள முல்லைத்தீவு நகரில் இருந்து சுவீடனுக்கு வந்திருந்த திசவீரசிங்கத்திற்கு, சுவீடன் குடிவரவு அமைச்சு அவரின் சுவீடனில் தங்குவதற்கான அனுமதி மார்ச் 14ம் திகதியுடன் முடிவடைந்ததாகவும் அதன் பின்னர் அவர் காவலில் வைக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார் என அறிவுறுத்தியது. இதனையடுத்து காலை 10.40 மணியளவில் இவர் தனக்குத் தானே தீமூட்டி தற்கொலைக்கு முயற்சித்துள்ளார். தெருவில் இவர்மேல் தீப்பற்றி சுவாலையுடன் எரிவதைக் கண்ட சுவீடன் பிரஜை ஒருவர் இவரைக் காப்பாற்றி, உப்சலா மருத்துவப் போதனா வைத்திய சாலையில் அனுமதித்தார்.

அரசியல் புகலிடம் கோரிய இத் தமிழ் அகதி, இலங்கைக்குப் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்படுவதை விட, தீயினால் இறப்பதுமேல் என்று விரும்பிய செயற்பாடானது, கொழும்பையும் மற்றைய பிரதேசங்களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சிறீலங்கா அரசாங்கத்தின் ஒடுக்குமுறையின் உண்மை நிலையைத் தெளிவுபடுத்தி நிற்கிறது.

சிறீலங்கா அரசாங்கம், தான் சுற்றுலாக் கையேட்டில் கொடுத்துள்ளவாறு இலங்கைத் தீவில் நிலைமைகள் இருப்பதாக சர்வதேச சமூகத்திற்கு பாசாங்கு செய்து வருகிறது. வேதனைக்குரிய உண்மை என்னவென்றால், 1993 இல் ஜெனிவாவில் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு மனித உரிமை சட்டங்களின் விழுமியங்களை மதித்து மனித உரிமைகளைப் பேணும் தராதரத்தை உயர்த்தும்படி சிறீலங்கா அரசாங்கத்தை வற்புறுத்தி இருந்தும்கூட, இனப்பாகுபாடான தொடர்குண்டு வீச்சுக்கள் வான் வழியாக வடக்குக்கு மேல் அதிகரிக்கப்பட்டு வருகிறது என்பதே. கிழக்கில் சிறீலங்காவின் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் தொடர்ச்சியாக காரணமில்லாக் கைதுகளுக்கு ஆளாவதுடன், கைதாக்கப்பட்ட பலர் காணாமல் போவதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கொழும்பில் கடந்த ஆண்டில் கண்மூடித்தனமான முறையில் 15,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டதுமல்லாமல் பலர் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் 1994 மாசி மாத அறிக்கையின் படி, "இந்த காலகட்டத்தில் (1993 ஆம் ஆண்டில் இருந்து) விசேடமாகக் கொழும்பில் தமிழர் எனும் இனக்காரணத்தினால் மட்டுமே ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைதாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் சீருடை தரிக்காதவர்களால் இரவு நடுச்சாமத்தில் அடையாளம் காணமுடியாத இலக்கத்தகடுகள் அற்ற வாகனங்களில் இழுத்துச் செல்லப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு காவலில் வைத்து வதைக்கப்பட்டு வருகின்றனர். (உடன் சாட்சியாக) சின்னத்தம்பி மேகநாதன் நவம்பர் 10ம் திகதி சீருடை அணியாத கூட்டம் ஒன்றால் பஸ்சில் கொழும்பு மத்தியில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு ஒரு கிழமையின் பின்னர் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டபோது எவ்வித குற்றச் சாட்டும் இல்லாது விடுவிக்கப்பட்டார். இவர் காவலில் இருந்தபோது சித்திரவதைப்படுத்தப்பட்டதும் அல்லாமல் உடல் முழுவதும் பல காயங்களும் காணப்பட்டன. இவரது பாதங்களில் எரிகாயங்களும் தென்பட்டன. இவரை ஏறவைத்துவிட்டு இவரது கால் பெருவிரலில் மின்சார அதிர்ச்சி கொடுக்கப்பட்டுள்ளது. (மற்றொரு சான்று) அருளப்பு ஜீட் அருள்ராஜா 2ம் திகதி அக்டோபர் மாதம் 1993 இல் கைது செய்யப்பட்டார். இவர் சித்திரவதைப் படுத்தப்பட்டுள்ளதை சர்வதேச மன்னிப்புச் சபை கண்டறிந்துள்ளது. இவர் ஒழுங்காக அடித்து நொருக்கப்பட்டதும் அல்லாமல், இரு மேசைகளுக்கிடையில் இவரை மரக்கோலில் கட்டித் தூக்கிவிட்டு இவரின் ஆண்குறியை வாள் போன்ற அரத்தினால், வெட்டி வதைத்துள்ளனர்."

"இந்த மாதிரியாகத்தான் அண்மைக் காலத்தில், இராணுவம் சீருடை அணியாது தமிழ் மக்களைக் காரணமின்றி கைது செய்து உடுத்த உடுப்புடன் இலக்கமிடப்படாத வாகனங்களில் இரகசிய இடங்களுக்கு கடத்திச் சென்று வதைத்துவருகிறது என்பது இரத்தத்தை உறைய வைக்கும் கடந்த கால வரலாறாக உள்ளது. இவ்வாறு இனப்பாகுபாட்டுத் தன்மையுடன் பெரும் திரளான தமிழ் மக்களை குறித்த காரணத்துக்காக அல்லாமல் அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே இனரீதியான காரணத்துக்காக மட்டும் கைது செய்யும் சிறீலங்கா சர்வதேச சட்டத்தை மீறி தனது சர்வதேச கடமைப்பாட்டைப் புறக்கணிக்கிறது. இந்த இனக்குரோதத் தன்மையான தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக மட்டும் மேற்கொள்ளப்படும் சுற்றி வளைப்புக்களும் கைதாகுவோர் சித்திரவதை செய்யப்படுவதும், தமிழ் மக்களில் பலரை நடந்து செல்வதற்குக் கூட அஞ்ச வைக்கிறது."

"தண்டனை ஏதும் இல்லாது தொடரும் இச்செயல் நீண்ட காலமாக மனித உரிமைகளைப் பேணும் முயற்சிகளை அதிகரிப்பதற்கு பெரும் முட்டுக் கட்டையாக உள்ளது. சீருடை தரித்த பாதுகாப்புப் படைகளின் மனித உரிமை மீறல்கள் பற்றிய முன்னைய ஆண்டுகளில், தனிப்பட்ட கிரிமினல் குற்றச் செயற்பாடுகளில் சிறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்குக் கொடுத்துள்ள அத்தகைய குறிப்பிடத்தக்க பொறுப்புக்களை இப்போது நடைமுறைப்படுத்த வேண்டும்."

"மனித உரிமை மீறல்கள் பலவற்றில் பாதுகாப்புப் படைகள் ஈடுபட்டிருந்தபோதிலும் 1993 இல் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள் எவ்வித மனித உரிமை மீறல்களிலும் ஈடுபடவில்லை எனக் கூறுவது இத்தகைய குற்றச் செயல்களைச் செய்துவிட்டு தாம் தண்டனையில் இருந்து தப்பலாம் என மனோபாவத்தை பாதுகாப்புப் படைகளிடையே வளர்க்கும்" என அமெரிக்க அரச திணைக்கள 1993 ஆம் ஆண்டின் மனித உரிமைகளுக்கான உலக அவதானிப்புச் சபை விடுத்துள்ள பெப்ரவரி மாத அறிக்கையில் கூறியுள்ளது.

சர்வதேச தமிழர் ஒன்றியம் (அமைப்பு விதிகளின்படி பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், சுவிற்சலாந்து, இத்தாலி, டென்மார்க், நோர்வே, அவுஸ்திரேலியா, மலேசியா, தமிழ்நாடு, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் அங்கத்தவரைக் கொண்ட அமைப்பு) புகலிடம் தேடிய தமிழர்களைத் திருப்பி அனுப்புவது என்ற சில மேற்கத்திய அரசுகளின் முடிவு குறித்து அதிருப்தி அடைகிறது. நாங்கள் திருப்பி அனுப்பப்படும் இவ் அகதிகளின் வாழ்வு அபாயத்தை எதிர்நோக்குகிறது என துணிந்து கூறுகிறோம். நாம் இவ் அரசாங்கங்கள், சிறு அளவிலேனும் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது என முடிவு எடுத்திருப்பின், அதனையும் கூட மறுபரிசீலனை செய்யும்படியும் இவ் அரசாங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் அகதிகள் மரபாற்றுச் சட்டத்தின்படி எழுத்திலும் செயலிலும் அதனை மதித்து பேண வேண்டிய பொறுப்பு உண்டு என்பதையும் எடுத்துக் கூற விரும்புகின்றோம். ■

## இந்தியாவின் அணுகுமுறை மாறவேண்டும்

■ ஜே. என். டிக்சித்

இலங்கைப் பிரச்சினையில், இந்தியாவின் அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த் வேண்டும் என, இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவரும் இந்திய வெளியுறவுத்துறை செயலாளருமான ஜே. என். டிக்சித் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் உட்பட தமிழர்களுடனான தொடர்புகளை மீள ஸ்தாபித்து பேச்சுவார்த்தைக்கான பாதையை மீண்டும் கொண்டுவர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். பூநகரித் தோல்வியை அடுத்து, இலங்கையின் அரசியல் பிரமுகர்கள் இந்திய உதவியைப் பெறவேண்டும் என மீண்டும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் எனத் தெரிவித்த அவர், எதிர்காலத்தில் இந்தியா இதற்குள் இறங்காது என்பதை எவரும் துணிந்து கூறலாம் எனவும், இலங்கைப் பிரச்சினைக்கான எந்த ஒரு தீர்விலும் விடுதலைப் புலிகள் அமைப்புத்தான் மத்திய சக்தியாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தொடர்பான விமர்சனங்கள் எப்படியிருந்தாலும், அவர் தன்னை ஒரு தன்னாட்சிக்கான கெரில்லாப் படையின் தலைவர் என்ற நிலையிலிருந்து, ஒரு இன மக்களின் வீரத் தலைவராக தன்னை மாற்றிக் கொண்டுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்கள தேசத்தின் போர்வெறி

1993இல் குறுகிய கால இடைவெளியில், ஐந்து பெரிய இராணுவ வெற்றிகளைப் புலிப்படை ஈட்டிவிட்டது.

மண்கிண்டிமலை, கிளாலிக் கடல் கரும்புலித் தாக்குதல், 'டோரா' பீரங்கிப் படகு மூழ்கடிப்பு, புலோப்பளைச் சமர், பூநகரி என்று அடுத்தடுத்துச் சிங்களப்படை தோல்விகளையும், பேரிழப்புக்களையும் சந்தித்துவிட்டது.

இருந்தபோதிலும், 'வீழ்ந்தாலும் மீசையில் மண் படவில்லை' என்ற நிலைப்பாட்டுடனேயே சிங்கள அரசு காணப்படுகிறது.

பூநகரியில் சிங்களப் படைகள் தமது சகாக்களில் ஆயிரம் பேரைத் தொலைத்துவிட்டுக் கையறு நிலையில் நின்றபோதும் அரசு சார்புப் பத்திரிகையான சண்டே ஒப்சேவர் (14. 11. 1993), "பூநகரியில் படையினர் ஈட்டிய வெற்றி" (Troops Score Victory in Pooneryn) என்ற தலைப்பிட்டு, அதை தலையங்கச் செய்தியாக பிரசுரித்திருந்தது.

புலோப்பளைச் சமர் நடைபெற்றபொழுது யாழ்ப்பாணத்தில் தங்கி நின்ற சிங்களவர்களான அரச எதிர்ப்பு பத்திரிகையாளர் குழுவொன்று அரச பயங்கரவாதத்தைத் தம் கண்முன்னாலேயே தரிசித்துவிட்டுக் கொழும்பு சென்றபோதும் அங்கிருந்து, புலிகளைப் பயங்கரவாதிகள் போல் காட்டியும், போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியும் அவர்கள் மறைக்க முயன்றும் முடியாத அவர்களது பேரினவாத உணர்வை எழுத்தில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இனப் பிரச்சினை தொடர்பாக ஐ. தே. க அரசாங்கத்தின் அணுகுமுறைகளை அரச பயங்கரவாதத்தை விமர்சித்த அந்த அரச எதிப்புப் புத்திஜீவிகள், மறுபுறத்தில் சிங்கள-இராணுவ இயந்திரம் பலவீனமான நிலையில் உள்ளது. அதைப் பலப்படுத்தவேண்டும் என்று சொல்லாமல் சொல்லி, தங்களது உள்மனதை -தமிழின விரோத உணர்வை -இராணுவ சிந்தனையை திறந்து காட்டியுள்ளார்கள்.

பூநகரியில் சிங்களப் படை சந்தித்த பேரழிவின் பின், சிங்கள தேசம் தனது இராணுவ மனோபாவத்தை ஒரளவாவது மாற்றிக் கொள்ளும் என்றே யதார்த்தவாதிகள் எதிர்பார்த்தனர்.

ஆனால், தனது இராணுவ தோல்விகளுக்குப் பழிவாங்கும் முகமாக, தமிழர்களைக் குண்டுவீசிக் கொலைசெய்து, இனஅழிப்பிற்கான இராணுவ அணுகுமுறையை சிங்கள அரசு மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

"போர்ச் சபை நிறுவவேண்டும்", "போர்ச் சூழலில் நாடு வைக்கப்படவேண்டும்", "கட்டாய இராணுவ சேவை மூலம் சிங்களப் படைபலம் அதிகரிக்கப்படவேண்டும்", "வெளிநாட்டு உதவிகளைப் பெற்று தமிழர்களின் விடுதலைப் போரை ஒடுக்கவேண்டும்" என்றவாறாக சிங்கள தேசத்து ஆளும் வர்க்கம் வெறி கொண்டலைகிறது.

அதேவேளை, சமாதானத்திற்கு சார்பாக அரசியல் வலுவற்ற சில தனிக்குரல்கள் சிங்கள தேசத்திலிருந்து எழுந்தபோதும், சிங்கள மக்கள் மத்தியில் கருத்துக்களை உருவாக்கவல்ல சிங்கள தேசத்துப் பத்திரிகை உலகம் "போரைத் தீவிரமாக்க வேண்டும்", "இராணுவ இயந்திரத்தை வலுப்படுத்த வேண்டும்" என்றே ஓயாது அலறுகிறது.

சமாதானத்திற்காக எழும் குரல்கள் கூட, களநிலை சிங்கள இனத்திற்கு பாதகமாக செல்கின்றதே என்ற உண்மைநிலையை உணர்ந்து கொண்டதன் விளைவாக எழுகின்றதே தவிர, தமிழ் மக்களுக்கு அமைதியான வாழ்வு வேண்டுமென்றோ அல்லது பயங்கரமான போர் வாழ்விலிருந்து தமிழர்கள் விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கத்துடனோ எழவில்லை.

இராணுவத்தின் புதிய தளபதியும் போரைத் தீவிரமாக்க வேண்டும் என்றே சபதமெடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவியும், நாட்டைப் போர்ச் சூழலில் வைத்திருக்க வேண்டும் என்று ஆவேசமாகக் கூறியுள்ளார். சிங்கள தேசத்தின் ஜனாதிபதியும், தனது புத்தாண்டுச் செய்தியில் தனது பழைய பயங்கரவாதப் பல்லவியைப் பாடிவருகிறார். இடையில் அவரது வழமையான கோமாளித் தனத்தை வெளிப்படுத்தி, "புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால் பேச்சுக்குத் தயார்" என்றும் கூறுகிறார். ஆனால், அது பேச்சு வார்த்தைக்கு உகந்த சூழலை ஏற்படுத்தும் இராஜ தந்திரத்துக்குரிய அறிவிப்பல்ல; பேரினவாதத் திமிருடன் தமிழினத்தை நோக்கி அவர் விடுத்த ஒரு மிரட்டல் செய்திதான் அது.

இவ்வாறு அரசும் சரி, எதிர்க் கட்சியும் சரி, அரச தரப்பு புத்திஜீவிகளும் சரி, கருத்துக்களை உருவாக்கவல்ல பத்திரிகைகளும் சரி, சிங்களப் பிரமுகர்களும் சரி, அனைத்துப் பகுதியினரும் தமிழர்களின் சுதந்திர தாகத்துக்கு எதிராக வெறித்தனமான கருத்துக்களையும் அணுகுமுறைகளையுமே வெளிப்படுத்துகின்றனர்.

பூநகரியில் ஆயிரம் பேரைக் கொன்றுவிட்டு, அங்கிருந்து புலிகள் அள்ளிச் சென்றுள்ள ஆயுதங்களால் எதிர்காலத்தில் இன்னும் பாரிய சேதங்கள் சிங்களப் படைக்கு ஏற்படும் என்ற உண்மை தெரிந்திருந்தும், சிங்கள அரசு தொடர்ந்தும் போர் முரசு கொட்டியபடியுள்ளது.

இதுதான் சிங்கள தேசத்தின் தற்போதைய யதார்த்த நிலையாகும்.

ஆயினும் சிங்கள ஆளும் வர்க்கம் கொழும்பில் இருந்தபடி "போர்... போர்" என்று முழங்கிக் கொண்டிருந்தாலும் அதை நடைமுறைப்படுத்த வேண்டியது களத்திலுள்ள சிங்களப் படைகள்தான்.

ஆனால் சிறீலங்கா அரசின் கூலிப்பட்டாளமாகிய சிங்களப் படைகள் பூநகரித் தாக்குதலின் பின்னர், போரிடும் உறுதியை இழந்து குழம்பிய நிலையில் உள்ளனர்; இது சிங்கள தளபதிகளே ஏற்கும் ஒரு உண்மை.

எனவே, களத்திலுள்ள சிங்களப் படைகளுக்கு அடுத்தடுத்து பேரழிவுகளை ஏற்படுத்துவதன் மூலம், சிங்கள அரசின் போர் வெறிக்கு தக்க பதிலடி கொடுக்க முடியும்.

இதைச் சாதிப்பதாக இருந்தால், புலிகள் இயக்கத்தின் படைபலம் அதிகரிக்கப்பட வேண்டும்.

இளைஞர்களும், யுவதிகளும் புலிகளுடன் இணைந்து ஆட்பலத்தைப் பெருக்குவன் மூலம், தமிழரின் படைபலத்தைப் பலப்படுத்த வேண்டும்.

அதன் மூலம் மட்டுமே, போர் வெறி கொண்ட சிங்கள அரசிடமிருந்து தமிழினம் தற்பாதுகாப்பைத் தேடிக்கொள்ள முடியும். ■

நன்றி: 'விடுதலைப் புலிகள்'

# யுத்தத்தினால் பெறப்படும் சமாதானமே நிலையானது

## ■ பேரினவாத பத்திரிகையின் கூச்சல்

"யுத்தத்தின் இறுதித் தீர்வாக மட்டுமே சமாதானம் இருக்க வேண்டும். யுத்தத்தினால் சமாதானத்தைப் பேண முற்பட்டால் மட்டுமே நிலையான சமாதானமாக அது இருக்கும். யுத்தத்திற்கு நாட்டின் மற்றைய எல்லாவற்றையும் விட முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்" இவ்வாறு 'சிலுமின' பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும்: "யுத்தம் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அதனைச் சரிசெய்ய படையினருக்கு நவீன பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் அவர்களைப் பலப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

"புதிய செயல் திட்டங்கள் மற்றும் புதிய தந்திரோபாயங்கள் மூலம் யுத்தத்தை இவ்வருடமே முடித்து நாட்டு மக்களுக்கு வெற்றியைத் தேடித்தர புதிய தளபதி முயற்சிக்க வேண்டும்.

"யுத்தத்தில் வெற்றி தோல்விகள், பின்வாங்கல் ஒரு சாதாரண விடயம். எதிரி பலத்துடன் வரும்போது தற்காலிகமாகப் பின்வாங்க வேண்டும். இது தவிர்க்க முடியாதது. இதனை இராணுவத்தினருக்கு ஏற்பட்ட தோல்வி எனக்கூறி விமர்சிக்கக் கூடாது. இதனால் இராணுவத்தினர் உளரீதியாக பாதிக்கப்படுவர். இவ்வாறான செயல் எதிரியை மேலும் பலப்படுத்தும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ■

# பிரச்சினை உடன் தீர்க்காவிட்டால் பிரபாகரனிடம் இலங்கை பறிபோகும்

## ■ நெவில் பெர்னாண்டோ

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் இதேவேகத்தில் சென்றால், பிரபாகரன் முழு இலங்கையையும் பிடித்து விடுவார் என களுத்துறை மாவட்ட எம். பி. யான நெவில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசு தீர்வு காண எடுத்த வழி பிழையானது. அப்பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்கும் முயற்சிகள் இதேவேகத்தில் இருந்தால் பிரபாகரன் முழு இலங்கையையும் பிடித்து விடுவார்.

நாம் செய்யத் திட்டமிட்டிருந்த ஒரு செயலை இன்றைய ஜனாதிபதி செய்தது பாராட்டுக்குரியதாகும். அதுதான் தொண்டமான் சொல்வதற்கெல்லாம் சம்மதம் தெரிவிக்காமல், தொண்டமானைத் தலைகுனிய செய்ததாகும். இது எம்மால் செய்யப்பட வேண்டியதாக இருந்தது. இச்செயலைச் செய்த பெருமை ஜனாதிபதி டி. பி. விஜேயதுங்காவையே சாரும் என்றார். ■

# மாகாண சபைகளை கைப்பற்ற ஐ. தே. க. முயற்சி

## ■ 'சந்தேசிய' தெரிவிப்பு

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் தென் பகுதியின் சகல மாகாண சபைகளிலும் தனது ஆட்சியைக் கொண்டு வர ஐக்கிய தேசியக் கட்சி உறுதி பூண்டுள்ளது என பி. பி. சியின் சிங்கள சேவையாகிய சந்தேசிய தனது ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையிலேயே தென் மாகாண சபை கலைக்கப்பட்டது. மேலும் வட மேல் மாகாண முதலமைச்சர் ஜீ. எம். - பிரேமச்சந்திராவை தமது பக்கம் ஈர்த்துள்ளதன் மூலம் அம்மாகாண சபையைக் கைப்பற்ற முனைகின்றது. அடுத்த நடவடிக்கையாக மேல் மாகாண சபையில் முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர அது முயற்சிக்கிறது என அது மேலும் தெரிவித்தது. ■

# தலைவர் பிரபாகரனின் பணிப்பில் இரு யுத்தக் கைதிகள் விடுவிப்பு

## ■ கொழும்பு ஆயரின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து நல்லெண்ண நடவடிக்கை

கொழும்பு அதிமேற்றிராணியார் அதி. வண. நிக்கலஸ் பெர்னாண்டோ விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் நல்லெண்ண நோக்கத்துடன் இரு யுத்தக் கைதிகளை விடுவித்தார். கத்தோலிக்க மதபீடமும், ஏனைய கிறிஸ்தவ அமைப்புக்களும் எடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் முகமாகவே இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இரு யுத்தக் கைதிகளையும் விடுதலை செய்யும் நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது, கத்தோலிக்க திருச்சபை அதியுயர் மேற்றிராணியாரின் விசேட தூதுவர் அருட்திரு. அல்பிரட் அலெக்சாண்டர் அவர்களிடம் இவ்யுத்தக் கைதிகள் இருவரையும் தமிழீழ அரசியல் துறையைச் சேர்ந்த திரு. தங்கன் கையளித்தார்.

அதி. வண மார்க்கஸ் பெர்னாண்டோ அவர்களின் கோரிக்கை அடங்கிய கடிதத்தை இலங்கை கத்தோலிக்க துறவிகள் சபைத் தலைவர் அருட்திரு அல்பிரட் அலெக்சாண்டர் அவர்கள் விடுதலைப் புலிகளிடம் கையளித்தார்.

விடுவிக்கப்பட்ட இருவரும் திருமணமானவர்களாகும். தெல்தெனியாவைச் சேர்ந்த திலகரத்ன பண்டார (வயது 39), தம்புல்லுவைச் சேர்ந்த சந்திரசேகர (வயது 36) ஆகிய இருவருமே விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதிகளாவர். 1990 ஆம் ஆண்டு மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைத்து விடுதலைப் புலிகளால் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் விடுவிக்கப்பட்ட நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், கத்தோலிக்க மதகுரு சந்திரகாந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். ■

# மன்னார் மாவட்டத்தில் 35 பாடசாலைகள் இராணுவத்தால் சேதம்

"மன்னார் மாவட்டத்தில் 35 இற்கும் அதிகமான பாடசாலைகள் இராணுவத்தால் சேதமாக்கப்பட்டுள்ளன. ஆய்வு கூடமும் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களுடைய கல்வி நிலையில் தேக்கம் ஏற்பட்டுள்ளது".

இவ்வாறு மன்னார் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் இனியவன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாகத் தெரிவித்த அவர், விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை அதிகமாக உள்ளதெனக் கூறினார். விஞ்ஞான பாடத்தைப் படிக்கும் மாணவர்களுக்கு ஆய்வுகூட வசதிகள் எதுவும் இல்லை. அடம்பனில் இருந்த ஒரேயொரு ஆய்வுகூடமும் இராணுவத்தால் சேதமாக்கப்பட்டுள்ளது. முருங்கன், ஆண்டான்குளம், அடம்பன் வித்தியாலயங்கள் முற்றாகச் சேதப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு மன்னார் மாவட்டத்தில் கல்வி வளர்ச்சிக் கழகங்களை உருவாக்கிச் செயற்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். ■

# யாழ்.செல்லும் இராணுவத்தை தமிழர் எவரும் வரவேற்கார்

எமது இராணுவம் யாழ்ப்பாணத்திற்கு அணிவகுத்துச் செல்லுமாயின் எந்தவொரு தமிழ் மகனும் வரவேற்க மாட்டான் என்று முன்னாள் பிரிகேடியர் ரஞ்சன் டி சில்வா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது, ஆட்சியாளர் இராணுவ சிந்தனையை விடுத்து தேசிய நலனில் அக்கறை கொள்ளட்டும். இராணுவ நடவடிக்கைகளை ஒரு அளவோடு வைத்துக் கொள்ளட்டும் என்று கூறினார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமராடும் முனையில் ஓர் உயிர்காக்கும் பணி

## ★ ஒரு மருத்துவப் போராளியின் முதல் அனுபவம்

**10-11-1993** அன்று நடுநிசி இருளுடன் கடுமையான குளிர் காற்று உடலை ஊடுருவிச் செல்வதை உணர்கிறேன். பாரம் கூடிய நீர்த்துளிகள் என்மேல் விழுந்து தெறிக்கின்றன. எனது பாதணிகள் நிலத்தில் புதைவதை உணர்கிறேன். முன்னால் வழிகாட்டிச் செல்பவரின் உதவியும் வேகமும் எனக்கும் கைகொடுக்கிறது. இது ஒரு தென்னந்தோப்பு என்பதைப் புரிய முடிகிறது.

திடீரென என்முன்னால் சாக்குப் படங்கு ஒன்று தொங்குவதைத் தொட்டு தெரிந்து கொண்டேன். அதை விலக்கிச் செல்ல இன்னுமொரு சாக்குப் படங்கு தடைப்பட்டது. அதையும் விலக்கிய போது கண்ணைப் பறிக்கும் மின்னொளி ஊட்டிய ஒரு கொட்டகையினுள் நான் நின்றேன். இவ்வொளியில் ஒரு கீற்றுக் கூட வெளியில் தெரியவில்லையே! ஆம் அப்படி ஒரு ஒளிக்கீற்று வெளியில் தெரியுமானால் நாம் அங்கிருப்பது சாத்தியமாகாது.

எனக்கு இது முதல் அனுபவம்.

வெள்ளாடை அணிந்தவண்ணம் பிரதான மருத்துவர்களும் வேறு சிலரும் நோயாளியைச் சுற்றி நின்று சிகிச்சை செய்வதைத் தான் தெரிந்திருந்தேன். 'அல்பா' கதிரால் அச் சத்திரசிகிச்சை அறை தொற்று நீக்கப்பட்டிருக்கும். எதுவித வேறுபாடு, இடையூறுகளும் இருக்காது. பணி நிதானமாக நடைபெறும். ஆனால் இங்கு சுற்றிவர மண் மூடைகள் அடுக்கப்பட்டுள்ளன.

ஆயினும் ஒரு பக்கம் மேசை ஒன்றில் மருத்துவப் பொருட்கள் சீராக வைக்கப்பட்டுள்ளன. தரையில் விரித்திருக்கும் பாய்களைக் கொண்டு, இவ்விடம் ஒரே தடவையில் நாற்பது பேரைக் கவனிக்கக் கூடியதாக இருக்கும் என்பதை விளங்கிக் கொண்டேன்.

அங்கு நிற்கும் ஒவ்வொருவரினதும் முகத்தைப் பார்க்கிறேன். எல்லோரிடத்திலும் ஒரு அமைதி நிலவுகிறது. ஆனால் அவர்களின் கண்கள் எதையோ வினாவுவதுபோல் இருக்கிறது. எத்தனையோ களங்களின் அனுபவத்தைப் பெற்ற இவர்கள் எதையும் கதைக்காதது எனக்கு வியப்பளிக்கவில்லை.

ஏன்எனில் இவர்கள் செயல் வீரர்கள்.
சாமம் இருள் வடிவில் கரைகிறது.

எல்லோரும் பரபரப்பாகிறார்கள்.

ஏதோவொன்றை அவர்கள் தெரிந்துவிட்டார்கள். நானும் அவர்களுடன் இணைகிறேன். துப்பாக்கிச் சத்தங்களும் பாரிய குண்டு வெடிப்புச் சத்தங்களும் தூரத்தில் கேட்கின்றன. "சண்டை தொடங்கிவிட்டது..... சண்டை தொடங்கிவிட்டது...." எல்லோர் வாய்களும் முணுமுணுக்கின்றன.

வாகனம் நாம் இருக்கும் கொட்டிலின் முன்வந்து பிரேக் அடித்து நிற்கிறது. "விலகு ... விலகு ...., என்ர அம்மா..... ஐயோ என்ர அம்மா.." எனக் கேட்கும் குரல்கள் என்னை ஒரு கணம் உலுப்பியது. முன்னிருந்த சாக்குப் படங்கை விலக்கி காயப்பட்ட போராளிகளைத் தூக்கிக் கொண்டு உள்ளே விரைந்து வந்து கிடத்துகிறார்கள். அவர்கள் வேதனையால் முனகும் சத்தமும், மற்றவர்கள் இயங்கும் போது ஏற்படும் காலடிச் சத்தமும் அவ்விடத்தின் சூழலை முற்றாக மாற்றிவிடுகிறது. ஒவ்வொரு போராளியாக பிரதான மருத்துவர் வேகமாகக் கவனிக்கிறார். நாடித்துடிப்பையும் காயங்களின் தன்மையையும் கவனித்து, யாருக்கு முதலில் அவசர சிகிச்சை செய்ய வேண்டும் என முடிவெடுத்து செயற்படத் தொடங்குகிறார். எல்லோரும் இயங்குகிறார்கள்.

காயக்காரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இட நெருக்கடி. ஆயினும் எவரும் நிதானம் இழந்ததாயில்லை. காயமடைந்த போராளிகளின் வேதனைக் கதறலைக் கேட்டும் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் பணி தொடர்கிறது.

பிரதான மருத்துவர் என்னை அழைக்கிறார். மயக்க நிலையிலிருக்கும் போராளி ஒருவரைக் காட்டி செயற்கை சுவாசமுறைகளைச் செய்யும்படி பணிக்கிறார். நான் முழங்காலில் இருந்தபடி கைகளை நெஞ்சில் வைத்து அழுத்தம் கொடுக்கிறேன். இன்னொரு போராளியும் செயற்கைச் சுவாசம் கொடுக்கிறார்.
அப்பொழுது எனது பாதத்தில் யாரோ தட்டுவது போல் உணர்ந்து திரும்புகிறேன். "அண்ணா தண்ணி தாங்கோ... ஐயோ அண்ணா தண்ணி தாங்கோ...." இன்னுமொரு காயமடைந்த போராளியின் குரல் என் இதயத்தைப் பிழிகிறது.

ஆனால் 'ஒப்பரேசன் செய்யிறதெண்டால் தண்ணீர் கொடுக்கக் கூடாது' என்ற கட்டளை என்னைத் தடுக்கிறது. ஏனோ என் மனம் அந்தரிக்கிறது.

எனது பாதத்தை தடவியபடியே அந்தப் போராளி தண்ணீர் கேட்கிறான். இன்னொரு போராளி இதயமும் இயங்காமல் சுவாசமும் இல்லாமல் கிடக்கிறான்.

உயிர்... உயிர்.... எவ்வளவு உன்னதமானது! பிரதான மருத்துவர் அப்போராளியின் கண் இமையை விரித்து லைற் அடித்துப் பார்த்துவிட்டு தலையாட்டுகிறார். "பிறெயின் டெத்தாயிட்டுது" எனக் கூறி விலகுகிறார். ஏதோ நினைவு வந்தாற்போல் பின்னால் திரும்பி, தண்ணீர் கேட்ட போராளியைப் பார்க்கிறேன். இன்னுமொரு மருத்துவர் அவனது நாடித்துடிப்பைச் சோதித்துவிட்டு கண்ணிமையையும் விரித்துப் பார்த்துவிட்டு விலகுகிறார்.

ஐயோ.... என்று கத்த வேண்டும் போலிருந்தது.

அப்போது யாரோ எனது முதுகில் தட்டிக் கொடுப்பதை உணர்ந்து திரும்பினேன். அங்கு நின்ற பொறுப்பாளர் என்னைப் பார்த்து,

"ஒன்றுக்கும் கலங்காதேயும். நாம் கடக்க வேண்டிய பாதை இதைவிடக் கடுமையானது... உம் கடமையைத் தொடரும்..." எனப் பணிப்பதுபோல உணர்கிறேன். மனச்சுமையிலிருந்து விடுபட்டு, இன்னொரு காயமடைந்த போராளிக்குச் சிகிச்சை செய்யத் தொடங்குகிறேன்.

மரணத்தைக் கண்டு பதற்றப்படுவதல்ல.... அதன் பிடியிலிருந்து மனிதர்களை மீட்பது தானே எங்கள் தளராத பணி! அதில் ஆழ்கிறேன். ■

■ **தூயவன்**

---

### சுதந்திரத்தைத் தேடி...

நேரங்களில் அதனுடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பாள். சண்டைக் குழுவுக்குப் பொறுப்பாக இருந்தவள், காட்டிலுள்ள அனைத்துப் பெண் போராளிகட்கும் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாள். அந்த வேளையில் தான் கள்ளிச்சைப் பகுதியில் இருந்து காவல் உலாவரும் இராணுவ அணி மீது தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இதற்கிடையில் அவள் ஆசையாக வளர்த்த கிளி இறந்து விட்டது. அது இவளுக்கு மிகவும் வேதனையை உண்டாக்கினாலும் அதனை வெளிக்காட்டாதவாறு தனது பணிகளைச் செய்த வண்ணம் இருந்தாள் மூன்று மணிக்குப் பயணம் ஆரம்பமானது. பதினான்காம் திகதி நிலை எடுக்கப்பட்டது. சிறிது தூரத்தில் சமையல் வேலை நடைபெற இரவு உணவு உண்ட பின்னர் பதினைந்தாம் திகதி மதியம் இரண்டு மணிவரை எதிர்பார்த்த எதிரியின் அணிவராததையடுத்து முன்னைய இடத்துக்கு மீள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தனது உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதை அறிந்து கொண்ட வளர்மதி, அதனைப் பெரிதுபடுத்தாமல் புறப்பட ஆயத்தமானாள். குழுவின் தலைவியல்லவா அவள்! அவள் சோர்ந்தால் பிள்ளைகளை யார் வழிநடத்துவது? அவள் முன்னே நடக்க, பின்னே பிள்ளைகளும் ஒற்றை வரிசையாகத் தொடர்ந்தனர். அவர்களுக்கு முன்னே ஆண் போராளிகளும் அதே போலச் சென்று கொண்டிருந்தனர்.

திடீரெனத் துப்பாக்கி வேட்டொலிகள். அனைவரும் ஒருகணம் நின்று தமது நிலைகளை சரி செய்து கொண்டனர். ஒலிக்குரிய காரணம் ஒரு கரடி என்பதை அறிந்ததும் அதனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எல்லோருக்கும் ஏழ, "அக்கோ கெரடி" என்றவாறு மிகுதியை முடிக்காது நின்ற பிள்ளைகளின் மனதை அறிந்து, "செரி போய்ப் பார்த்தித்து வாங்க. நான் இதில இரிக்கன்" என்றவாறு ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டாள்.

என்னதான் மறைத்திருந்தாலும் உடல் நிலையை அவளின் முகம் தெளிவாக எடுத்துக் காட்டியதை அவதானித்த மருத்துவப் பிரிவு பெண்போராளி, "அக்கோ வெருத்தமாக்கா"? எனக் கேட்கவும் "காய்ச்சல்தான், கெஸ்ரம் இல்ல" என்று மொட்டையாக பதிலளித்தாள். பனடோல் ஒன்று கொடுக்கப்பட்டது. கரடி பார்த்துத் திரும்பினர் பிள்ளைகள். பயணம் தொடர்ந்தது. பதினைந்தாம் திகதி இரவு ஒரு மலை அடிவாரத்தில் உணவருந்தி ஓய்வெடுத்துக் கொள்கின்றனர். சிறிதளவு உணவு உண்ட பின்னர் வளர்மதியும் உறங்கினாள். மறுநாள் காலை உணவை முடித்த பின்னர் பயணம் தொடர்ந்தது. பிள்ளைகளுக்கு முன்னே வழிகாட்டி நடந்த வளர்மதி, சிறிது சிறிதாகப் பின்தங்கி, கடைசியாக வந்து கொண்டிருந்தாள். அப்போதுதான் அவள், "எனக்கு இயலாமக் கிடக்குது. தெலை எல்லாம் கிறுகுது" எனக் கூறினாள். சில மணித்தியாலங்களுக்கு அனைவருக்கும் ஓய்வு வழங்கப்பட்டது. ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து விட்டாள் வளர்மதி.

வாந்தி எடுத்து களைப்படைந்ததால் 'சேலைன்' ஏற்றப்பட்டது. மீண்டும் ஒன்றரை மைல் நடைப் பயணம் அவளால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. அவளின் அனுமதியின்றியே பிள்ளைகள் அவளை 'ஸ்ரெச்சரில்' ஏற்றினர். அவளை மாறி மாறிச் சுமந்த வண்ணம் பிள்ளைகள் நடந்தனர். இரவு ஒரு இடத்தில் தங்கினர். வேறு இடத்துக்கு வருமாறு அழைப்புவர மீண்டும் பயணம் ஆரம்பமானது. வளர்மதி 'ஸ்ரெச்சரில்' ஆடாமல் அசையாமல் கிடந்தாள். களைப்பு மிகுந்ததால் 'ஜீவனி' கொடுக்கப்பட்டது. அவளது உதடுகள் நிறையப் பேசத் துடித்தன. ஆனால் அவை தொண்டையினுள்ளேயே சிக்குண்டு போயின. "சாயம் தாங்க"! இறுதியாக மிகவும் சிரமப்பட்டு வந்த சொற்கள் தான் அவை. அதைக் குடித்த சில நிமிடங்களில் எல்லோரிடமிருந்தும் அவள் விடை பெற்றுக் கொண்டாள்.

வளர்மதி! அவள் சந்தித்த களங்கள் ஏராளம். கள்ளிச்சை, வாகனேரி, சிங்கபுர, கொழும்பு வீதி, மண்முனை, மகிழடித்தீவு, உன்னிச்சை, பாலையடிவெட்டை, சித்தாண்டி பொலிஸ் நிலையம் எனப் பல களங்கள். ஒவ்வொன்றிலுமே பலமாகச் செயற்பட்டு, எதிரிக்குத் தக்க பதிலடி கொடுத்தவள். ஒரு வேங்கை விழ பல வேங்கை எழுவர் என்பதற்கு அவள் நல்ல உதாரணம் அவள்விட்ட பணியைத் தொடரவெனப் பல பெண்புலிகள் தென்தமிழீழத்திலிருந்து எழுந்து தயாராகி வருகின்றார்கள்.
நிலா, கல்யாணி, வளர்மதி, விவேகா, நிரந்தரி, என பல உடல்கள் அக்கானகத்திடையே விதைக்கப்பட்டன. ஆயினும் பணி தொடர்கின்றது. சோகங்களையே சொந்தமாக்கியபடி, இலட்சியம் ஒன்றை வென்றெடுப்பதற்காகப் பயணம் ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது. ■

---

### நிகழ்வும் நினைவும்...

அது தென்னிலங்கையில் பிரச்சினைகளை உருவாக்கும்; எனவே தீவு பூராகவும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் மாகாண சபையினை உருவாக்கலாம்" என்ற ஜே. ஆரின் கருத்துக்கு அமைய இம் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

அதுவும் இலகுவில் இது நடந்துவிடவில்லை. இம் மாகாண சபை உருவாக்கத்திற்கென அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இத் திருத்தச் சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றத்துக்கு மனுத் தாக்கல் செய்யப்பட்டு, 5:4 எனும் விகிதத்தில் சாதகமான தீர்ப்பு வர இம் மாகாண சபைகள் கருக்கொண்டன.

இம் மாகாண சபைகள் உருப்படியான அதிகாரம் எதனையும் தம்மகத்தே கொண்டிருக்கவில்லை. 'மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியவன் கதை போல்', இம் மாகாண சபைகளை நம்பி அரசியல் நடாத்திய தமிழ்க் குழுக்கள் இன்று அந்தரித்து நிற்கின்றன; தமது துரோகத்தனங்களுக்குக் காரணங்கள் தேடித் திரிகின்றன.

எனவே, இம் மாகாண சபைகள், தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு 'தீர்வு' காண்பதற்காக உருவாக்கப்பட்ட 'அதிகாரப் பரவலாக்கல்' அமைப்பான போதும், அதன் அதிகாரம் எத்தகையது என்பது பலரும் அறிந்த ஒன்றே. அது எமக்கு முக்கியமல்ல. ஆனால் எந்த தமிழீழ பிரச்சினைக்காக இந்த மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதோ, அந்த தமிழீழப் பிரதேசங்களில் இம் மாகாண சபைக்கான தேர்தல் நடாத்தப்படவில்லை. அதனை நடாத்தக் கூடிய நிலையும் இல்லை. ஆனால் அந்த மாகாண சபை சிறீலங்கா அரசியலில் முக்கியமான ஒன்றாக மாறிவிட்டது.

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு இந்த மாகாண சபையின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என இந்திய - இலங்கை ஆளும் வர்க்கங்கள் கனவு காணலாம். ஆனால், அது நிறைவேறப் போவதில்லை. அதே சமயம் சிறீலங்காவின் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் உருவாக்கப்படும் எந்தத் தீர்வுத் திட்டமும் நாடு தழுவிய ரீதியில் அதிகார பரவலாக்கலையே நாடி நிற்கும். பௌத்த சிங்களப் பேரினவாதம் அதிகாரங்களைத் தன்னகத்தே குவித்து வைத்திருக்கின்ற இன்றைய சூழலில், அரச நிர்வாக இயந்திரம் முழுமையாகச் சிங்களமயப்பட்டுள்ள இன்றைய சூழலில், வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 'அதிகாரம்' குறித்த பிரச்சினை மக்களின் பிரச்சினையாக இல்லாமல் அரசியல்வாதிகளின் பிரச்சினையாகவே இருக்கும். இதனால், இப்படி உருவாக்கப்படும் தீர்வுத் திட்டமும் எத்தகைய அதிகாரத்தினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை வடக்கு, கிழக்குக்கு எத்தகைய அதிகாரங்கள் போகக் கூடாது என்ற அடிப்படையிலேயே முடிவு செய்யப்படும்.

இதனை இன்னொரு வகையில் கூறின், இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பு தமிழீழ மக்களுக்கு இத்தகைய உருப்படியான அதிகாரத்தைக் கொண்ட தீர்வுத் திட்டத்தினை அனுமதிக்கப் போவதில்லை. இதனால் இன்றைய மாகாண சபை போல, நாளை ஒரு மாநில சபை வந்தால்கூட, அதிகாரங்கள் அற்ற ஒரு வெறும் பெயர் மாற்றமாகவே அது இருக்கும். எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதனை விட சிறீலங்கா அரசியல்வாதிகளிடையேயான பலப் பரீட்சைக்கான களமாகவே அது அமையும் -தற்போதைய தென் மாகாண சபைத் தேர்தலைப் போல.

எனவே, போராட்ட வளர்ச்சிப் போக்கில், யுத்த நிறுத்தம்கூட வரலாம், பேச்சுவார்த்தைகள் கூட நடக்கலாம் -ஆனால் உருப்படியான தீர்வுத் திட்டம் வருமா? எனது கணிப்பில் வராது. சிறீலங்காவின் ஒற்றை ஆட்சி அமைப்பு இலகுவில் அதனை அனுமதிக்காது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ தேசவழமைச் சட்டம்

ஏகாதிபத்திய நாடுகள் பிற நாடுகளை ஆக்கிரமித்து தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்து அவர்களை ஆளுவது அந்நாடுகளிலுள்ள உயர் குழாத்தினரைக் கொண்டுதான். புரட்சியையும், எழுச்சியையும் தடை செய்யும் நோக்கத்துடன் ஆக்கிரமிப்பாளர்கள் இவ்வுயர் குழாத்தினர் மூலம், அந்நாடுகளின் பழக்க வழக்க அடிப்படையிலான சட்டங்களை வைத்து நீதிபரிபாலனம் செய்வார்கள். உள்ளூர் உயர் குழாத்தினரும் தாங்கள் முன்னர் அனுபவித்து வந்த உரிமைகளும், சலுகைகளும் தொடர்ந்து இருக்கும் என்ற காரணத்தினால் உற்சாகத்துடன் அவ்விதம் செய்வதற்கு தமது ஒத்துழைப்பை வழங்குவார்கள். அந்நாட்டு சுதேசிகள் கூட தாம் முன்னரே பழக்கப்பட்ட பழக்க வழக்க சட்ட திட்டத்தின் கீழ் ஆளப்படுவதை ஆட்சேபிப்பதில்லை. இவ்விதம் தான் இலங்கையிலும் நடந்தது.

இலங்கையின் தற்போதைய வடக்கு கிழக்குப் பகுதிகளை உள்ளடக்கிய தமிழர்களின் தேசிய அரசின் கீழ் பல பிராந்திய பழக்க வழக்கங்களும் சட்டங்களும் இருந்தன. அவற்றில் ஒன்றுதான் தேசவழமைச் சட்டம்.

தேசவழமை என்பது இரு சொற்களின் கூட்டு. தேசம் என்பது நாட்டைக் குறிக்கும். வழமை என்பது பழக்க வழக்கங்களைக் குறிக்கும். இந்த பழக்க வழக்கங்களின் அடிப்படையிலான தேசவழமைச் சட்டம் வட தமிழீழத்தில் வாழும் தமிழர்களைக் கட்டுப்படுத்துவதாகும். அப்பிரதேசத்திலுள்ள நிலங்களுக்கும் பொருத்தமுடையதாகும்.

## வரலாறு

1704 இல் ஒல்லாந்த தேசாதிபதியான சைமன்ஸ் என்பவர் கிளாஸ் ஐசைக்ஸ் என்பவரிடம் யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்களின் பழக்க வழக்கங்கள் பற்றி விசாரித்து, அப்போது இருந்த நிலையைத் கோவைப்படுத்துமாறு உத்தரவு இட்டார். 1707 இல் இந்த ஐசைக்ஸ் என்பவர் டச்சு மொழியில் தனது அறிக்கையை வண்டார்டுயின் என்ற தளபதிக்கு சமர்ப்பித்தார். இத்தளபதி இவ்வறிக்கையைத் தமிழில் மொழிபெயர்ப்பித்தார். இந்த மொழிபெயர்ப்பை அவர் பின்னர் 12 'விவேகமுள்ள' முதலியார்களிடம் படித்து தேவையாயின் திருத்தும்படி கொடுத்தார். இம் முதலியார்கள் மொழிபெயர்ப்பு சரியெனக் கூறியதன் பெயரில் 1708 இல் இம்மொழிபெயர்ப்பு தேசாதிபதியால் சட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையிலுள்ள ஒல்லாந்தரின் பிரதேசங்கள் ஆங்கிலேயருக்கு கைமாறியபோது, 1806 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் மூலம் தேசவழமை என்று கூறப்படும் பழக்க வழக்கங்கள் முற்று முழுதாக நடைமுறையில் உள்ளதென்றும், யாழ்ப்பாணம் மாகாணத்தில் வதியும் மலபார் வாசிகளுக்கு இடையேயான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் மலபார் ஒருவர் எதிராளியாக இருக்கும் வழக்குகளில் தீர்ப்பு வழங்குவதற்கும் தேசவழமைச் சட்டம் உரித்துடையது எனப் பிரகடனப்படுத்தப்பட்டது.

## புதிய சட்டம்

பழக்க வழக்கங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்ட பின்னரும்கூட, தேசவழமைச் சட்டம் மாற்றமடையாமல் இருந்தது. உலகம் மாறிவிட்டது. யாழ்ப்பாணமும் மாறிவிட்டது. முன்னைய பழக்க வழக்கங்கள் இன்றைய நடைமுறையில் இல்லை. தத்தெடுப்பது, சிறைக்குடிகளை ஈடுவைப்பது போன்ற பழைய பழக்க வழக்கங்கள் மறைந்துவிட்டன. தேசவழமையின் ஒரு அங்கமான அடிமைக் குடிமை முறையும் இல்லாமை செய்யப்பட்டுள்ளது. தேச வழமையின் பெரும் அளவிலான பகுதிகள் செல்லாதவையாகவும் வலுவிழந்தவையாகவும் ஆகிவிட்டன. இவ்விதம் இருந்தும் கூட பல விடயங்கள் இன்னும் மாற்றப்பட வேண்டியவையாக உள்ளன. சமூக - அரசியல், பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களும், முன்னேற்றங்களும் தேச வழமைச் சட்டத்தின் பலவற்றை இல்லாமல் செய்வதற்கும், திருத்தம் செய்வதற்கும் அல்லது சேர்த்துக் கொள்வதற்குமான அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன. இதைத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகத்துறையினர் இப்போது செய்ய எத்தனித்து தமிழீழத் தேசவழமைச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். இச்சட்டம் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் ஆணையுடன் 1993 ஆம் ஆண்டின் மூன்றாம் இலக்க சட்டம் என்று பிரகடனப்படுத்தப்பட்டு 01. 12. 1993 இல் இருந்து, அமுலுக்கு வந்துள்ளது.

இப்புதிய தமிழீழ தேசவழமைச் சட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சில அம்சங்களை ஆராய்வது நல்லது. திரு. பிரபாகரனால் உருவாக்கப்பட்ட இச்சட்டம் புரட்சிகரமானதாகவும், வடக்கிலுள்ள குடும்பப் பிரச்சினைகள் பலவற்றை தீர்த்து வைக்கக் கூடியதாகவும் உள்ளது.

## முதுசம்

இளம்பெண்கள் நோய்வாய்ப்பட்ட ஆண்களுக்கு விவாகம் செய்து வைக்கப்படுவதை நாம் காண்கிறோம். அதற்கு காரணம் அவ் ஆண்கள் பணம் படைத்த, ஆதனங்களுக்கு உரித்தாளராக இருப்பதினாலேயேதான். சீதனம் கொடுப்பதற்கு வசதியற்ற ஒரு 18 வயது பெண்பிள்ளை ஒரு உடல்நலம் குறைந்த 25 வயது கொண்ட ஆணுக்கு விவாகம் செய்து வைக்கப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம். யாழ்ப்பாணச் சமூகத்திலுள்ள பெண்களுக்கு இவ்விடயத்தில் தன்னிச்சையாக நடப்பதற்கு முடியாது. பெற்றோர் தமது வறுமையின் காரணமாக இத்திருமணத்திற்குச் சம்மதிக்கிறார்கள். பெண்ணும் நல்ல கீழ்ப்படிவான பிள்ளை என்ற முறையில், இத்திருமணத்திற்கு சம்மதித்தே ஆக வேண்டும். அதன் பின் தம்பதிகள் ஏதோ விதத்தில் ஒன்றாக வாழ்கிறார்கள் என்றும் வைத்துக் கொள்வோம். ஏற்கனவே உடல்நலம் குறைவாக இருந்த கணவன் ஏழு வருட திருமண வாழ்வின் பின் இறக்கின்றார் என்றும் வைத்துக் கொள்வோம். அவர் இறந்து முப்பத்தோராம் நாள் அந்தியேட்டி முடிவடைந்தவுடன் இப்போது 25 வயதாகிய நல்ல உடல் நிலையிலுள்ள அப்பெண் கணவனின் வீட்டிலிருந்து அவரது பெற்றோரால் அல்லது சகோர சகோதரியால் விரட்டப்படுகிறாள். காரணம் ஆணின் முதுசச் சொத்து அவர் பிள்ளைகள் இல்லாது இறந்தால் அவரது பெற்றோருக்கே சென்றடையும். இவ் அவலப் பெண்ணின் பெற்றோர் இக்கால கட்டத்தில் இறந்திருக்கலாம். அல்லது மேலும் கடன்பளுக்களால் அவளைப் பராமரிக்கக் கூடிய நிலையில் இல்லாதிருப்பர். அதனால் அப்பெண் நெருக்கடிக்கு உள்ளாக்கலாம்.

## சீதனம்

இப்போது இதன் மறுபக்கத்தைத் திருப்பிப் பார்ப்போம். ஒரு உடல் வலுவுள்ள ஆண், அதாவது ஒரு குடும்பத்தை வைத்து பராமரிக்கக் கூடிய ஆண், வீடு வளவைச் சீதனமாகக் கொண்டு வரும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் இயல்பான முறையில் வாழ்க்கையை நடாத்தி தனது மனைவியையும் நன்றாக பராமரித்து அவர்கள் வசிக்கும் மனைவியின் வீட்டுக்குத் தேவையான திருத்தங்களைச் செய்தும், அவ்வீடுள்ள காணிக்கும் திருத்தங்களைச்

**ச.தியாகராசா**

செய்தும் வருகின்றார் என்றும் வைத்துக் கொள்வோம். துரதிர்ஸ்டவசமாக இத்தம்பதிகளுக்கு பிள்ளைகள் இல்லை. முப்பது வருட கால இல்வாழ்க்கையின் பின் மனைவி இறக்கிறாள். இந்தச் சந்தர்ப்பத்தில் என்ன நடக்கிறது? மனைவியின் பெற்றோர் உயிருடன் இருந்தால் அல்லது மனைவியின் வாரிசுகள் கடமை உணர்வுள்ள அக்கணவனை அவ்வீட்டிலிருந்து துரத்துவார்கள். காரணம் சீதன ஆதனத்தின் மீது கணவனுக்கு உரித்து இல்லாமையேயாகும். வீடும் வளவும் தேசவழமைச் சட்டத்தின் கீழ் மனைவியின் வாரிசுகளுக்கு சென்றடைகிறது. மனைவியின் சீதன ஆதனத்துக்கு கணவன் ஒருபோதும் வாரிசாக முடியாது. இந்த நியாயமற்ற பிழையான நிலைப்பாடு தமிழீழ தேசவழமைச் சட்டக் கோவையின் புதிய பதின் மூன்றாம் சரத்தினால் நிவர்த்தி செய்யப்படுகின்றது. திருமணம் வலுவிலுள்ள போது கணவனோ மனைவியோ பிள்ளைகள் இல்லாது இறந்தால் எஞ்சியிருப்பவர்கள் இரண்டாம் தரம் வேறு விவாகம் செய்யாவிடின் இறந்த தாரத்தின் ஆதனங்களில் காற்பங்கிற்கு உரித்துடையவர்கள் ஆவர். எமது சமூகத்தில் நிலவும் இச்சீர்கேட்டிற்கு இது காலத்திற்கு ஏற்ப செய்யப்பட்ட ஒரு பரிகாரமாகும்.

## பெண்சுதந்திரம்

தமிழ் சமூகத்தின் சமூகக் கட்டுக்கோப்பில் ஏற்பட்டுள்ள இன்னொரு மாற்றத்திற்கு தேவையான விடயமொன்றும், தமிழீழத் தேச வழமைச் சட்டத்தின் மூலம் தரப்பட்டுள்ளது. சட்டத்தின் பத்தொன்பதாவது சரத்தின் படி சகல பெண்களும் ஆண்களைப் போல சுதந்திரமாகக் கணிக்கப்பட்டு தங்களது சொந்த ஆதனங்களையும் கணவனுடன் சேர்ந்து தேடிய தேட்டச் சொத்தின் 1/2 பங்கையும் கணவனின் சம்மதமின்றி விற்கவோ, ஈடு வைக்கவோ, நன்கொடை கொடுக்கவோ முடியும். முன்னர் திருமணமானவுடனேயே சீதனமாகக் கொடுக்கப்பட்ட ஆதனத்தை கணவனின் எழுத்து மூலமான சம்மதத்துடனும், அனுமதியுடனும் தான் மனைவி விற்கவோ, ஈடுவைக்கவோ, நன்கொடை செய்யவோ முடியும். இது ஒரு பெண்ணடிமையின் சின்னம். திருமணம் செய்த ஆண்கள் வெளிநாடு செல்கிறார்கள். அங்கு அவர்கள் புதிய மனைவியையோ அல்லது ஒரு சிநேகிதியையோ சேர்த்து வைத்துக் கொண்டு சொந்த நாடு திரும்பாமலும், மனைவி பிள்ளைகளின் சீவியத்துக்கு பணம் அனுப்பாமலும் இருக்கிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் தனக்கு சொந்தமான ஆதனத்தை மனைவி வாழ்க்கை நடாத்துவதற்கு செலவிற்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு விற்கவோ, ஈடுவைக்கவோ முடியாத நிலையில் இருக்கிறார். புதிய இக்குறைபாட்டை நீக்குகிறது. இந்தச் சரத்தின் விளைவாக அதாவது 21வது சரத்துப்படி மனைவியானவள் தனது கணவனைச் சேர்க்காமலே நீதிமன்றுகளில் வழக்குத் தாக்குதல் செய்யலாம். அதேபோல் கணவனைச் சேர்க்காமலே மனைவிற்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்படலாம்.




இச்சட்டக் கோவையின் கடைசிச் சரத்து இச்சட்டக் கோவையிலுள்ள சரத்துக்களுக்கு மாறில்லாத, முரணில்லாத பழைய தேசவழமைச் சட்டங்களிலுள்ள விடயங்கள் சமூக நீதியைப் பாதிக்காத வகையில் இருப்பின் அவற்றின் நன்மை தீமைகளை ஆராய்ந்து நீதியாளர்கள் அவற்றின் அடிப்படையில் தீர்ப்புகள் வழங்கலாம்.

தமிழ் சமுதாயம் வளர்ச்சியடைந்து பல முன்னேற்றமான மாற்றங்கள் ஏற்பட்டுவரும் இக்காலகட்டத்தில், தேச வழமையில் தற்போதுள்ள ஆதனங்களைப் பெறும் முன்னுரிமை, தண்ணீர்ப் பங்கு, கிணற்றுப் பங்கு போன்ற உரிமைகள் பற்றிய விடயங்கள் கவனத்திற்கு எடுத்து, அவை பற்றிய புதிய ஏற்பாடுகள் செய்ய வேண்டிய நிலையும் ஏற்படலாம். இது எவ்வாறு இருந்தாலும், இப்புதிய தேசவழமைச் சட்டம் காலத்துக்கு உகந்ததாகவும், மாறிவரும் தமிழ்ச் சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது உண்மை. ■

## தென் தமிழீழத்தில் தீ !

தமிழனென்றால்
தயை அற்ற தண்டிப்பு!
'சித்தாண்டியில்'
அப்பாவி இளைஞர்களின்
தலை துண்டிப்பு!
துண்டிக்கப்படும் தலைகள்
முடிவுரையல்ல!
அவை!
தமிழீழத்தின் முன்னுரைகள்!
'அம்பாறையில்'
அதர்மத்தின் கோரங்கள்
அகதி முகாம்களிலும்
தமிழர் உயிருக்குப் பேசப்படும்
பேரங்கள்!
பண்டங்கள் விற்கும்
கல்முனைச் சந்தையில்
தமிழர் உடற்
துண்டங்கள் தொங்கினும் வியப்பில்லை!
'தும்பன் கேணியே' இன்றொரு
துன்பக் கேணி!


பசுமை கொஞ்சிய 'பாலையடி வட்டை
இன்று
வெறும் பாலை வெட்டையாய்...!
'கொக்கட்டிச் சோலை'யிலும்
கொலைஞர்களின் 'ஆலை'....!
'மண்டூர்' துயரமே
மண்டிய ஊராய் இன்று!
ஐம்பத்தாறில் (1956)
சிங்களப் படையை முதன் முதலாய்
சங்கரித்த மறவர்கள் நிறைந்த
துறை நீலா வணையிலும்
உறைந்துள்ள துயரம்....
அப்பப்பா!
மட்டக்களப்பே! மட்டமாய் போனதா....?
மோகனம் பாடிய வாவி மீன்களும்
முகாரியே பாடும் இன்று
'திருக்கோணமலை' யின்
திசையெட்டும் தீ!
நறுக்கோடு தமிழ் பேச நடுங்கும் நா!
'வெருகல்' கங்கையிலும் தமிழரின் குருதி!
ஆனால்!
வெற்றியில் உண்டு தமிழர்க்கு உறுதி!
'மூதூர்' வயல் பரப்பெல்லாம் முள்!
பசிய நிலமெல்லாம் பாழ்!
பார்க்குமிடமெல்லாம் எதிரியின் கால்!
தம்பல கமத்தில் தணல்!
நிலா வெளியிலும் நெருப்பு!
கும்புறு பிட்டியில் வம்பர்களின் கூகை!
குச்சவெளி, திரியாய் ஊர்களிலும்
அச்சுறுத்தலென்ற அனல்!
தென் தமிழீழத்தின் தென்றற்காற்றிலும்
செந்தமிழர் குருதியின் சிதறல்கள்
ஆயினும்! அங்கே
வனங்களில் வாசம் செய்யும்
வரிப்புலிகள்
மனங்களில் உறைந்துள்ள உறுதியும்
மக்களின் குருதியும்
புதிய வரலாற்றை நிச்சயம் வரையும்
அப்போது!
அத்தனை துயர்களும் மறையும்!
ஆனந்தம் எங்கணும் நிறையும்!

– நிலா தமிழின்தாசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## அத்தியாயம் 6 இன் தொடர்ச்சி

"என்னடாப்பா அலேட்டாயிற்றானோ?" திகைக்கையில் அங்கு நின்ற மரத்தில் உம் என ஒரு ரவை மோதி வெடித்தது. வோக்கியை இயக்க "என்னடாப்பா பிரச்சினையே?" என தளபதி கேட்க "இல்லையண்ணை" என, இன்னுமோர் குரல் கேட்டது. அது திலீப் அண்ணாவாக இருக்க வேண்டும். மற்றைய சகடை நான்கு பார்சல்களை சுற்றிச் சுற்றி வீசியது. ஒன்று எமக்கு பின்புறமாக விழுந்தது. குண்டு போட்ட சகடை சென்ற முறை உருட்டிய இடத்திற்கு எதிர்ப்புறமாக எமக்கு முன்னால் வீச, "மச்சான் போட்டுட்டான், இந்த முறை எங்கட பக்கம்தான் எல்லாம், கவறுக்குப் போங்கோ என நான் குரல்கொடுக்க எல்லோரும் கவறெடுத்தனர். ஸ்... ஸ்... என பெரும் சத்தமாக இறங்க, நன்றாகப் பதுங்கிக் கொள்ள கும்... கும் என பயங்கரமாக அதிர்ந்தது. மண் சரிந்து விழுந்தது. நல்லவேளை இவ் பங்கர்கள் மூடு பதுங்கமைப்பு அற்றவை.

யாவரும் மண்ணைத் தட்டி வெளியே வந்தோம். நாம் வாழ்ந்து வந்த சிறுகுடில் இருந்த இடத்தைவிட்டு மறைந்திருந்தது. அருகில் ஒரு பெரிதான பள்ளம் மாத்திரம் இருந்தது. விமானங்கள் தூரச் சென்று மறைந்தன. பாக் எல்லாம் இடம் மாற்றினதால தப்பிட்டுதுகள். மாஸ்ரரின்ற வீடு புக்கை, என்றேன். ஈக் ஈக் என எதுவோ ஈனமான குரல் எழுப்புவது தெரிந்தது. என்ன சத்தம்?

எல்லோரும் சத்தத்தை நாடிச் செல்ல நான்கு நாட்களாக எம்மிடம் சோறு வாங்கி உண்டு கொஞ்சம் சதைப்பிடித்த நாய்க்குட்டி பின்தொடையில் பெரிய காயத்துடன், ஒரு காலை எங்கோ தொலைத்துவிட்டுக் கிடந்தது.

"மாஸ்ரர் நாயைப் பாருங்கோ" என அழகு கூற. வாத்தியார் திட்டிவிட்டு "அது படுகிற பாட்டுக்கு நீ சொந்தம் கொண்டாட வெளிக்கிட்டிட்டாய். போடா, வேலையைப் பார்த்துக் கொண்டு!" என்றார். ஈ... ஈ... என அது மெதுவாக முனங்கி பரிதாபகரமாகப் பார்த்தது.

"சரி சரி, வாங்கோ, செல் எல்லாத்தையும் மேல் எடுங்கோ.

"நேரம் 6.05 காட்டியது. மேற்கு வானில் சூரியன் மெதுவாக சிவப்பாகத் தொடங்கினான். வானம் முகில்கள் எல்லாமே சிவப்புத் திட்டுக்களாகப் படிந்து கிடந்தன. பாயப் போகும் குருதியாறை நினைத்து துக்கித்தன போலும். பறவைகள் இரை தேடி முடிந்து கூடுகளை நாடி வேகமாகத் திரும்பின. பட பட என்ற சிறகடிப்பில் ஏக்கம் விழுதுவிட்டது. மிருகங்கள் சோகமாக அழுதன. அவற்றிடையே இந்த நாயின் ஓலம் மெதுவாய்ப் படர்ந்து பரவி இதய அணுக்களில் ஊடுருவி சக்தியின்றித் தேய்ந்து தேய்ந்து போயிற்று. ஈழத்தில் வாழ்தலுக்காக எதிரியளித்த தண்டனை போலும்.

திசை தப்பிய கொக்கு ஒன்று வேகமாகக் கடந்து போயிற்று. அது சாமியார் குளத்துக்கு சென்றிருக்க வேண்டும் என எண்ணிக்கொண்டேன். வெளவால்கள் சாரிசாரியாக உயரப் பறந்து போயின மனம் திடுக்குற்றது. வயல் வெளியிலிருந்து கிளம்பிய இரு ஆட்காட்டிகள் சோகமாக சுற்றிச் சுற்றி கத்தியபின் எம்மைக் கடந்து முகாமைக் கடந்து எங்கோ தூரத்துக்குப் போயின. இணையைத் தேடுகிறது போலும் என எண்ணிக்கொண்டேன். சூரியன் முழுவதாக மரங்களிடையே மறைந்து பூமிக்குள் தாண்டுவிட்டது. மேகங்கள் வேகமாக ஓடின.

நேரம் 6.53.

"மச்சான் எல்லாம் செற்றப் பண்ணியாச்சோ? சரி இங்கால வந்து இருங்கோ. ரவுன்ஸ், ஆர்.-பி.ஜி. செல்கள் எல்லாம் வரும். முன்னால நிற்கிறான். ஒரு கவரும் இல்லை; கவனம்."

பீரங்கி வாய் பொலிஸ் நிலையத்தைக் குறிபார்த்து நிமிர்கின்றது, ஏராளமான மரக் கொப்புகளுடன்.

நேரம் 6.56.

"ஆரெடா அவன் வாறவன்..." எழுத முடியாத ஏச்சாகத் திட்ட "நான்ராப்பா மாஸ்ரர்" என்று குரல் கொடுத்து, குறடு ஒன்றை வாங்கியபின் ஓடியது. நேரம் 6.-58.

"றஞ்சன், எல்லாம் சரியே?" புறங்கையால் முகத்தை அழுத்தித் துடைத்துவிட்டேன். விசுவாசம் அருகில் நின்றான். வோக்கி இயக்கப்பட்டு சிவப்பு நிறம் ஒளிர்ந்தது.

7.00.

"குடு மச்சான்" தளபதி உத்தரவு பிறக்க கும் கும் என பல உந்து சப்தங்கள் எழ, இராணுவத் துப்பாக்கி இயங்குமுன் கும் கும்... என பல சத்தத்துடன் முகாம் அதிரத் தொடங்கியது. முகாம் அல்ல பூமியே!

முகாமிலிருந்து பலத்த சத்தம், உயிரை இழக்க முன்னான எதிரியின் அபயக்குரல்! அவர்களின் ரவைகள் கண்மூடித்தனமாக பாய ஆரம்பித்தன. மிக அருகாக நின்ற எமக்கு கடும் எதிர்ப்புக் கிடைத்தது. மரங்களிலும் கொப்புகளிலும் பட்டுப்பட்டு ரவைகள் வெடித்தன. சக்தி வாய்ந்த ஆமட்டியஸ் ரக ரவைகள், ஏ.கே.எல்.எம். ஜிகளும், 303 எல்.எம். ஜிகளும் முழக்கமிட்டன. கால்களுக்கு இடையாக ரவைகள் வேகமாகப் போயின. ஆயினும் ஜீவமரணப் போராட்டத்தில் மிகத்துரிதமாக அடுத்தடுத்த பாரிய குண்டுகளை அனுப்ப எதிரி திசை தப்பித் தாக்கினான். மரங்களின் மேலாக ஆகாயத்தை நோக்கியெல்லாம் வேட்டுக்கள் தீர்ந்தன!

"அந்தா, அந்தா! கடைப் பொயின்றில 30 வைச்சு அடிக்கிறான் போல கிடக்கு!"

கடையிலிருந்து ரவைத்தொடர்கள் வேறு திக்கால் பாய்வது தெரிந்தது. தொடர்த் தாக்குதலினால் கடை எரிய ஆரம்பிக்க அங்கிருந்து ரவைகளும், செல்களும் கிரனைட்டுகளும் எரிந்து வெடிப்பது இடையே கேட்டது.

ஒவ்வொரு விநாடியும் வோக்கியில் தாக்குதல் இடங்களும் முறைகளும் அறிவிக்கப்பட அதற்கு ஏற்றதுபோல் தொடர்ந்து தாக்கினோம். படிப்படியாக எமது தரப்பில் போராளிகள் காயமடைந்து குறைய ஆரம்பித்தார்கள்.

ரவைகள் அவர்களது உடலை கிழித்திருந்தது.

அவர்களை அனுப்பியபின் எஞ்சிய சிலரும் சரியான முறையில் தாக்கினோம். பட... பட... பட... மேலிருந்து திடீரென ரவைகள் தரைக்குப் பாய்ந்து மரக்கொப்புகளில் பட்டு வெடிப்பதின் பின்னர்தான் இரண்டு கெலியையும் கண்டோம். எமது இலக்கை அறிந்து அடிக்க ஆரம்பித்தான். இடையிடையே 5" செல்களை வீசியபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்ய எம்மை நோக்கிய எதிரியும் ஆர்.பி.ஜி. எறிகணைகளையும், செல்களையும் ஏராளமான துப்பாக்கிகளையும் இயக்க, இனித்திருப்பிக் கொடுத்தால்தான் அடங்குவான்கள் என முடிவெடுத்து கொலை வலையத்தையும் பாராது துரிதமாக இயங்கி மூன்று கோணத்தில் ஒரே நேரத்தில் ஒரு இலக்கிற்குத் தாக்க அந்த இலக்கு பொலிஸ் நிலைய பின்புறம் இடிந்து இறங்கியது.

இந்த வகையான முறையை நாம் கையாளாது விட்டிருப்பின் பெரும் இழப்புக்களைச் சந்தித்திருப்போம். பொம் பொம் என இரண்டு பயங்கரச் சத்தம்! காது செவிப்பறை கிழிந்துவிட்டதாக எண்ணினேன். சில நிமிடம் கிண் என்று இசைக்க காலின் ஓரத்தால் குருதி இலேசாகச் சிந்தியது. அழுத்திப் பார்த்தேன். ஓரளவு சிறிய காயம் தான். சத்தத்தின் காரணத்தைப் பின்னரே உணர்ந்தேன். சியாமாசிட்டி பொம்மர்களில் ஒன்றின் வேலை அது.

துரிதமாக நாம் தாக்குதலை தொடுத்தபடி இருக்கையில் மறுபடியும் பொம்பர் சாய்ந்தது. கும் கும் என எமது 50 கலிபர்கள் குறிபார்த்து முழங்க வந்தவேகத்தில் உள்ளே திருப்பிய வண்ணம் மேல் உயர்ந்தது. கும்... கும் என பெரிய சத்தமும் பலர் முனகுவது போன்ற ஒலியும் எமது நிலைக்கு அருகாக 75 மீற்றர் தொலைவில் கேட்டது. சேரன்ர பொயின்ரிலதான் ஏதோ பிரச்சினை. மற்றவர்களைத் தொடர்ந்து தாக்கும்படி பணித்து அங்கு ஓடிச்சென்றேன். அங்கு குருதி வெள்ளத்தில் நான்கு இளம் போராளிகள் மிதந்தார்கள். அடுத்த பொயின்ரிலிருந்து மாஸ்ரரும் வர-

"கெதியா பொடியள இங்கால எடுங்கோ. அதே ரேஞ்சில திருப்பவும் அடிப்பான்".

தனியனாக இருவர் இருவராக தோள்களில் சுமந்தபடி விரைவாக பின் நகர்ந்தோம் சொற்பத்தில் மீண்டும் கும்... கும் அதிர்ந்தது.

"என்ன மாஸ்ரர், ஏதாவது பிரச்சனையே?"

"இல்லையில்லை! கையிலை உரஞ்சிப்போட்டுது. கெதியா நட".

வோக்கியில் அறிவித்து நால்வரையும் மருத்துவ அணியிடம் ஒப்படைத்தோம். இளம் மருத்துவப் போராளிகள் வேகமாக முதலுதவிகள் செய்ய ஒரு போராளி வயிற்றில் காயமடைந்தவன், எனது கையில் சாய்ந்தபடி உயிர் விட்டான். அந்த முகம் தெரியாத சகோதரன் -விடியலைத் தேடி வீறுகொண்ட வேங்கை, என் கரங்களில் களப்பலியாகி விட்டான். எனது கரங்களை இறுக்கி -மிக இறுக்கி மன உறுதி அனைத்தையும் தன்கரத்திற்கொணர்ந்து ஆக்கிரமிப்பாளனை நெருப்பாய் இறுக்கிப் பிடிப்பது போல மெதுவாக மிக மெதுவான அவனது குரல், "டேய் பூருங்கோடா, கொல்லுங்கோடா, முழு ஆம்சும் எடுக்கவேணும்!" என ஒலித்தபடி அந்த தென்றலில் பரவி என்னையும் மனதையும் உடுருவிக் கடந்து அப்பால் மெதுவாக காற்றோடு கலந்தது.

கரங்கள் மெதுவாகத் தளர்ந்தன. பெரிய வெள்ளி ஒன்று கீறு போட்டு கீழ் நோக்கி விழுந்தது.

அந்நிய கூக்குரல்களிடையே 'டேய் பூருங்கோடா'... மெதுவாக காதுகளில் இரைமீண்டது. தாமதிக்க நேரமின்றி வேகமாக களத்திற்குச் சென்றோம். செல்லும் வழியில் செல்களும், எரிகுண்டுகளும் விழுந்து காடுகள் பற்றைகள் எரிந்து கொண்டிருந்தன. அதே வெளிச்சத்தில் மீண்டும் மீண்டும் செல்களும் பொம்மர்களும்... விரைவாக இருவரும் பிரிந்து அவரவர் இலக்குகளிற்கு சென்றோம். இரவு நேரம் 10.15 ஆனது.

சுருக்கமாக அவர்களுக்கு நடந்ததைக் கூறிவிட்டு பீரங்கியைத் தயார்படுத்திய பின் இராணுவம் செல் ஏவும் இலக்கைக் கண்காணித்தேன். பும், பும்! இரு செல்கள் எம்மைக் கடந்து போய் வீழ்ந்து முழங்கின. 'இங்கை விடு!' சரியான முறையில் இலக்கை குறிபார்த்தபின் தளபதியின் கட்டளைகளுடன் குறி பார்த்துச் சுட அதிர்ந்தது.

"மச்சான் தப்பிவிட்டது. அவன் பங்கருக்குள்ளால வாறதுக்கிடையில் அடுத்தது குடுப்பம்!" தயாராக்களுடன் குறி தப்பாமல் எதிரியின் மோட்டரை தாக்க நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஒரு கட்டடம் ஓடுகள் சிதறிப் பறந்து வீழ்வது தெரிந்தது. இடையிடையே வெளிச்சக் குண்டுகளையும் ஏவி இலக்குகளை இனம் கண்டு கொண்டோம்.

அடுத்த ஆர்.பி.ஜி. செல் மரத்தில் அதிர டாவினின் தொடைப் புறமாக குருதிகொட்ட ஆரம்பித்தது.

ஜீன்சின் சைற் பைக்குள்ளிருந்த 'பீல்ட் கொம்பிரஸ்' பஞ்சை வைத்து அழுத்திக் கட்டினேன். அப்பிடியும் கேளாது இரத்தம் சிறிது சிறிதாய்க் கசிந்தது.

"பிரச்சினையில்லை. மச்சான், அடுத்ததை செற்றப் பண்ணுவம்" என்றான்.

"உனக்கென்ன விசரே. பீசும் உள்ளுக்க கிடக்கு. இரத்தம் பாயிற பாய்ச்சலுக்கு நிற்கப் போறியோ" என கோபப்படவும் விடாப்பிடியாக நின்றான்.

அந்நிய போர் வெறியர்கள் கூலிக்கு மாரடிப்பவர்கள். சண்டையின் போது மிரட்டலுக்கு அஞ்சி களத்தில் எங்காவது பதுங்கி நின்று கண்டபடி துப்பாக்கிச் சண்டை செய்வார்கள். சிறு காயம் ஏற்பட்டால் உடனடியாக காரணம் காட்டி பின்வாங்கி விடுவார்கள். எமது போராளிகள் வேறுபட்டவர்கள். உடலையும் உயிரையும் பணயம் வைத்துப் போர்க்களத்தில் சமராடுபவர்கள். உடலையும் உயிரையும் விட சுதந்திர பூமியை மேலானதாக நேசிக்கும் இலட்சியவாதிகள். களத்தில் புயலாகப் பாயும் இவர்கள் ஒருபோதும் புறமுதுகு இடுவதில்லை. களப்புண் ஏற்படினும் களத்தைவிட்டுப் போக மாட்டார்கள். அவர்கள் போவதெனில் உயிரற்றோராகவோ அல்லது உடலில் இயக்கமற்ற தன்மையைப் பெறும் போதுதான் பிறரால் களத்தைவிட்டு அகற்றப்படுகின்றார்கள். இது எம் போராளிகளுக்குரிய தனித்துவ இயல்பாகும். இதுவே தம்மை அழிக்க முடியாதென இறுமாந்திருக்கும் ஆக்கிரமிப்பாளர்களையும் வெற்றிகொள்ள வழிவகுக்கிறது.

தொடர்ந்து எதிரி மீது இடைவிடாத தாக்குதலை மேற்கொண்டோம். முகாமின் தொலைத் தொடர்பிற்கும் ஆகாய ஊர்திகளிற்கும் தொடர்புகள் சரிவர இல்லாதபடியால் ஒருமுறை கெலி ஒன்று முகாமினுள்ளும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. தொடர்ச்சியாக ஒரே இடத்தில் நகர்வைக் காட்டாமல் நாம் இருந்தமையால் முகாமினின்றும் வான்வெளியினின்றும் கடும் எதிர்ப்புக்களை அடைய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தொடர் இயந்திரத் துப்பாக்கி வேட்டுகளும், ஆர்.பி.ஜி. எறிகணைகள், செல்களும் விதைக்கப்பட ஆரம்பித்தன.

விமானம் ஒன்று எமது இலக்கை வட்டமிட, தயாரான நாம் உடனே காப்பு எடுக்கவும், பெரும் சத்தத்துடன் சுமார் 50 மீற்றர் அப்பால் நின்ற பாலைமரம் ஓர் அதிர்வின் பின் சின்னாபின்னமாகி விழுந்தது. உண்மையில் அந்த வைர விறகுக் கட்டைகள் எம்மைத் தாக்கி கால்களில் பெரும் உராய்வுக் காயங்களை ஏற்படுத்தின. அயராத எமது தாக்குதல் வங்கிக் கட்டட குறி பார்ப்புடன் நிறைவடைந்தது.

நேரம் 11.35 அடுத்து 12.00 மணியளவில் எமது தாக்குதல் அணிகள் முகாமினுள் நுழைய தயாராக இருந்தமையால் வேகமாக பீரங்கியை அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. ஏனைய பீரங்கிகள் இன்னமும் முழங்கியபடி இருந்தன. எமது இலக்கை தரை தாக்குதல் குறைவடையினும் விமானத் தாக்குதல் மேன்மேலும் மோசமாக ஏற்பட்டது. உலங்குவானூர்தி ஒன்று எமக்கு மிகமிக அருகாக ரவைகளைப் பாய்ச்சத் தொடங்கியது.

கொலை வலயத்துள் இருக்கும் எமது பீரங்கியை வெளிக்கொணர்வதற்காக ஏனைய பீரங்கிகள் மூலம் திசை திரும்பல் தாக்குதலை மேற்கொண்டு ஒருவாறு வெளிக்கொணர்ந்தோம். பீரங்கியை பாதுகாப்பாக அனுப்பிய பின் மீண்டும் களத்திற்கு விரைந்தேன்.

11.59. பீரங்கி வேட்டுக்கள் யாவும் இறுதியாக சந்தித்து அடங்க யாவும் ஒருமுறை முகாமை உலுப்பி அடங்கின.

தொடர்ச்சி 7ம் பக்கம் ....

**இது ஒரு புதிய போர்ப்பரணி !**
பிரபாகரனின் சகாப்தத்துடன் தொடங்கிய ஈழத்தமிழரின் வீரமரபை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு போர்க்கால இலக்கியம் இது. ஆழமான புரிந்துணர்வை - அளவிட முடியாத அன்புறவை -வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களிலும் பங்கெடுக்கின்ற உயிருக்குயிரான நேசிப்பை -ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவருக்காக மற்றவர் உயிர்கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போராட்ட வாழ்வை, தான் தரிசித்த நிகழ்வுகளையும் பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாக வடித்திருக்கின்றான், தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்து நின்ற ஒரு புலிவீரன் கப்டன் மலரவன் (லியோ).

அதேவேளை இப் புலிவீரனின் போராட்ட வரலாற்றையும், பல சாதனைகளையும், மறக்க முடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இந்நூல் இருக்கின்றது. 'போர் உலா' என்ற இந்தப் பரணி, தமிழீழத்தின் போர்க்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாக என்றைக்கும் விளங்கும்! . இதனை நாம் இங்கு தொடராகத் தருகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர் உலா...

12.00 மணி 23.11.1990 இருளினூடாக உறுதியான துப்பாக்கிக் கரங்கள் ஊரத் தொடங்கின. நடுநிசி அமைதியாக அவர்களிற்கு விடைகொடுத்தது. வானில் ஊர்திகள் மட்டும் இருளைக் கிழித்தன.

தழுவிவிடும் புற்கள் யாவும் தளிரிலைகளால் தடவி அனுப்பின. தொட்டாச்சுருங்கிகள் குத்தியிமுக்காமல் குழிந்து தலைசாய்த்தன. நிலவு அறவே எழவில்லை, எங்கே எங்களைக் கண்டு விடுவார்களோ என்று. மேகங்கள் விண்மீன்களை மறைத்து இருளைக் கடுமையாக்க வரம்புகள் தாண்டி நெல் வயலினூடாக எமது போராளிகள் ஊர்ந்தார்கள். பீரங்கிக் குண்டுகளால் சிதைந்த எதிரிகள் திகைத்து நிற்க சொந்த மண்ணை ஆக்கிரமித்த கொடியவனை ஒழித்து தேசம் மீட்கவென இவர்கள் ஊர்ந்தார்கள். ரெயில் தண்டவாளத்தையும், வரம்புகளையும் கடந்து கடந்து முன் சென்றார்கள்.

சட சட சட... எதிரியின் ஏ.-கே.எல்.எம்.ஜி. தான் முதலில் கனன்று நேரடிச் சண்டையை மூட்டிவிட்டது. மறுகணம் ஒன்றாய் பத்தாய் நூறாய் முகாமினின்று தீக்கனல்கள் பொறிகக்க போராளிகள் -காலத்தைச் செதுக்கும் சிற்பிகள் -எந்தக் காப்பும் அற்ற வெளியின் ஊடாக முன்னேறினார்கள். இப்போ அவர்கள் கைகளிலுள்ள துப்பாக்கிகள் எதிரிக்குப் பாடம் கற்பிக்க ஆரம்பித்தன. எதிரியின் எறிகணைகள் வெட்டவெளிப் பிரதேசத்தில் மழைத்துளிகளாக விழத் தொடங்கின. வானஊர்திகள் வயல்களைக் களமாக்கி இரை தேடத் தாவின.

உலங்குவானூர்திகள் 50 கலிபருக்கு ஓய்வு கொடுக்காது தீயைக் கக்கின. தரையினின்று எழும் வேட்டுக்கள் அவற்றை முகில் வரை துரத்திச் சென்றன. குன்றாத வீரத்திலக குன்றிமணிகள் குருதிக் கடலில் மிதக்கத் தொடங்கினர். அவனைக் கடந்து கடந்து புலிவீரர் பாய்ந்து போய் பொருதினர். எதிரியின் காப்பரண்கள் ஆர்.பி.ஜி. எறிகணைகளால் சிதறி விழ கூலிகள் விட்டு ஓடத்தொடங்கினர்.


வோக்கியை இயக்கி வைத்துக் கொண்டேன். தளபதியின் கட்டளைகள் இடையறாது பறந்து வந்தன.

ஜெகன் அண்ணாவையும் வதனன் அண்ணாவையும் இடையறாது கூப்பிடுவதும், ஏனைய அணிகளிற்கு கட்டளைகள் பிறப்பித்தபடியுமாக இருக்க, சிறிது நேரத்தில் ஜெகனது பக்கமாக திலீப் அண்ணாவினதும், கோபுவினதும் பெயர்கள் பலமுறை கூப்பிடப்பட்டு தொடர்பு அறுந்து கிடந்தது. கன்னியாஸ்திரி மடத்தைக் கைப்பற்ற முன்னேறிய இவர்களினது நிலை பிரச்சினைக்குரியதாக இருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டேன். ஏனெனில் ஒரு இலக்கு நோக்கிச் சென்ற நான்கு அணித் தலைவர்களது தொடர்பும் அற்றுப் போவது வழமைக்குரியதன்று.

ஆயினும் சிறிது நேரத்தின் பின் வேறு ஒரு குரல் தாம் மடப்புறமாக சில காவலரண்களைக் கைப்பற்றியதாகவும் தான் ஒன்றினுள் நுழைந்துள்ளேன் எனவும் தெரியப்படுத்த, தளபதி உற்சாகமூட்டி மேலதிகமாக அனுப்புவதாகக் கூறினார். கோயிற்புறமாக சண்டை நடைபெறுவதும் போராளிகள் இலக்கை அண்மித்தமையும் அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. பொலிஸ் நிலையப் புறமாக உள்ளிறங்கிய அணியினர் காயமடைந்து வர ஆரம்பித்ததுடன் நானும் ரெயில் ரக் ஊடாக பின்புறமாகச் சென்றேன். ரவைகள் சீறிப் பாய்ந்தன. ஆ ஆ என மூச்சு இழுபடும் சத்தம் அண்மையாகக் கேட்க விரைந்து சென்றேன். ஒரு போராளி வயிற்றில் குண்டைத் தாங்கி அசைய முடியாது முடங்கிக் கிடந்தான். தோளினூடாக கையைத் தூக்கி மெதுவாகத் தாங்கி அழைத்து வந்தேன். ரவைகள் தண்டவாளத்தில் வரிசையாகப் பட்டுச் செல்வது தெரிந்தது.

கைகளை நுழைத்து குப்பியைத் தடவ கையை இறுகப் பிடித்துக் கொண்டான். ஈனமான குரலில் "நான் அவ்வளவு கெதியா சாக மாட்டன். உவங்களை துரத்தாமல் நான் சாகமாட்டன். இன்றைக்குப் போனா நாளைக்கு வருவான்" கறுவிக்கொண்டு பற்களை நறுமிக்கொண்டான். உடற் புண்ணுக்காக வருந்தி அழுபவனாகத் தெரியவில்லை. அவன் சிந்தை முற்றாகக் களத்தில் நின்றது.

இன்னமும் கரங்களை இறுகப் பற்றியபடி "அண்ணை சேப்ரியிலை விடுங்கோ" என்ற வார்த்தையுடன் மெதுவாக மயங்கிச் சாய்ந்தான். ரைபிளின் சேஞ்லிவரை மாற்றி அதை வேறு ஒருவனிடம்... அவசரமாக ஒப்படைத்தபின் மீண்டும் வேகமாக உட் சென்றேன். ரவைகள் ஏராளமாக நெருக்கியபடி செல்ல, பதுங்கியபடி தாவி ஓடினேன், எமது அணிகளின் துப்பாக்கி கனல்களை நோக்கி.



மாங்குளம் படை முகாமின் மாதிரி வரைபடம்

"மச்சான் கொண்டு போறதுக்கு ஆக்களில்லை. கெதியா கொண்டுபோ". ஒரு போராளி திரும்பிச் சொல்ல எனது ரைபிளை மீண்டும் தோளில் மாட்டி இராணுவம் நிலையிருந்த வீட்டின் புறமாக பதுங்கிச் சென்றேன். இரு போராளிகள் ஏராளமாக இரத்தத்தை போக்கியபடி இருக்க, கட்டுவதற்கு எதுவுமற்ற அவலமான நிலை. அருகே ரவைகளும் செல்களும் கூவுகையில் எப்படித் தேடுவது? பேசாமல் எனது வரிப்புலி சீருடையை கழற்றி இரண்டாக துப்பாக்கிக் கத்தியால் மாற்றி, சுவாச வேகம் குறைந்து மெதுவாக இழுத்தவனின் வயிற்றில் கட்டடியபின் மற்றையவனது தொடையில் பெரிய மாங்காயளவு துவாரத்தை மூடிக் கட்டினேன்.

இரு தோள்களிலும் இரு போராளிகளைச் சுமந்தபடி வேகமாக மறைவுகளுக்குத் தாவிய வண்ணம் பின்வாங்கினேன். "டேய் டேய் அடியடா ஆ... ஆ பூரடா" என விக்கலோடு வயிற்றில் காயப்பட்டவன் முனங்கியபடி இருந்தான். ரைபிளை எத்தனை முயன்றும் விடாமல் சிலிங்கில் கையை நுழைத்து மடக்கி வைத்திருந்தான். விக்கல்கள் மெதுவாக மெதுவாக அணையத் தொடங்கின. எனக்கு எதிராக இன்னுமோர் உருவம் பதுங்கி வருவது தெரிந்தது.

"இரண்டு பேரையும் தூக்கிறது கஸ்டமாக இருந்தா, ஒராளை என்னட்டத் தாங்கோ".

"ஆர், மாஸ்ரரே? நான் கொண்டுபோறன். நீங்கள் முன்னுக்குப் போய் கொண்டுவாங்கோ?"

ஆர், லியோவே? சரி, நீ அந்த மரத்தடி பங்கரில மெடிக்ஸ்காரரிட்ட கொண்டுபோ, நான் தூக்கிக்கொண்டு வாறன்" வேகமாக ஓடுவது தெரிந்தது.

இருவரையும் மருத்துவச் சிகிச்சைக்கு கையளித்துவிட்டு மீளத் திரும்புகையில் பல மருத்துவ வீரர்கள் வந்து நின்றார்கள். "இனிப் பிரச்சினையில்லை. காயப்பட்டா உடனே கொண்டு வருவம்" என முன்னே ஓடிய போராளி கூறிச் செல்ல, ஏனையோர் பின்தொடர்ந்தனர். நான் மர அடியில் மாஸ்ரரை காத்து நின்றேன். சண்டை, உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இராணுவ எதிர்ப்புகள் செயல் இழப்பதையும், எமது அணிகள் காவலரண்களில் நுழைவதையும், வோக்கி மூலம் கேட்கக் கூடியதாக இருந்தது.

"மாஸ்ரர் வாங்கோ றோட்டுக் கரை பொயின்ருக்கு போனா ஸ்ரான்பை குறூப்புடன் உள்ளே இறங்கலாம். இல்லாட்டி சப்ளைக்காவது போகலாம்". என்று இருவரும் ஆர்வமாக விரைந்தோம். செல்கள் இரைச்சலுடன் அருகருகாக வீழ்ந்து வெடித்துச் சிதறியது.

"இன்றைக்கு எப்படியும் அரைவாசிக்கு மேல் பிடிக்கலாம். பிடிச்ச இடத்தை பொம்பர் அடியில் இருந்து காப்பாற்றுகிறதென்றால் வலு கஸ்டம்" மாஸ்ரர், கூறியபடி விரைந்து வந்தார்.

## அத்தியாயம் - 7

விடிய 4.00 மணியளவில் முகாமின் சுற்றுப்புறப் பகுதிகளை மிகக் கடுமையான சண்டையின் பின் கைப்பற்றிய எமது போராளிகள் மிகக் களைப்புற்று நீர்த் தாகத்தினால் தவிக்கும் சந்தர்ப்பத்தில், இன்னமும் சொற்ப நேரத்தில் பொழுது புலரத் தொடங்கியவுடன் நடைபெறப் போகும் உக்கிர விமானத் தாக்குதலுக்கு ஈடுகொடுத்து மறுநாளைய தாக்குதலுக்கான எதிரியின் மிகப் பெரிய காப்பரண்களை எமதாக்கிக் கொள்ளும் முயற்சியில் அவசரமாக சிறு பதுங்கு குழிகளை அமைக்கும் வேலைகளையும் மண்மூடைகள் கட்டும் வேலைகளையும் மும்முரமாக செய்து கொண்டிருந்தார்கள். இதில் கூட இவர்கள் தயக்கத்துடனோ தன்னிச்சையாகவோ செயற்படவில்லை. எதிரியின் இயந்திரத் துப்பாக்கிகளும் எறிகணைகளும் இயன்றளவு கட்டுப்படுத்த முயன்றுகொண்டே நின்றன.

**இப்படியான சூழ்நிலையை தமிழீழ மக்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்களை நாம் பதுங்குகுழி அமைத்தலுக்கு அழைக்கையில் கூட பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அனுப்புவதில்லை. ஒரு சண்டை இடம்பெற்றதாயின் சில நிமிடங்களில் பத்திரிகைகளை இரை மீட்டபின், ஏதாவது விமர்சனங்களை தெரிவித்த பின், தமது சுயநல வாழ்க்கைக்குள் அமிழ்ந்து விடுகின்றார்கள். களத்தில் தமது பிள்ளைகளை ஒத்த இளைஞர், யுவதிகள் உண்ண உணவின்றி குடிக்க நீரும் தானின்றி உறுதியைத் தளரவிடாது போராடும் ஒரு உன்னதப் போராட்டத்தை இவர்கள் உணர்வுரீதியாக, பார்க்கத் தவறுகின்றார்கள். வெறும் ஆயுதங்கள் மோதிக் கொள்வதாக எண்ணிக்கொள்கின்றனர். களத்தில் போராளிகளது உள்ளங்களும் போராடுகின்றன என்பதை அவர்கள் ஜீரணிப்பதில்லை. இது போராளிகளான எங்களுக்கு மிகுந்த துக்கத்தையும் அடக்க முடியாத வேதனையையும், ஏன் சிறிது தளர்ச்சியையும் கூடத் தருகின்றது என்பது உண்மை.**

மாங்குளம் சண்டை எனக்கூறின், உண்மையில் சகல போராளிகளும் குறைந்தது சண்டைக்கு இரு நாட்கள் முற்றாக தயார்படுத்தலை செய்வதனால் மிக சோர்வடைந்து போவர்.

ஏனெனில் இரவில்தான் அதிக வேலைகளை முகாம் அருகே செய்ய வேண்டிய அவசியம் உண்டு. உதாரணமாக எதிரி எம்மைக் கண்டுகொள்ளாத வகையில் புதிய இயந்திரத் துப்பாக்கி அரண்களை அமைக்கும் அவசியம் இருக்கும். இரவில் இதற்கு உரிய மண்மூடைகளை, சிலிப்பர்க் கட்டைகளை நிலத்தில் ஊர்ந்தபடி அல்லது முழங்காலில் நடந்தபடியே சுமக்க நேரிடும். இது எழுத்தில் எழுதுவதைப் போன்றதல்ல. மறுதினம் இடுப்பை நிமிர்த்தி நடக்கவே முடியாது. எனினும் மறுதினம் இதே வேலைகளைச் செய்கின்றோம். பகலில் எதிரி இலக்குகளைத் தேடிப் பார்ப்பதனால் நித்திரையை இழந்து கண்கள் சிவந்து எரிவைக் கடுமையாகத் தரும். இரவில் நித்திரை விழிப்பில் பசியின் கொடூரம் மக்களுக்குத் தெரியாததல்ல. கொட்டும் பனியில் உடல் முற்றாகத் தோய்ந்திருக்க நாவறண்டு, தொண்டை பாளமாகப் பிளக்கும். உதடுகள் கடும் வேதனையைத் தரும். இவ்வாறு இருந்த களைப்புடன் பெரும் சண்டையை நடாத்திவிட்டு நீராகாரமின்றி விடிவதற்குள் காப்பரண்கள் அமைப்பது இலகுவான காரியமல்ல.

உண்மையில் போராளிகள் இதன்மூலம் மனதை மேன்மேலும் உறுதியாக்கிக் கொள்கின்றனர். அவ் உறுதி ஒரு தேசாபிமானமற்ற பொதுமகனைச் சந்திக்கும்வரை குலைவதில்லை. எதிர்மாறாக தேசாபிமானிகளைச் சந்திக்க அது மேன்மேலும் எஃகாகத் திரண்டு விடுதலைத் தீயை கொழுந்துவிடச் செய்யும்.

அதிகாலை 5.00 மணியில் ஓரளவு வெளிச்சம் படர இரு சியாமாசிட்டிகளும், இரு உலங்குவானூர்திகளும் இருளைக் கிழித்த வண்ணம் முகாமைச் சுற்றத் தொடங்கின. ஒரு மணி நேரத்துள் போராளிகள் மிக முயன்றுகூட நிலத்தின் கீழ் பதுங்கு குழிகளை அமைத்தலில் வெற்றி பெறமுடியவில்லை. பெரும் மழை பெய்த காரணத்தால் நீர், வெட்ட வெட்ட ஊறத் தொடங்கியது. மண் மூடைகளில் நீர், கசியத் தொடங்கியது. இந்நிலையில் விமானக்குண்டு வீச்சுக்களையும் உலங்குவானூர்தியின் உதவியையும் கொண்டு படைகள் மீண்டும் தரைமார்க்கமாக தாக்குதல்களை ஆரம்பித்தன.

விமானங்கள் கன்னியாஸ்திரி மடத்தையும் கோயிலையும் மூர்க்கமாகத் தாக்கின. கடும் விமானத் தாக்குதல்களால் எம்மால் ஈடுகொடுத்தல் மிகக் கடினமாக இருந்தது. தரையிலிருந்து இராணுவம் பெரும் சண்டையைத் தொடங்க சில பகுதிகளை விடுத்து நாம் வெளியேற வேண்டியதாயிற்று. இதில் கோயில்ப் புறப் பகுதிகளும் அடங்கும்.

எதிரி எம்மிடம் இருந்து கைப்பற்றிய காவலரண்களை துரிதமாகச் சீர்படுத்த ஆரம்பித்தான். எதிரியின் இந்த புனரமைப்பு வேலைகள் பெரும் அபாயத்தின் அறிகுறியாகத் தென்பட்டது. எதிரி புனரமைத்து மீண்டும் பலமடையும் வேளையில் நாம் மீண்டும் அதைக் கைப்பற்ற பெரிய உயிர் விலைகளைக் கொடுக்கவேண்டி வரும் என்பதை உணரத்தலைப்பட்டோம். உளவியல் ரீதியாக எதிரி ஸ்திரமான நிலையை அடைவதை நாம் விரும்பவில்லை. அதனால் மிகப்பெரிய பெரும் ஆபத்திற்கூடான ஒரு துணிகர அதிரடியை எதிரி மீது வெட்டவெளியூடு பாய்ந்து, தாக்க ஆரம்பித்தோம்.

ஒரு கணம் எதிர்பாராத தாக்குதலினால் நிலைகுலைந்த எதிரிகள், தமது இறுதிக்கட்டம் தீர்மானிக்கப்படுவதை உணர்ந்தனராய் எதிர்ச் சண்டையை காப்பரண்களிலிருந்து வெட்டவெளியூடாக பட்டப்பகலில் பாயும் எங்களில் நடாத்தத் தொடங்கினான். குண்டு வீச்ச விமானங்கள் சரமாரியாக வெளிகளில் குண்டுகளை வீசியது.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாவுக்கு விலங்கிட்ட நெருப்பு மனிதர்கள்

கிளாலிக் கடலின் அலைகள் நனைத்துச் செல்லும் கால்களில், குருதிக் கறை பிசு பிசுத்த ஒவ்வொரு காலையின் போதும்

பிணவாடையைக் காவிவரும் கடற்காற்றின், ஒவ்வொரு வீச்சின் போதும்.

அவர்களுக்குள் இனம்புரியாத ஒரு ஆலோசனை கொதித்து எழும்.

கிளாலிக் களத்தில் தளபதி சாள்ஸ் வீழ்ந்தபோது, அது அவர்களுக்குத் தாங்கமுடியாத பேரிழப்பாக ஆகிவிட்டது.

எல்லாவற்றுக்குமாகச் சேர்த்துப் பதிலடி கொடுக்க அவர்கள் துடித்துக்கொண்டிருந்தனர்.

வரதனுக்கும், மதனுக்கும் முந்திய அந்த 60 நாட்கள்...

அவர்கள் சக்கை வண்டிகளோடு பகைவனைத் துரத்துவதும், அவன் சண்டை பிடிக்காமலே தப்பி ஓடி விடுவதும், பின்னர் ஏமாற்றத்தோடு இவர்கள் திரும்பிச் செல்வதுமாகக் கழிந்த அந்த இரவுகளில்.

அவர்களில் ஒருவருக்காக தன்னை அனுப்பி பார்க்குமாறு நச்சரித்துக்கொண்டிருப்பார் கணேஸ்.

'டோரா' வை நொருக்குவதற்கான தாக்குதலின் திட்டம் தயாரிக்கப்பட்டபோது.

அந்தச் சாதனையின் சாதனையாளர்களுள் ஒருவனாகத் தான் போகவேண்டுமென்ற ஆதங்கம் அவனுக்கு.

பருத்தித்துறைக் கடலில் புவீந்திரனும், மணியரசனும் 15 நாட்களுக்கு மேல் காத்திருந்த காலத்திலும் அதே நச்சரிப்பு.

ஆனாலும், கணேஸ் இல்லாமலேயே அந்த இரண்டு தாக்குதல்களும் வெற்றிகரமாக முடிந்தபோதும் கூட உற்சாகம் குன்றாமல் அடுத்த தாக்குதலுக்கான காத்திருப்புக்களில், வேட்கையோடு அவனது நாட்கள் நகர்ந்தன. கூடவே கோபியும் இன்னும் சில கரும்புலிகளும்.

ஏற்கனவே இரண்டு விசைப்படகுகளை இழந்துவிட்ட எதிரி பின்வந்த நாட்களில் அதிக அவதானத்துடனேயே இயங்கினான்.

வரதன்-மதனுக்குப்போல, கண்டபின் தப்பி ஓடும் தந்திரத்தை அல்லாமல் -இவர்களின் கண்களில் தட்டுப்படுவதைத் தவிர்த்துவிடுவதையே தான், எதிரி தனது யுத்தியாகக் கையாண்டான்.

இப்படியாக - இலக்கை அடையாத துயரோடு இவர்கள் திரும்பி வருவதுகூட, பூநகரிக்குள் 'தவளைகள்' நுழையும் வரைதான் நீடித்தது.

கடலில் இரைதேடிவிட்டுக் கரையேறும் சமயங்களில், சக்கை வண்டிகளில் வரும் மற்றவர்கள், எங்கள் சண்டைப் படகுகளினூடு வேகமாக வளைத்துத் திருப்பி அலை கிளம்ப ஓடிக் காட்டுகிறபோது, கணேஸ் மட்டும் மெதுவாக ஓடி ஓரமாக வந்து, அமைதியாகக் கரையேறுவான்.

"இந்த மாதிரி ஓட உன்னால் முடியாதா?" என்று யாராவது கேட்டால் "எதிர்பாராம ஏதாவது நடந்திட்டால்...." என இழுத்து, "அநியாயமாக எல்லோருமே சாகாமல் ஆக்க பூர்வமாக ஏதாவது செய்யவேணும்" என்று தொடரும் அவன், "சம்பவம் ஆககூடாது மச்சான், சரித்திரம் ஆகோனும்" என்று முடிப்பான்.

இப்போது

'ஒப்பறேசன் தவளை' வரலாற்றுச் சமரில், நாகதேவன்துறை கடற்படைத் தளம் மீதான தாக்குதலில் முக்கிய பங்கேற்று, அந்த வீரமகன் சரித்திரமாகிவிட்டான்.

அன்றைய காலம் -

இந்திய விஸ்தரிப்புவாதிகளின் படைகளை எதிர்த்து தமிழீழம் போர்க்கோலம் பூண்டிருந்த எழுச்சி நாட்கள்.

அப்போது அவனுக்கு வயது பதின்நான்கு தான்.

சார மடிப்புக்குள் சேட்டை மறைத்துக் கட்டிக்கொண்டு, அம்மாவுக்கு போக்குக் காட்டி விட்டு வெளியேறுகின்றவனைப் பற்றி "தம்பி சந்தியில் போஸ்டர் ஒட்டிக்கொண்டு நிற்கிறான்" என்றோ "கடையில் சாப்பாட்டுப் பார்சல்கள் கட்டிக்கொண்டு அந்தப் பக்கமா போறான்" என்றோ யாராவது சொல்லுவார்கள்.

அம்மாவின் இதயம் வேகமாகத் துடிக்கும்.

அம்மாவுக்கும், நாகநாதி அய்யாவிற்கும் வாரிசாக 21 வருடங்களுக்கு முன்னர் -பெப்ரவரி 13-ஆம் நாளில் -பிறந்தவன் ஜீவநேசன்.

இத்தனை வருடங்களாக பாசத்தைக் கொட்டி வளர்த்தெடுத்த தாயல்லவா..... அவள் துடித்துப் போனாள். அவள் தான் துடித்தாளே தவிர அவன் ஓய்ந்ததில்லை.

திடீரென ஒரு காலை, அவசர அவசரமாக ஓடிவந்த அயல்வீட்டுக்காரர் ஒருவர், கடையில் சாப்பாட்டுப் பொதிகள் வாங்கிய ஜீவனை யாரோ காட்டிக்கொடுத்து, இந்தியர்கள் இழுத்துச் செல்கின்றார்கள் என்ற செய்தியைச் சொன்னபோது அம்மா இடிந்துபோனாள். அந்தவீடு சாவீடு போலாகிவிட்டது. அழுகுரல் நவற்கிரி கிராமத்தை நிறைந்தது.

காங்கேசன்துறை இந்தியப்படைச் சிறையில் அடுத்த ஒரு வருடம் கழிந்தது. பார்க்கப்போகின்ற அப்பாவிடம் ஊர்ப்புதினங்களைத் தான் விசாரித்தானேயல்லாமல், வீட்டுப் புதினங்களையல்ல. மிகவும் அமைதியானவனான அந்தச் சிறுவனின் உள்ளத்தில் ஆவேசப் புயலொன்று அப்போதுதான் மையம் கொண்டது.

இந்தியர்கள் வெளியேற்றப்பட்டபோது, அவர்கள் விடுவித்து விட்டுப் போன கணேஸ், ஐந்தாறு நாட்கள் அம்மாவோடு இருந்துவிட்டு முழுமையாகவே இயக்கத்திற்குப் போய்விட்டான்.

அம்மா துயரத்தோடு கடவுளை நேர்ந்துகொண்டிருக்க, அந்த விடுதலைப் புலி துப்பாகியோடு 'போர் உலா' வந்தான்.

வட தமிழீழப் போர் அரங்கில் அநேகமான எல்லா முனைகளிலும் அவனுடைய துப்பாக்கி கனன்றிருக்கிறது.

கோட்டையை முற்றுகையிட்டிருந்தபோது, அதை முறியடிக்க வந்தவர்களை மண்டை தீவில் எதிர்கொண்டபோது, மாங்குளத்தில் படைமுகாம் அழித்தபோது, 'வன்னி விக்கிரம' என்று படையெடுத்தவர்களைத் தோல்வியுறச் செய்தபோது, தாயகத்தின் இதயத்தைப் பாதுகாத்து மணலாற்றில் 'மின்னலை'த் தெறிக்கச் செய்தபோது, ஆனையிறவில் 'பலவேகய'வில் புறப்பட்டவர்களை 'ஆமை வேகய'வில் நகரச் செய்தபோது, மன்னாரில் படையெடுத்தவர்களுக்குப் பாடையெடுத்த பதுங்கித் தாக்குதலின்போது -இப்படியாக எங்கும், எல்லாச் சமர்களிலும் கணேஸ் சுவடு பதித்தான்.



கடற்கரும்புலி மேஜர் கணேஸ்
நாகநாதி ஜீவநேசன்
நவக்கிரி, புத்தூர் மேற்கு, புத்தூர்.

அந்தக் காலத்திலேயே, ஒரு கரும்புலித் தாக்குதலுக்கான கனவு அவனது இதயத்துடிப்போடு கலந்துதான் இருந்தது.

இப்படியிருக்கையில் ஒரு நாள்.....

அது கடந்த வருடத்தின் இறுதி... (1992)

பலாலியிலிருந்து தெல்லிப்பளை நோக்கி முன்னேறிய 'ஒப்பரேசன் பூமியதிர்ச்சி'யை நிறுத்த நடந்த சண்டையின்போது -இடது முழங்காலுக்குக் கீழே துளைத்த ஒரு ரவை முக்கிய நரம்பொன்றை அறுத்துச் சென்றுவிட்டது.

> **கடற் கரும்புலி மேஜர் கணேஸ்**
> காலில்லாமல் போனமைக்காக அவன் அழுதான்: போராட்டத்தில் காலை இழந்துபோனமைக்காக அல்ல. அருகில் நின்ற தோழனின் கைகளைப் பற்றி விம்மினான். " இனி எப்பிடியடா நான் சண்டைக்குப் போறது? "

சண்டை முனையில் மருத்துவ வசதியின்மையால் -பெருமளவு இரத்தம் வெளியேறிவிட, மயக்கமுற்று எடுத்துச் செல்லப்பட்ட கணேஸ் -

இரண்டு நாட்களுக்குப் பின்பு யாழ்ப்பாண மருத்துவமனையின் கட்டிலொன்றில், வெடிபட்ட இடத்துக்குக் கீழே அந்தக் கால் அகற்றப்பட்டுவிட்ட நிலையில் அடக்கிக் கொள்ள முடியாத அழுகையோடு படுத்திருந்தான்.

போராட்டத்தில் காலை இழந்தமைக்காக அவன் கண்ணீரைச் சிந்தவில்லை. அருகில் நின்ற நண்பனின் கையைப் பற்றி அவன் விம்மினான்,. "இனி எப்படியடா நான் சண்டைக்குப் போறது....?"

கணேஸ்!

எவ்வளவு மென்மையானவனாக அவன் வாழ்ந்தான்! எவரோடும் சச்சரவுக்குப் போகாமல், எல்லோரையும் சமாளித்துக் கொள்வானே! என்னதான் பிரச்சினையென்றாலும் விட்டுக் கொடுத்து விட்டு விலகிக் கொண்டானே தவிர, அவன் சண்டை பிடித்துப் பெரிதாக்கியிருக்க மாட்டான். அவன் எவ்வளவோ பொறுமைசாலியாக இருந்தான்; எல்லா விடயங்களிலுமே.

அவனை மேலோட்டமாகப் பார்க்கின்ற எவரும், எதுவுமே தெரியாத அப்பாவியென ஒரு கணிப்பீட்டை வைப்பார்கள்.

விசயம் தெரியாத நாலுபேரை இருத்திவிட்டு, எல்லாம் தெரிந்த மேதாவிகளைப் போல புழுகித் தள்ளும் நண்பர்களைத் தன்னிடம் வசமாகச் சிக்க வைத்து -"தேவையில்லாமல் வாயக் குடுத்து மாட்டிக் கொண்டோமே" என்று தலையைப் பிய்த்துக் கொண்டு எழுந்து போகின்ற அளவுக்கு அவன் கொண்டுபோய் விடுவான்.

இருப்பினும், தனக்குத் தெரியாத -அது தொடர்பான பூரண அறிவு இல்லாத -எந்த விடயங்கள் பற்றியும் அவன் வாய் திறக்கவே மாட்டான். வெட்கப்படாமல் - விசயம் தெரிந்தவர்களிடம் இருந்து விசயங்களைத் தெரிந்து கொள்வதில் அவனுக்கு ஆர்வம் அதிகம்.

தான் செய்ய நினைக்கும் காரியங்களைச் செய்து முடிக்கும் வரை முயற்சி எடுப்பதும், காலிழந்தவன் எனக் கருணை காட்டி, மற்றவர்கள் உதவ முன்வந்தாலும் புன்சிரிப்போடு மறுத்துவிட்டு தானே எல்லாவற்றையும் செய்துமுடிப்பதும். ஒரு காலில்லாமலும் கூட முகாமிலிருக்கும் முழுமனிதர்கள் செய்யும் வேலைகளிலெல்லாம் தன்னையும் ஈடுபடுத்த எத்தனிப்பதும் அவனது சிறப்பான அம்சங்கள். அவை நாங்கள் அவனிடம் படிக்க வேண்டிய பாடங்கள்.

காயம் மாறி - ஜெய்ப்பூர் காலோடு துயரத்தையும் சுமந்து -மருத்தவ மனையிலிருந்து வந்தவனுக்கு, யாழ் மாவட்ட தாக்குதற் படைப் பிரிவில் நிதி வேலை கொடுக்கப்பட்டபோது, சண்டைக்குப் போகவேண்டுமென தளபதியோடு சண்டை பிடித்து, ஆனையிறவுக்குப் போனதும் -

அகன்ற பாத்திரத்தில் சோறு குழைத்து ஐந்தாறு பேர் சேர்ந்து நாங்கள் சாப்பிடும்போது - வெறுமையாகும் பாத்திரத்தை நிரப்பிவர வேறு எவரையும் பாராமல், தானே தூக்கிக் கொண்டு எழுவதும் -

ஜெயராஜ் முகாமிலிருந்த 'அருகிருக்கை' பொருத்திய B. S. A மோட்டார் சைக்கிளில் அவனை இருத்தி நாங்கள் தள்ளி விளையாடுகையில் -வளைத்துத் திருப்பி ஓட வீடு வசதி காணாதென்று முற்றத்துக் கிறக்கி, பின் முற்றமும் வசதி காணாதென்று வீதிக் கெடுத்தபோது, தளபதியைக் கண்டு நாங்கள் தடுமாற, வேலியோடு மோதி வண்டி கவிழ, தலையில் நல்ல அடிபட்டவன் எழுந்து பிடரியைச் சொறிந்து கொண்டு நின்றதும் - தண்டனை தந்தபோது கும்மாளம் இட்டபடி அவனும் சேர்ந்து செய்ததும் -

கிளாலியில் எம்மவர்களை வேட்டையாட வரும் எதிரியை நாங்கள் வேட்டையாடும் கடற்சண்டைகளில், 'நேவி'யைக் கலைத்து விரட்டும் புலிகளின் விசைப்படகுகளிற்கு அவன் ஓட்டியாய் இருந்ததும் -

ஐந்து நாள் ஓய்வு தந்து வீட்டுக்கு அனுப்ப-'இன்று படகுச் சேவை' என்று நாளேட்டின் செய்தியைப் பார்த்துவிட்டு - பாதுகாப்புப் பணியில் ஈடுபட இரண்டாம் நாளே புறப்பட்டு அவன் கிளாலிக்கு வந்ததும் - அப்போதெல்லாம் கரும்புலித் தாக்குதல் ஒன்று செய்ய வேண்டும் என்ற வேட்கையை தனது மனக்குகைக்குள் அவன் சுமந்து கொண்டு திரிந்ததும் -

நாங்கள் அடிக்கடி அவனைப் பற்றிப் பேசிக்கொள்ள எங்களுக்குள் உயிர்வாழும் அவனது நினைவுகள்.

அவனது வீரம்; அவனது தியாகம்; அவனது முயற்சி; அவனது விட்டுக் கொடுப்பு; அவனது முன்மாதிரி; ஒட்டுமொத்தமாக அவனே எப்போதும் நினைவு கொள்ள வேண்டிய எடுத்துக் காட்டுகள்.

கணேசா!

உனது வீட்டுக்கு நீ போய் வந்த அந்த இறுதிப் பயணம்.

அதை நினைக்கும்போதெல்லாம் உன் அம்மாவின் விழி ஓரங்களில் நீரின் கசிவு.

"பழஞ்சோறு குழைச்சுத் தீத்தி விடணை" என்று சாப்பிட்டாயாம்.

ஒருநாளுமில்லாததுபோல, அப்பாவையும் அம்மாவையும் கொண்டு நீர் அள்ளிக் குளித்தாயாம். ■

## மேஜர் சோதியா...

தெளிவான விளக்கம் மணிக்கணக்கில் சோதியக்கா தருவார்.

சோதியாக்காவின் விளக்கத்தால் தெளிவடையும் நாங்ககள் ஒருவரை ஒருவர் பார்த்து அர்த்தமான சிரிப்பொன்றைச் சிரித்துவிட்டு, "இனிச் சண்டை பிடிக்கமாட்டம்" எனச் சோதியாக்காவிடம் சொல்லிவிட்டு தெளிந்த மனத்துடன் எழுந்து செல்வோம். அந்த மூன்று வருட காலத்தில் நான் சோதியாக்காவிடம் நிறையப் படித்துக் கொண்டேன். எங்களுக்கு அவர் நிறைய அறிவுரைகளைக் கூறுவார். 'குழப்படிகள்' என்று கொஞ்சப்பேர் இருந்தோம். இவர்களில் கப்டன் ரஜனி, கப்டன் தமயந்தி, கப்டன் ஆசா, மேஜர் தாரணி, 2 ஆம் லெப். மாலதி என்று பலர் அடங்குவர். இந்தக் குழப்படிகளைத் தனது அன்பான கண்டிப்புக்களாலும் அறிவுரைகளாலும் மேஜராக, கப்டனாக, லெப்டினன்டாக வளர்த்து விட்டவரும் வளர்வதற்குக் காரணமாக இருந்தவரும் மேஜர் சோதியாக்கா தான்.
எங்களின் தாயாக, தாதியாக, ஆசிரியையாக இருந்தவர் சோதியாக்கா, இவ்வளவுக்கும் அப்போது சோதியாக்கா சாதாரண போராளியாகத்தான் இருந்தார். வழமையாக எங்களுக்கென பொறுப்பாக விடப்படும் போராளிதான் எல்லாவற்றிலும் பொறுப்பாகச் செயல்படுவார். ஆனால்... எங்களின் சோதியாக்கா வித்தியாசமானவர்... ■

■ ரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நான்காம் ஆண்டு நினைவில்

# மேஜர் சோதியா

**1985**இல் இந்தியாவில் ஒரு பயிற்சிப் பாசறையில்... அம்மாவைப் பிரிந்து வந்து சில நாட்கள், கடல் பயணத்தால் உண்டான பதற்றம், பயிற்சி எடுப்பதற்காக நாம் அனுப்பப் பட்ட மலைப் பிரதேசம், இந்த மூன்றையுமே நான் இதற்கு முன்னர் சந்தித்திருக்கவில்லை. இந்தத் தாக்கத்தின் விளைவாக எனக்குக் காய்ச்சல் வந்து விட்டது.

எமது பயிற்சிப் பாசறையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு கொட்டிலுள் கம்பளிப் போர்வையால் போர்த்தபடி "அம்மா, அம்மா" என முனகியவாறு படுத்திருந்தேன். மெதுவாக ஒரு கை என் போர்வையை விலக்கி, உடல் வெப்ப நிலையைப் பரிசோதிப்பதற்காக என் கழுத்தில் பதிந்தது. கண்களைத் திறந்து பார்த்தேன். ஒரு அக்கா என் முன் நின்றார்.

"என்னம்மா செய்யுது? என்ன. சாப்பிட்டீங்களம்மா? காய்ச்சல் தானே பிள்ளைக்கு? இப்ப மருந்து தாறன். காய்ச்சல் உடனே பறந்து போடும்" என்றார்.

அன்பான அம்மாவாகவும் கனிவான வைத்தியராகவும் நான் அன்று (மகளிர் படையணியின் முதலாவது தளபதியான) மேஜர் சோதியாக்காவைச் சந்தித்தேன்.

பயிற்சிப் பாசறையில் இருந்தோரில், நான் உட்பட பெரும்பாலானோர் வயதில் சிறியவர்களாக இருந்தோம். அந்தச் சிறியவர்களுக்கு சோதியாக்கா அம்மாவாக விளங்கினார். நாம் எப்போதும் சோதியாக்காவைச் சுற்றி நின்று அவருக்கு கரைச்சல் கொடுத்துக்கொண்டு நிற்போம். அவரின் மடியில்கூடப் படுத்திருப்போம். ஒரு நாள்கூட எங்கள் சோதியாக்கா எங்கள் மேல் சினந்து வீழ்ந்தது கிடையாது.

பயிற்சிப் பாசறையில் எமக்கு நீண்ட நேரம் பயிற்சிகள் நடக்கும். ஓடுவதில் இருந்து கயிறு ஏறுதல், மலை ஏறுதல் என்றெல்லாம் பயிற்சி நடக்கும். பயிற்சிகள் முடிந்ததும் எங்களது கொட்டில்களை நோக்கி ஓடிவருவோம். கடுமையான பயிற்சி காரணமாக உடம்பெல்லாம் பச்சைப்புண்ணாக நோகும். வந்ததும் வராததுமாக கொட்டில்களுக்கு முன்னால் உள்ள மரங்களின் கீழ் வீழ்ந்து படுத்துவிடுவோம். சிலர் கிடைக்கின்ற கொஞ்ச நேரத்தில் நித்திரை கொண்டும் விடுவார்கள். இவ்வளவு பயிற்சிகளையும் எங்களுடன் சேர்ந்து எடுத்த சோதியாக்கா படுப்பாரா? இல்லை. அவருக்கு படுப்பதற்கோ, களைப்பாறுவதற்கோ நேரமே கிடையாது. எங்கள் பயிற்சியாளர்களில் காய்ச்சல், கால்நோ, கைநோ, வயிற்றுக்குத்து என்றும் கழுத்து, கால், கை உளுக்கிவிட்டது என்றும் படுத்திருப்பவர்களுக்கு ஓடி ஓடி வைத்தியம் செய்வார். நோ, உளுக்கு என்றவர்களுக்கு நோ எண்ணெய் போட்டுத் தேய்ப்பார். அதே நேரம் அவரின் நெற்றியால் வியர்வை சிந்தும். தனது கையால் அந்த வியர்வையை வீசி எறிந்துவிட்டு தனது கடமையைத் தொடர்வார். அதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு கொட்டில் கொட்டிலாகச் சென்று, முதல் நாள் வருத்தமென்று படுத்திருந்த தோழிகளுக்கு உணவு கொடுத்து, மருந்து கொடுத்துவிட்டு விரைந்து வருவார். சோதியாக்காவின் நடை மிகவும் வேகமானது. ஆள் நல்ல உயரம். கால்களும் நீளமானவை. கால்களை எப்போதும் எட்டி எட்டி வைத்து வேகமாகத் தான் நடப்பார்.

நான் சோதியக்காவின் வேகத்தையும் அவர் வியர்வை சிந்திச் சிந்தி தோளில் பயிற்சிக்குரிய மரத் துப்பாக்கியுடன் சகதோழிகளுக்குச் செய்யும் சேவையையும் பார்த்துவிட்டு எனது தோழி கப்டன் ரஜனியிடம் கூறுவேன். "பாவமடி சோதியக்கா". அவளும் "ஓமடி" என்பாள்.

உடனடியாக செய்யவேண்டிய முதலுதவி சிகிச்சைகள் முடிந்ததும் சோதியக்கா மருத்துவத்துக்காக ஒதுக்கப்பட்ட கொட்டிலுக்குள் போவார். அங்கே மருந்து எடுப்பதற்கு வரிசையில் நிற்பார்கள். நாங்கள் எல்லோரும் போய் சாப்பிட்டுவிட்டு வருவோம். மருத்துவக் கொட்டிலுக்குள் போய் எட்டிப் பார்ப்போம். சோதியக்கா மருந்து கொடுத்துக் கொண்டிருப்பார்.



மேஜர் சோதியாவுடன் சக போராளி

"அக்கா வகுப்பு தொடங்கப்போகுது. நீங்கள் சாப்பிடவில்லையா? போய்ச் சாப்பிடுங்கோ அக்கா" என்போம். "இஞ்சை நிற்கின்ற இவ்வளவு பேருக்கும் மருந்தைக் குடுத்து விட்டு போறேன்" என்பார். "அப்ப நாங்கள் சாப்பாடு எடுத்து வரவா அக்கா"? என்றால், "அடிவாங்காமல் போங்க பார்ப்போம்" என்பார். (எப்போதுமே சோதியாக்கா தனக்குரிய பணிகளை மற்றவர்களைக் கொண்டு ஒரு போதும் செய்விக்கவே மாட்டார்.) நாங்கள் சோதியாக்கா சொன்னதையும் மீறி சாப்பாடு எடுத்து வந்து கொடுப்போம்.

அந்தச் சாப்பாட்டைச் சாப்பிட நேரமில்லாது வைத்து மூடி விட்டு வருவார். சிலவேளை நின்ற நிலையில் சாப்பிட்டு விட்டு, வகுப்புக்கு வருவார். எப்போதும் சோதியாக்கா கடைசியாக வகுப்புக்கு வந்து ஆசிரியரிடம் மன்னிப்புக் கேட்டு, வகுப்பறையில் இருப்பார். வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போதுகூட ஆசிரியரிடம் சொல்லிவிட்டு கொட்டில்களில் வருத்தமாக படுத்திருப்பவர்களைச் சென்று பார்த்துவிட்டு வருவார்.

சோதியாக்கா எங்களுடன்தான் பயிற்சி எடுத்தார். எங்கள் அனைவருக்கும் இருந்த அதே களை, உடல் அலுப்பு அவவுக்கும் இருந்தது தான். ஆனால் அவர் படுத்தாரா? களைப்பாறினாரா? ஓய்வு எடுத்தாரா? இல்லை. இல்லவே இல்லை. அப்போதெல்லாம் நாங்கள் சோதியாக்காவைப் பார்த்து "பாவமடி சோதியாக்கா" என்று கதைப்போம். அவ்வளவு தான். அதற்கு மேல் யோசித்துப் பார்க்க எங்களுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. சிந்தித்துப் பார்க்கவும் முடியவில்லை. இப்போது, அந்த சோதி வடிவமான சோதியக்காவையும் ஓய்வு உறக்கமின்றி அவர் செய்த வேலைகளையும் சேவைகளையும் நினைக்கின்ற போது உண்மையிலேயே என் கண்கள் தானாகவே நீரைச் சொரிகின்றன. எப்படி சோதியாக்காவால் தன்னை வருத்தி இப்படி எல்லாம் செய்ய முடிந்தது? 'ஒரு உண்மையான விடுதலை வீராங்கனை தன்னலமற்றவள்' என்பதை எங்கள் சோதியாக்கா தன் வாழ்க்கை மூலம் நிருபித்துக் காட்டிவிட்டாள்.

நாங்கள் தமிழீழத்துக்கு வந்த பின்னர் வன்னிப் பிராந்தியத்தில் ஒரு அடர்ந்த காட்டின் நடுவிலே தளம் அமைத்திருந்தோம். அங்கே எமக்கு ஓர் கிணறு தேவைப்பட்டது. நாங்களே கிணற்றை வெட்டினோம். அந்த நேரம் எமக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. கஞ்சியையும், ரொட்டியையும் சாப்பிட்டுச் சாப்பிட்டுக் கிணறு வெட்டினோம். தண்ணீரோ வருவதாகத் தெரியவில்லை. இதனால் மிகவும் சோர்வடைந்து போன நாங்கள் அந்தக் கடினமான சூழலில் தொடர்ந்து நின்று பிடிக்கும் வலுவை இழக்கத் தொடங்கினோம். அதன் விளைவாக தெளிவில்லாத கதைகளை கதைத்தோம். இதை அவதானித்த சோதியாக்கா கதைத்த எங்களை வரையும் கூப்பிட்டு, எங்களின் மனம் தெளிகின்ற அளவுக்கு போராட்டத்தைப் பற்றிய விளக்கம் தந்தார். நாங்கள் சோதியாக்காவின் நீண்ட விளக்கத்தினால் புதுவேகம் பெற்று புத்துணர்ச்சியோடு மீண்டும் சோதியாக்காவோடு சேர்ந்து நின்று கிணற்றைத் தோண்டி தண்ணீரையும் கண்டோம். துள்ளி எழுந்து சோதியாக்காவின் தோளில் தொங்கிக் கொண்டு நின்று கூக்குரலிட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்து குதூகலித்தோம்

காட்டில் இருக்கும் காலத்தில் எங்களுக்குரிய உணவுகளை நீண்ட தூரத்தில் இருந்து மூடைகளாக தலையிலும், தோளிலும் சுமந்துகொண்டு வந்து தளத்தில் சேர்த்தோம். மூடைகளைச் சுமந்து வர எல்லோருமே செல்வோம். சோதியாக்காவும் எங்களுடன் வருவார். அரிசி, மா, சீனி என்றும் உப்பு புளி, பருப்பு என்றும் மூடை மூடையாகச் சுமந்து வந்தோம். சோதியக்கா எல்லோருடைய தலைகளிலும் பாரங்குறைந்த மூடைகளைத் தூக்கி வைத்து விடுவார். சோதியக்கா மிகவும் உயரம் என்றதால் எல்லோரும் பொதிகளைத் தூக்கித் தலையில் வைக்கச் சோதியாக்காவையே அழைப்போம். மிகவும் களைத்தால் வரும் வழியில் மூடைகளைக் கீழே போட்டுவிட்டு இளைப்பாறுவோம். சோதியாக்கா வந்து மீண்டும் தூக்கி விடுவார். தளத்துக்கு வந்ததும் மூடைகளைப் போட்டுவிட்டு "களத்துக்கு வந்ததும் மூடைகளைப் போட்டுவிட்டு "கழுத்துக்கை பிடிக்குது. தோள் நோவுது" என்றபடி மரங்களின் கீழ் இருப்பார். சோதியாக்காவுக்கு அந்த மரத்தின் அமைவு சரியான விருப்பம். அதனால் அந்த மரத்தின் கீழேதான் வழமையாக இருப்பார்.

ஒரு நாள் நானும் கப்டன் ரஜனியும் உப்பு மூடைகள் தூக்கி வந்தோம். இரண்டு பேருக்கும் கழுத்துக்குள் உளுக்கிவிட்டது. விக்கி விக்கி அழத் தொடங்கினோம். எங்களுக்கு எப்போதாவது ஏதாவது துன்பம் என்றால் சோதியாக்காவுக்கு அருகில்தான் இருப்போம். அன்றும் அதே மாதிரித்தான் கப்டன் ரஜனி சொன்னாள். "நாங்கள் துவக்கு எடுத்து ஆமியோட சண்டை பிடிக்க மட்டும்தான் வந்தனாங்கள். இப்படி மூட்டை தூக்கவேணும், கிணறுவெட்ட வேணும் எண்டு தெரிந்திருந்தால் வந்திருக்கவே மாட்டோம்" என்றாள். அதற்கு நானும் "ஓமடி நானும் அப்படி நினைச்சுத்தான் வந்தனான்" என்றேன். எங்களின் இந்த உரையாடலை மேலே தொடராமல் இடைநிறுத்தினார் சோதியாக்கா. "இஞ்ச நீங்கள் ரெண்டு பேரும் ஆகச் சின்னப் பிள்ளைகள் மாதிரிக் கதைக் காதையுங்கோ. போராட்டம் எண்டா கஸ்ரம்தான். முள்ளும், கல்லும் நிறைஞ்ச பாதையில போய்த்தான் நாங்க தமிழீழம் பிடிக்க வேணும்" என்றார். நான் உடனே சொன்னேன், "ஓமக்கா நீங்க சொல்லுறது சரிதான். நாங்கள் மூடை தூக்கப் போற ஒற்றையடிப் பாதையில காலில குத்துற கல்லும் முள்ளும் எங்களோடையே சேர்ந்து வருது. அதோட பெரிய முள்ளெல்லாம் எங்களைப் பாவம் பார்த்துப் போக வேண்டாமெண்டு பிடிச்சு பிடிச்சு இழுக்குதுகள்" என்றேன். உடனே சோதியாக்காவுக்கு கோபத்தில் முகம் சிவந்தது. "நான் சீரியசாகக் கதைக்கிறன், நீ பகிடி விடுறாய் போ, எனக்கு முன்னால் நிற்காதே" என்றார். "இல்லையக்கா இனி மேல் நான் இப்பிடிப் பகிடி விடமாட்டேன்" எனக் கெஞ்சிய போது தொடர்ந்து எங்களுக்குப் போராட்டத்தைப் பற்றி விளக்கமளித்தார்.

"உதாரணமாக நாங்க வீட்டில இருக்கிற நேரம் பள்ளிக்கூடத்தில முதலாம் வகுப்பு படிச்சுப் போட்டு திடீரெண்டு பத்தாம் வகுப்புக்குப் போறதில்லை. படிப்படியா ஒவ்வொரு வகுப்பாய் படிச்சு முன்னேறிப் போவம். அதே மாதிரித்தான் எங்கட போராட்டமும். இப்ப நடந்து போய்த் தலையில மூடை தூக்கிறம். கொஞ்சக் காலத்தில ட்ராக்டரில கொண்டு வருவம். இப்படியே நாங்க வளர்ச்சி அடைஞ்சு எங்கட தமிழீழத்தை அடைவம். அதுக்கிடையில நீங்க குழப்பமான கதைகளைக் கதைச்சு உங்களை நீங்களே குழப்பாதேங்கோ" என்று தொடங்கி ஒரு நீண்ட விளக்கத்தை எனக்கும் ரஜனிக்கும் சோதியாக்கா கூறினார். சோதியாக்காவின் விளக்கத்தால் நாங்கள் மிகவும் தெளிவடைந்தோம். பின் நானும் ரஜனியும் உணவு மூடைகளைச் சுமப்பதிலும் கிணறு வெட்டுவதிலும் முன்னுக்கு நின்றோம். இதற்கு முழு காரணமாக இருந்தவர் எங்களின் சோதியாக்காதான்.

முகாமில் இருக்கும் போது, காடுகளில் பாசறை அமைத்து வாழ்ந்த போது நாங்கள் எங்களுக்குள் ஒருவருடன் ஒருவர் நன்றாகச் சண்டை பிடிப்போம். சண்டை பிடித்தபின் மூன்று, நான்கு நாட்களுக்கு கதைக்காமல் ஒருவரை ஒருவர் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொண்டு நிற்போம். இயக்கத்தில் இணைந்து அப்போது கொஞ்சக் காலம் தான். வீட்டுப் பழக்கங்கள் பெரும்பாலும் அப்படியே தான் இருந்தன. வீட்டில் தம்பி, தங்கையுடன் குத்துப்பட்டு, கூத்தாடி, சண்டை பிடித்துச் சண்டை பிடித்துப் பழகிப் போனதுதானே. இயக்கத்தில் வந்ததும் ஒரு கூட்டு வாழ்க்கையைச் சந்தித்தோம். இந்த வாழ்க்கையை இதற்கு முன் எப்போதுமே சந்தித்திருக்கவில்லைத்தானே. வீட்டில் ஐந்து, ஆறு பேருடன் இருக்கும் போதே குத்துப்பட்டு சண்டை பிடித்த நாங்கள், நூற்றுக்கணக்கானவர்களுடன் ஒன்றாக இருந்தால் எப்படி இருப்போம்?

சண்டை பிடிப்பவர்களையும், ஒருவரோடொருவர் கதைக்காமல் இருப்பவர்களையும் சோதியாக்கா கூப்பிட்டு அறிவுரைகள் கூறிக் கண்டிப்பார். "இஞ்ச வாங்கோ ரெண்டு பேரும். ஏன் ஒருத்தரோடு ஒருத்தர் கதைக்காமல் இருக்கிறியள்? இந்தப் பழக்கம் எல்லாத்தையும் விட்டிட்டு வந்திட்டம். ஒரு இலட்சியத்துக்காகத்தான் எல்லாரும் சேர்ந்திருக்கிறம். இஞ்ச அம்மா, அப்பா பந்த பாசங்கள் எல்லாமே ஒருத்தருக்கு ஒருத்தர் நாங்கதான். ஒருத்தரை ஒருத்தர் தெரியாத நாங்க ஏன் ஒண்டாயிருக்கிறம்? எங்கட மண்ணில் இருந்து அன்னியனைத் துரத்தியடிச்சு எங்கட மண்ணை மீட்டெடுக்கத்தானே"? இப்படியே

தொடர்ச்சி ௯ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






பொன் கொழிக்கும் வயல் நிலங்கள். அதனுடன் மலைகளும், அருவிகளும் என தன்னகத்தே செழிப்புறக் கொண்டது தென்தமிழீழம்.

அடர்ந்த காடு. சிள்வண்டின் இரைச்சலை இடையிடையே தடுக்குமுகமாக ஓசையிடும் வன விலங்குகள். அவற்றையும் மீறி எதிரியின் எறிகணைகள், துப்பாக்கிச் சன்னங்கள்.

இவற்றுக்கு மத்தியில் தற்காலிகமாக அமைக்கப் பெற்ற பாசறை ஒன்றில் வளர்மதி. அவள் கையில் ஓர் கடிதம். கடிதத்துக்குரிய போராளி அவள் முன்.

"இந்தாம்மா உன்ட அப்பர் செத்துப் போச்சி எண்டு காகிதம் வந்து இரிக்கு" என்றபடி கொடுக்க, பெற்றுக் கொண்ட போராளி மௌனமாகக் கண்ணீர் விடுகிறாள். காரணம் அவள் மட்டுமல்ல, அவளைப் போல அனைத்துப் போராளிகளுமே இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்ட பின்னர் பெற்றோரின் நிலையைச் சிறிதளவுகூட அறியாத நிலையிலேயே இருந்தனர்.

அழுதவாறு தன்முன் நிற்கும் அப்பிள்ளையைப் பார்த்து "படிச்சிட்டுக் கத்து" என்று முகத்தில் சிறிதளவுகூட மாறுதலில்லாமல் கடுமையாகவே பதிலளிக்கின்றாள் வளர்மதி.

கடிதம் பிரிக்கப்பட, அதில் பல மாதங்களின் பின்னர் தந்தையின் சுகச்செய்தியே தனக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதைக் கண்டவுடன் அழுகையும் சிரிப்புமாகக் காட்சி தருகின்றாள் அப்போராளி.

வளர்மதியின் இதழிலும் சிரிப்பு வருகின்றது. "பாசத்தைப் பார், ஒழுகுது. வந்திட்டினம் போராட. உன்னைச் சோதிக்கத்தான் இப்படிச் சொன்னனான். என்ன தான் இடைஞ்சல் வந்தாலும் நாங்க கெலங்கக் கூடாது. கவலைப்படுறதுக்காம்மா நாங்க இயக்கத்தில சேர்ந்தனாங்க"? என்றவாறு எழுந்து கொள்கின்றாள்.

மேஜர் வளர்மதி! அவளது இயற் பெயர் சாந்தி. பெயருக்கும் அவளுக்கும் தான் என்ன பொருத்தம்! அமைதியின் உருவம். கண்களில் ஒருவித ஒளி. உறுதியான நீண்ட உடல். மனமும்கூட. கலகலப்பான சுபாவம் கொண்டவள்தான். ஆனாலும் அதற்குக்கூட ஒரு வரையறையை வகுத்துக் கொண்டவள். மக்களுடன் மகளாக, பெரியவர்களுடன் பணிவாக, சிறியவர்களுடன் அன்பாகப் பழகுவதற்கு ஏற்ப தன்னை மாற்றியமைத்துக் கொண்டவள்.

இராணுவ ஆக்கிரமிப்பினால் அழிவுற்று சாம்பல் பூத்த மேடாகக் காட்சியளிக்கும் பல ஊர்களில் ஒன்றான கண்ணகிபுரம் -தியாவட்டவான் பகுதியைத் தனது பிறப்பிடமாகக் கொண்டவள். காகிதத் தொழிற்சாலைக்கு மிகச் சமீபமாகவே அவ்வூர் அமைந்திருந்தது. ஒருபுறம் தமிழரின் குடியிருப்புக்கள். மறுபுறம் இசுலாமியக் குடியிருப்புக்கள் என அமையப் பெற்றிருந்தது.

முத்துப்பிள்ளை, செல்லத்துரையின் கடைசிப் பெண் இவள். 01. 06. 1970 இல் பிறந்தாள். ஒரு வயது நடக்கும் போது கொடிய நோயிடம் தந்தையைப் பறிகொடுத்தாள். இறப்புக்குப் பின்னர் குடும்பப் பொறுப்பைச் சுமந்து கொண்டாள். இவள் தமிழ் மகாவித்தியாலயத்தில் தனது கல்வியை பெற்றுக் கொண்டாள்.

நான்கு பெண் சகோதரிகளினதும் ஆறு ஆண் சகோதரர்களினதும் அணைப்பில் மிகவும் செல்லமாக வளர்ந்து வந்தாள் வளர்மதி. இவளின் குடும்பமே இயக்கத்துக்கெனத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டது.

இராணுவத்தினரால், புலிகளுடன் மோத முடியாத சந்தர்ப்பங்களில் பொதுமக்கள்தான் அவர்களுடைய பலிக்கடாக்கள் ஆயினர். நாள்தோறும் வெட்டுக்களும், சூடுகளும், கைதுகளும்... தமது வெறி தீர்ந்த பின்னர் விலகுவார்கள்.


இவளின் குடும்பமும் பல துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. சொந்தமான ஐந்து வீடுகள் எரிக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. துன்பங்களின் படிகளில் தான் விடுதலையின் வேகம் உயரும் என்பதை சிங்கள ஆதிக்கம் உணர்ந்து கொள்ளாதது எவ்வளவு வேடிக்கையானது! ஒரு சகோதரன் முழு நேரமும் காட்டினுள் புலிகளுடனேயே இருந்து உதவி செய்தார். இரு ஆண் சகோதரர்கள் போராளிகளாக மாறினர். விடுதலையின் வேகத்தினைத் தாங்க முடியாத இராணுவம் காட்டிக் கொடுக்கும் கயவரின் துணையுடன் 1988 இல் ஒரு அண்ணனை வெட்டிக் கொன்றது. 1990 இல், திருமணமான ஒரு அண்ணனைச் சிறையில் அடைத்தது. பெண் பிள்ளைகளின் நிலையை எண்ணிக் கலங்கிய தாய், இறகினுள் குஞ்சுகளை பொத்தி வைக்கும் தாய்க் கோழியைப் போல தன் பெண் குழந்தைகளுடன் காட்டுக்குள் ஓடி ஒளித்த நாட்கள் அனேகம். ஆனாலும் வளர்மதியின் போராட்டம் தொடர்பான செயற்பாடுகளை அத்தாய் கூட அறிந்திருக்கவில்லை. அவள் போராளியாக மாறிய பின்னரே அனைத்தையும் புரிந்து கொண்டாள். அடிக்கடி நிகழும் கலவரங்களினால் ஒன்பதாம் வகுப்புடன் தனது கல்வியை நிறுத்திய சாந்தி, தையல் கலையிலும் பாய் அடிப்பதிலும் தேர்ச்சி பெற்றாள். இவற்றின் நடுவிலும் அவள் பணி தொடர்ந்தது. போராளியாக இணைவதைவிட போராட்டத்துக்கு ஆதரவாக ஊருக்குள்ளே உலாவுவது தான் அங்கே மிகவும் கடினமான காரியம். காட்டிக் கொடுக்கும் கயவர் கூட்டம் கழுகுக் கண்களுடனும் கையில் வாளுடனும் அலைந்து திரிந்து கொண்டிருந்தது. இவற்றின் நடுவிலும் அவள் பணியைத் தொடர்ந்தாள்.

08. 08. 1988 அன்று சாந்தி வீட்டிலே இருந்த நேரம். துரோகக் கும்பலுடன் நுழைந்த சிங்களப் படை அவளை அடித்து நொருக்கியது. "உன்ட கொண்ணன் எங்க" எனக் கேட்டுக் கேட்டு அடித்தனர். எவ்வளவோ அடிகள் விழுந்தும்கூட அவர்களுக்குச் சாதகமான பதில் ஒன்று கூட அவளின் வாயில் இருந்து வரவில்லை. அக்கொடிய படை போகும் போது "மறுகா வருவம்" என்றபடி போனது.

செய்தி அறிந்து வீட்டுக்கு ஓடி வந்த தாய் வீங்கிய முகத்துடன் இருந்த தனது மகளை வாரி எடுத்து அணைத்துக் கொண்டாள். ஆனால் வளர்மதியின் உதடுகளோ, "நான் இயக்கத்துக்குப் போப்பறன்" என்ற சொல்லைத் திரும்பத் திரும்பக் கூறியது. தனது நகைகளைக் கழற்றி தமக்கையின் குழந்தைகளுக்குப் போட்டவாறு "எனக்கிது தேவை இல்ல" என்று கூறியவளை மறுநாளிலிருந்து காணவில்லை.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் ஐந்தாவது பயிற்சி முகாமில் பயிற்சியை முடித்துக் கொண்டவள், 1990 ஆம் ஆண்டில் தனது ஒரு சிறு குழுவுடன் தான் பிறந்த மண்ணில் ஒரு முழுமையான போராளியாகக் காலைப் பதித்தாள். அந்நேரத்தில் புதிய பெண்புலிகளும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். பயிற்சி முடிவடைந்தது. பிள்ளைகளுடன் பிள்ளையாகவும் அதேவேளை குழுக்களை வழிநடத்திச் செல்லும் தலைவியாகவும் செயற்பட்டாள்.

**மேஜர் வளர்மதி**



சாந்தி செல்லத்துரை
கண்ணகிபுரம், வாழைச்சேனை.
பிறப்பு: 1970-06-01 வீரச்சாவு: 1992-04-16

சில காலங்களின் பின் சக போராளி ஒருத்தியுடன் ஊருக்குள் இறங்கி, தனது பிரச்சார வேலைகளை இரகசியமாக முடுக்கி விட்டாள். அதன் பின், பல பெண்கள் இயக்கத்தில் இணைந்தனர்.

மீண்டும் சிங்கள வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. இரண்டாவது ஈழப் போர் ஆரம்பமானது. அவ்வேளையிலும் கூட மக்களின் எண்ணத்தினை அறியும் பொருட்டு ஊருக்குள் தனது பணியைச் சில காலம் தொடர்ந்தாள் வளர்மதி.

சண்டைகளின் போது இவள் பெரும்பாலும் குழுத் தலைவியாகவே சென்றாள். அடிக்கடி பிள்ளைகளை அழைத்து இயக்க நிலைப்பாட்டை விளக்கி, உறுதியாகச் செயற்பட வேண்டும் என்று ஒரு தாயைப் போல புத்திமதி கூறுவாள்.

"நான் எடுத்த பயிற்சியைப் போல சகல பயிற்சியும் தரணும் எண்டு ஆசை. நல்லா வளக்கணும் எண்டு நிறைய எண்ணி வைச்சிரிக்கன். கொஞ்சக் காலம் போகட்டும். வாகனம் ஓட்டக்கூட பழக்கித் தெருவன்" என்று கூறுவாள். பொறுப்பாளராக இருந்த போதிலும், பிள்ளைகளுடன் பிள்ளையாகக் கரப்பந்து விளையாடுவதிலும், நீச்சலடிப்பதிலும், நகைச்சுவைத் துணுக்குகள் கூறுவதிலும் இணைந்தே நிற்பாள். அவளின் அத்தகைய குணமே பிள்ளைகள் மத்தியில் பெரும் மதிப்பினை வளர்த்தது. எள் எனும் முன்பு எண்ணெயாக வந்து நிற்கும் அளவுக்கு அவளிடம் பாசமும் பணிவும் கொண்டிருந்தனர்.

வளர்மதியின் உயிர் நண்பியாக விளங்கியவள் 2 ஆம் லெப். நிலா. இருவரின் உரையாடலிலும் நகைச்சுவை இழையோடும். சிந்தனைவயமான வரிகளும் இணைந்து காணப்படும்.

"நிலா, கொழுத்தித்தான் என்னை எரிச்சாலும் என்ர கொள்கையில இருந்து ஒரு நாளும் விலகமாட்டேன். அது போலத்தான் எல்லாப் புள்ளைகளும் இருக்க வேணுமெண்டு விருப்பப்படுகிறன். எங்கட காலடி பெதிஞ்ச இடத்தில எங்கட ரத்தமும் உறைய நாங்க குடுத்து வெச்சவங்க" என்று ஆழ்ந்த உணர்வுடன் கூறுவாள்.

நிலாவோ "வளர்மதியக்கோ, நான்தான் முதல்ல சாவன்" என்னைப்பத்தி எழுதுங்க என்ன"? என்பாள்.

"போடி. நான்தான் சாவன்" என்பாள் வளர்மதி. ஆனால் நடந்ததோ...

கள்ளிச்சையிலிருந்து வெலிகந்தை நோக்கிக் காவல் உலாச் செல்லும் சிறீலங்கா இராணுவ அணி மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்று திட்டம் தீட்டப்பட்டது. சில போராளிகளைக் கொண்ட குழுவுக்கு தலைவியாக வளர்மதி அவர்களுள் ஒருத்தியாக நிலா.

சண்டைக்கெனச் செல்லும் போது தேவையான உணவுப் பொருள்களையும் கொண்டுதான் பயணம் தொடரும். கற்களும், முற்களும் நிறைந்த பகுதிகளையும். அருவிகளையும் மலைகளையும் கடந்து பயணம் தொடர்ந்து செல்லும். இத்தனை சிரமங்களின் மத்தியிலேதான் எதிரியின் மனோபலத்தைச் சிதைத்து புலிகள் போரிடுகின்றனர். நிலை எடுத்து இருக்கும் போது உடல்மேல் புழுக்கள் ஊரும், பாம்புகள் நெளியும். தொண்டை வரண்டு இருமல் வரும். அனைத்தையும் பொறுத்துக் கொண்டுதான் தயார் நிலையில் காத்திருப்பார்கள் புலிகள்.

இரு நாட்கள் பயணம். உரிய இடத்தில் நிலை எடுத்த பின்னர் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இருபது நிமிட இடைவெளியில் எதிரியின் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அதில் எல். எம். ஜியும் அடங்கும். சிதறிய இராணுவம் ஓடுகின்றது. இறுதியில் விழுகின்றது. ஜீப்புடன் ட்ராக்டர் ஒன்றும் கைப்பற்றப்பட்டுச் சேதமாக்கப்பட்டன. இதில் நிலா வீரச்சாவினை அணைத்துக் கொண்டாள். நிலாவின் மார்பில் ரவையினால் ஏற்பட்ட காயத்தை வளர்மதியின் கை ஆறுதலாகத் தடவிக் கொடுக்கின்றது. இறுதி வணக்கம் நடைபெற, பயணம் தொடர்கின்றது.

தற்காலிகத் தளம் மீண்டும் அமைக்கப்பட்டது. வளர்மதி போராளிகளுடன் மட்டுமல்ல, வனத்து சீவராசிகளுடனும் அன்பாகவே தனது பொழுதினைக் கழித்தாள். ஒரு முறை காவல் உலாவுக்குச் சென்ற சமயம் தாய்க் குரங்கு ஒன்று தனது குட்டியை அணைத்தவாறு இவளைப் பார்த்தது. அக்குட்டியை எப்படியும் தான் எடுத்து வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் இவளுக்கு.
"தாயுடன் இரிக்கிறதை எப்படிப் பிரிக்கிறது? பேசாம வாங்க போவம்" எனத் தோழிகள் அழைத்தும்கூட, "திரத்திப் பாப்போம். அப்ப தாய் குட்டியைப் போட்டுத்து ஓடும். எடுப்பம்" என்றாள். அவள் சொன்னபடியே நடக்க, குட்டி வளர்மதி கையில். அருமையாக அதை வளர்த்தாள். ஒரு நாள் திடீரென பெரிய மழை பிடித்துக் கொண்டது. பொலித்தினாலான சிறு குடிசையில் நிறையப் பேர் நிற்க வேண்டிய நிலை. அங்கு வளர்மதியும்... சாக்கின் கீழே வெகு நிம்மதியாக உறங்கியபடி குட்டி. வளர்மதி அதைக் கவனிக்காமல் சாக்கின் மேல் ஏறி மிதித்ததில் குட்டி இறந்து விட்டது. "ஐயோ உங்கட புள்ளையை நீங்களே சாகவச்சிப் போட்டியளே" என சக போராளிகள் அனுதாபம் நிறைந்த குரலில் கூற, அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை. தன் துக்கத்தை வெளியில் காட்டாது மௌனமாக நின்றாள்.

## பொன்னிலா

அதன் பின்னர் குட்டிக் குரங்குகளைக் காணும் போதெல்லாம் "வளர்மதியக்காவோட புள்ளை போகுது" எனும் பிள்ளைகளின் கிண்டல்களை இதழின் ஓரத்தே ஒரு சிறு புன்னகையுடன் சமாளித்துக் கொள்வாள்.
மாதத்தின் பாதி நாட்களில் எதிரியின் வரவை வேவு பார்த்து, மிகுதி நாட்களில் திட்டம் தயாரித்து தாக்குதல் நடாத்தி ஆயுதங்களை அள்ளியபடி, வெற்றியுடன் திரும்புவர். இவ்வாறே மாதம் ஒரு முறை சண்டை எனக் கணக்கிட்டுத் தாக்குதல்கள் தொடரும். வேவுப் பிரிவு வந்துவிட்டது என அறிந்ததுமே வளர்மதியுடன் சில போராளிகள் பொறுப்பாளரின் முன் நின்று "அண்ணோ, நாங்களும்" என்பர். அனுமதி கிடைத்ததும் துள்ளியபடி சண்டைக்குரிய வி_யங்களைக் கலந்துரையாடச் சென்று விடுவர்.
போரில் வெற்றியுடன் திரும்பிய பின், கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். வளர்மதி பிள்ளைகளுடன் இணைந்து தேவையான உதவிகளைச் செய்து, மேடை ஏறுவதில் பிள்ளைகளுடன் பிள்ளையாக நின்று சிரமப்படுவாள். இம்மாத நிகழ்ச்சியில் பங்குபெறும் போராளிகளில் சிலர் மறுமுறை நடைபெறும் நிகழ்ச்சிகளில் இருக்க மாட்டார்கள். இப்படித்தான் சோகங்களினூடு கலை நிகழ்வுகளும் கலந்திருந்தன.

1992 சித்திரை மாதம் பொங்கல் விழா. தமிழரின் பூர்வீக விழா. அன்று பிள்ளைகளுக்கு வழங்கவென 'கேக்' வந்திருந்தது. அங்கு இவையெல்லாம் வருவது மிகவும் அபூர்வம். பிரித்துக் கொடுக்கும் பொறுப்பு வளர்மதியிடம் ஒப்படைக்கப்பட, பெரிய பெரிய துண்டுகளாக வெட்டி ஒவ்வொரு பிள்ளையாக அழைத்துக் கொடுத்த வண்ணம் "சாப்புட்டு. மிச்சத்தை வையுங்க, சண்டைக்குப் போற நேரம் பசிச்சா தின்னலாம்" என்று கூறினாள்.

குரங்குக் குட்டிக்குப் பின்னர் அவளிடம் லக்சி எனும் பெயருடைய ஒரு கிளி இருந்தது. சில

தொடர்ச்சி 4ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாய்மை

சிறு கதை

- மணலாறு விஜயன் -

வெள்ளையம்மா ஏன் பைத்தியமானாள்...?

வெள்ளையம்மா ஏன் தற்கொலை செய்து கொண்டாள்...?

அவள் பைத்தியமாகவில்லை. அவள் வாழ்ந்த கிராமம் அவளைப் பைத்தியக்காரியாக்கியது. அவளாக தற்கொலை செய்யவில்லை. அவளது கிராமம் அவளை தற்கொலை செய்ய வைத்தது.

அழுகிப் போன சமூகம் அவளைக் கொன்றுவிட்டது.

பத்து ஆண்டுகளுக்கு முன் நடந்து போனதுதான். ஆனாலும் அந்த வேதனைகளை ஜீரணிக்க முடியவில்லை.

வெள்ளையம்மாவுக்கு அது சொந்தப் பெயரல்ல. வள்ளிநாயகி இதுதான் அவளுடைய சொந்தப் பெயர். அவளின் அழகையும் நிறத்தையும் வைத்து வந்த காரணப்பெயரே அது. தேச விடுதலைப் போர் விழுதெறியுமுன்னே அவளது வாழ்வு முடிந்து போய்விட்டது. மயிலிட்டிக் கிராமம் திடீரென இலங்கை இராணுவத்தால் சுற்றி வளைக்கப்படுகின்றது. எவருமே அங்கிருந்து தப்பிக்கொள்ள முடியாத நிலை. சுற்றிவளைப்பினுள் அகப்பட்டுக் கொண்ட அந்தப் போராளியைக் காப்பாற்ற எவரும் முன்வரவில்லை. அனைவருமே அவனைக் கண்டு பயந்து ஒதுங்கிக் கொண்டார்கள். விழிகளைப் பிதுக்கிக் கொண்டார்கள்.

வெள்ளையம்மா வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு ஓடி வந்தாள். அவனையும், அவனது பதற்றத்தையும் அவளால் உடனேயே புரிந்துகொள்ள முடிந்தது. வெள்ளையம்மா வீட்டினுள் ஓடிச்சென்று பழைய வேட்டி ஒன்றினை எடுத்து வந்து அவனிடம் கட்டும்படி கொடுத்தாள். தலையினையும் மூடிப் போர்த்துக் கொள்ளும்படி வேறோர் பழந்துணியையும் கொடுத்தாள். நாக்கினை நீட்டும்படி சொல்லிவிட்டு பிளேற் ஒன்றினால் நாக்கில் மெதுவாகக் கீறினாள். இத்தனைக்கும் அவன் எதிர்வார்த்தை எதுவுமே பேசவில்லை. முன்பின் தெரியாத அவள் சொல்வதை இயந்திரம் போல் செய்து கொண்டான். எவ்வாறாயினும் தப்பித்துக்கொள்ள வேண்டியிருந்தது.

வெள்ளையம்மா சாறி உடுத்து குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டாள். குறுகிய நேரத்துள் விவேகமான சிந்தனையும் செயலும்.

அனைவரையும் வீடுகளிலிருந்து வெளியேறி நிரையாக வரும்படி இராணுவத்தினர் கட்டளை பிறப்பித்தனர். வெள்ளைம்மா அந்தப் போராளியை ஏற இறங்க ஒரு தடவை நோக்கிவிட்டு, மனதை திடப்படுத்திக் கொண்டாள். அவனது கையைப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடக்கத் தொடங்கினாள். இராணுவத்தினரை நெருங்கியதும் கசம் பிடித்தவர்கள் போல் நன்றாக இருமும் படியும் இருமியபின், எச்சிலோடு இரத்தத்தைச் சேர்த்து துப்பும் படியும் வேண்டிக் கொண்டாள்... அவனும் அசல் கசக்காரன் போல் மாறினான்.

வரிசை நெருங்கிவிட்டது. அடுத்து இவர்கள்தான்...

"ஏய் ஆர் ஆளு"? என்ற கேள்வி மிரட்டுதலாக வந்தது. "என்ர கணவர்தான் கசநோயில... என்று அவள் சொல்லி முடிக்கு முன்பே அவனும் இருமி இருமித் துப்பினான். இரத்தத்தைக் கண்ட இராணுவத்தினர் போ, போ என்பது போல் அவசரமாகக் கையசைத்தனர்.

வெள்ளையம்மா இறைவனுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டாள். இராணுவத்தினர் நின்ற இடத்திலிருந்து ஐம்பது யார் தூரந்தான் சென்றிருப்பார்கள். வீதியொன்றின் குறுக்கே வந்த சைக்கிளிலில் தாவி ஏறிப் பறந்துவிட்டான். நல்லவேளை இராணுவத்தினர் திரும்பிப் பார்க்கவில்லை.

அந்தப் போராளியைக் காப்பாற்றிவிட்ட பெருமையுடன் சென்ற வெள்ளையம்மாவின் உயர்ந்த அர்ப்பணிப்பை, தாய்மையின் விவேகத்தை, பெண் குலத்தின் பண்பை அவளது கிராமம் பகுத்துணரத் தவறிவிட்டது. இராணுவத்திடமிருந்து அன்று தப்பிய அவளை அவளது சமூகம் விட்டு வைக்கவில்லை. சாக்கடைச் சமூகம் அவளைக் கொன்றுவிட்டது. வெள்ளையம்மாவின் நடத்தைக்கு வால், தலை வைத்தனர். அவளது புனிதமான உள்ளம் புண்பட்டது. வேதனையால் வெடித்தது. முடிவு? அவள் சுயநினைவிழந்தாள். காத்திருந்த அவளது சமூகம் அவளுக்கு பைத்தியம் என்று பட்டம் சூட்டியது. வெள்ளையம்மா தன் சமூகத்திலிருந்து விடுதலை பெற விரும்பினாள். ஒரு விடுதலை வீரனை தேசத்துக்கு காத்துக் கொடுத்த நிறைவோடு தன்னை அழித்துக் கொண்டாள்.

எந்த மக்களால் வெள்ளையம்மா கொல்லப்பட்டாளோ அந்த மக்களின் விடுதலைக்காவும் தேசத்தின் விடுதலைக்காகவும் அவளின் தம்பியும் தங்கையும் இன்று களத்திலே நிற்கின்றனர். வெள்ளையம்மா போல் பல வெள்ளையம்மாக்களின் சிறகுகள் தான் அன்று எம் விடுதலை வீரர்கள் பலரைக் காத்துத் தந்தது. விடிவு தெரியும் விடுதலைப் பயணத்தில் நாம் நிற்க துணையாகி நின்ற தாய்மையின் தூய்மையை என்றும் புனிதமாகப் பார்க்க எமது சமுதாயம் பழகிக் கொள்ள வேண்டும்.

கடந்த கால நினைவுகளிலிருந்து நிகழ்கால நினைவுகளுக்குக் கொண்டு வந்தான் என்னருகே இருந்த போராளி. 6.30 மணிக்கு வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியதை நினைவுபடுத்தினான். சில தினங்களுக்கு முன்பு தான் இவனும் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியிருந்தான். ஏனெனில், காலிலும் கையிலும் அவனுக்கு ஏற்பட்ட காயங்கள் இன்னும் சரியாக ஆறவில்லை. இருவரும் வைத்தியசாலைக்குப் புறப்பட்டோம்.

இரவு 7.00 மணிக்கெல்லாம் வைத்தியசாலைக்குள் நுழைகின்றோம். நீண்டு செல்லும் 'ஸ்ரெச்சர்களைப்' பார்க்கின்றேன். எதுவுமே வெறுமையாக இல்லை. திரும்பிய திசையெல்லாம் வேதனையின் முனகல்கள் இயலாமையின் அழுகுரல்கள் ஆவேசத்தின் அட்டகாச வார்த்தைகள். மயக்க ஊசி ஏற்றப்பட்டவர்கள் சுயநினைவின்றி ஏதோவெல்லாம் பேசிக் கொண்டார்கள். மக்களின் விடியலுக்காய் துன்பத்தை தாமே சுமந்து கொண்ட சுதந்திர வீரர்களல்லவா! காயங்கள் ஏற்படும் போது தான் அவர்களுக்கு ஓய்வு. புதைகுழியில் மட்டுமே அவர்கள் நிரந்தரமாக தூங்க முடிகின்றது.

காலில் கடுமையான முறிவு ஏற்பட்ட போராளி ஒருவன் "ஐயோ... அம்மா... மக்களைக் காப்பாற்ற வெளிக்கிட்டா இதுதான் நிலை, ஐயோ... அண்ணா சொன்னதெல்லாம் நிறைவேற்றிப் போட்டம். அன்பு கவனமெண்டவர் அதுதான் செய்யேலாமப் போச்சுது. அம்மா... என்று தன் வேதனையை மறப்பதற்காக சத்தமிட்டுப் பேசிக் கொண்டிருந்தான் எங்களைக் கண்டதும் எழுந்திருக்க முயன்றான். ஆனால் அது முடியாமல் போயிற்று.

"என்ன மச்சான் பாரடாப்பா, கால்ல ஏதோ மண்மூடையெல்லாம் கட்டித் தூக்கிக் கிடக்கு. நேற்று வந்தாங்கள் பாவியள் கத்திரிக்கோல காயத்துக்குள்ள ஓட்டி ஓட்டி இழுத்தாங்கள். கத்தரிக்கோல் இந்தப் பக்கத்தால போய் மற்றப் பக்கத்தால வெளிக்கிடுது. ஒண்டரைப் போத்திலுக்குக் கிட்ட ஏதோ வெள்ளையாய் எடுத்தாங்கள். எல்லோரும் கொண்டு போய் பகிந்து குடிச்சுப் பாருங்கோ என்று பேசினேன். ஆனால், அதுக்குப் பிறகுதான் வலிக்குறைவாய்க் கிடக்குது. என்ன நினைச்சாங்களோ தெரியாது மச்சான். போதாக் குறைக்கு இரவு நான் குளறிக் கொண்டிருக்க, ஆரோ என்கால தடவிக் கொண்டிருந்தார்கள். ஆற்றா காலப் பிடிக்கிறவன்? எடுடா கையை என்று சொல்லிக் கொண்டே பார்த்தன். "என்னப்பன் நல்லா வேதனப்படுத்துதோ" என்று கேட்டுவிட்டு காலைத் தடவிக் கொண்டிருக்குது மச்சான். ஆரெண்டு உனக்குத் தெரிஞ்சிருக்கும் பக்கத்து அறையில தான் கிடக்கிறார். நான் குளறின சத்தங் கேட்டு சாமத்தில மூண்டு சில்லு சைக்கிள்ள மெதுவா இறங்கி வந்து தடவிக்கொண்டிருக்குது மச்சான். இந்தாள் என்ன பிறப்பபடாப்பா. என்ரை வேதினையைப் பார்த்துட்டு நேசைக் கூப்பிட்டு ஒரு ஊசி போடிச்சுது. அதுக்குப் பிறகு தான் நித்திரை கொண்டனான்" என்று சொல்லிச் சிரித்தான்.

தனது காயத்தைப் பாராது தனது வேதனையை மறந்து சக போர் வீரனுக்காய் துன்புற்ற அந்த மூத்த தளபதியை நினைத்த போது கண்கள் கலங்கியது. உண்மையான தாய்மையின் வெளிப்பாடாய் நிற்கும் இவர்களால் தான் விடியலின் பாதையில் எங்கள் பயணம் தொடர்கின்றது.

ஓய்வின்றி ஓடி ஓடி மருந்து கொடுத்துக் கொண்டிருந்த ஒரு மருத்துவத் தாதியைப் பார்த்து, "நேசன்ரிக்கு என்னைத் தெரியுதா? இண்டைக்கு கொஞ்சம் ஓய்வாய் இருக்கிறியள் போல கிடக்கு" என்று என்னுடன் வந்த போராளி கேட்டான்.

"இப்பத்தான் மருந்துகளெல்லாம் குடுத்து முடிஞ்சு வந்து நிற்கிறன். நீங்கள் என்ன இந்தப் பக்கம் இன்னுமொருக்காய் என்னோட சண்டை பிடிப்பமெண்டு வந்தனீங்களோ" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள். "இப்பத்தான் மருந்துகளெல்லாம் குடுத்து முடிச்சு வந்து நிக்கிறன்" என்று அவள் சொல்லி முடிக்கும் போதே, மீண்டும் அழைப்பு வந்தது. ஊசியும் மருந்துகளும் அடங்கிய தட்டுடன் மின்னலாய்ப் புறப்பட்டாள்.

"இப்ப கொஞ்சம் ஓய்வாய் நிற்கிறியள் போல கிடக்குது? என்று அவளிடம் கேட்டதை திரும்ப என் மனதுள் போட்டுப் பார்த்துக் கொண்டேன். விசித்திரமான பிறப்புக்கள். தன்னலம் மறந்த தாய்மையின் வடிவங்கள். ஒரு போராளியின் காயத்தை ஆற்றி மீண்டும் அவனை விடுதலைப் பாதையில் நடக்க வைக்கும் வரை அவர்கள்படும் இன்னல்கள், துன்பங்கள் கொஞ்சமா?

சற்றுத் தள்ளியிருந்த 'ஸ்ரெச்சரில்' எழுந்திருக்க முடியாமலிருந்த ஒரு போராளியை மெதுவாகத் தூக்கி தன்னுடன் அணைத்து வைத்துக் கொண்டு உணவு தீத்திக் கொண்டிருந்தாள் ஒரு தாய். குழந்தை போல் அழுதழுது சாப்பிட்டுக் கொண்டிருந்தான் அந்தப் போர் வீரன். அவனை இந்த மண்ணுக்காய் பெற்றுத் தந்த தாயாக இருக்குமென நினைத்தேன். ஆனால் உண்மை அதுவல்ல. அவள் வேறு ஒரு மாவீரனின் தாய். மட்டக்களப்பில் பிறந்து, யாழ். மண்ணில் களம் நின்று காயம்பட்ட அந்த வீரனை தன் பிள்ளைகள் போல் கருதி உணவு தீத்தும் அந்தத் தாயின் உள்ளத்தை எப்படிச் சொல்வது. அந்தப் போர் வீரனும் அந்த அன்னையின் அணைப்பில் பெற்றவளின் தாய்மையைக் கண்டு கொண்டான். அதனால் தான் அவனும் அழுது கொண்டான். நெஞ்சை உருக்கும் அந்த நினைவுகளுடன் வைத்தியசாலையிலிருந்து வெளியேறினோம். ■

## வேள்வி



புதியதோர் பொழுதொன்று புலரும்.
பூவொன்றின் இமைகள் மெல்லெனத் திறக்கும்.
நிஜங்கள் பாயில் முட்களாய் உறுத்தக்
கனவுப் பறவை சிறகை விரிக்கும்.
இழந்த இரவுக்காய் இதயம் ஏங்கும்.
அயலில் வீழ்ந்து வெடித்த குண்டோ
நனவுச் சிறைக்குள் மனதை இழுக்கும்.
எழுதலும் விழுதலும் நிறைந்த எம்மண்ணில்
புதிய நாளோ உருளத் தொடங்கும்.
பூஜைக்கென்று பூத்த மலரோ
நாட்டை மீட்டிட நடந்திடுமந்த
வேள்வித் தீயுள் வீழ்ந்து கருகும்.
செடியில் இருந்த புதிய அரும்புகள்
கண்ணீர் உகுக்கவும் நேரமின்றிப்
புதிய பூக்களாய் பிறவி எடுக்கும்.
வீழும் போதும் வீரமாய் வீழ்ந்ததால்
கருகிய பூவும் உயிர் விதையாகும்.
விதையினில் இருந்து வீரம் விழித்தெழும்.
வீரம் விழித்தெழ வேள்வித் தீ ஓங்கும்.
ஓங்கிய தீயின் வெம்மையுள் இருந்து
விடுதலை என்னும் ஊற்றுக் கிளம்பும்.
ஊற்று நீருள், உயிர்த்த பூக்கள் மறுபடி பூக்கும்.

வசந்தா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆனை கட்டிய அரியாத்தை

**பண்டாரவன்னியனின் மூதாதையர்களில் ஒருவரான சின்னவன்னியன் காலத்தில் யாராலும் அடக்கமுடியாமல் மதங்கொண்டு கொடுமை புரிந்து வந்த யானையை அடக்கி அரசனிடம் பரிசில்களும், பாராட்டுதலும் பெற்ற 'அரியாத்தை' என்ற வீரமங்கையின் வரலாறே இது.**

பண்டாரவன்னியனின் மூதாதையார்களில் ஒருவரான சின்ன வன்னியன் ஆட்சிபுரிந்த காலம் அந்தக் காலம். நாட்டு மக்கள் எந்தக் குறையுமின்றி அமைதியாகவும், சந்தோசமாகவும் தமது சுற்றம், உறவு, பிள்ளைகளுடன் வாழ்க்கை நடத்தி வந்தனர்.

திடீரென ஆண்டான் குளத்தை அடுத்துள்ள கண்டல் காட்டில் புயல் போல புகுந்தது ஒரு யானை. அது பதினாறு அடி உயரமுள்ளது. மலையைப் போன்றது அதன் அமைப்பு. அந்த யானை மதங்கொண்டு அக்கிராம மக்களை ஆட்டிப் படைக்கத் தொடங்கியது.

அந்த யானையின் வெறித்தனத்தால் வயல்கள் எல்லாம் நாசமாகின. . தென்னை, பலா, பனை போன்ற கனிமரங்கள் சின்னாபின்னமாகின. குவித்த நெற்போரையெல்லாம் யானை தின்று தள்ளியது. கொட்டில்கள், குடில்கள் எல்லாவற்றையும் பிடுங்கி எறிந்தது. மனிதரைக்கூட அது விட்டு வைக்கவில்லை. அதனிடம் அகப்பட்டு மாண்ட குடி மக்களின் எண்ணிக்கையோ கணக்கில் அடங்காது.

யானையின் அட்டகாசங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் ஓடோடி வந்து தம் மன்னனான சின்ன வன்னியனிடம் முறையிட்டனர்.

மன்னன் மக்களுக்கு ஆறுதல் கூறி, அந்த யானையைப் பிடிப்பதாக உறுதியளித்து அனுப்பியதோடு யானையைப் பிடிக்கும் முயற்சியிலும் இறங்கினான்.

நாட்டிலுள்ள யானைப் பாகர்கள் அனைவரும் வரவழைக்கப்பட்டனர்.

மன்னன் கட்டளையைப் பிறப்பித்தான்.

ஆனால் பணிக்காரர்களோ "அரசே! அந்த யானையை அடக்க வென்று சென்று இறந்தவர்கள் பலர். யானையைக் கண்டு மட்டும் பயந்து வந்தவர்கள் பலர். அந்த யானையை மட்டும் எங்களால் பிடிக்க முடியாது. எம்மை மன்னிக்க வேண்டுமையா" என்று மறுத்துவிட்டனர்.

"யானையின் கொடுமைகளைத் தாங்காது என்னிடம் வந்த மக்களிடம் யானையைப் பிடிப்பதாக உறுதி கூறிவிட்டேன். கட்டாயம் பிடித்தே ஆகவேண்டும். உங்களில் யார் வீரனென்று கூறுங்கள். அவன் மட்டும் சென்று யானையைப் பிடிக்கட்டும்" என்றான் சின்ன வன்னியன்.

"அந்த யானையைப் பிடிக்கும் ஆற்றல் உடையவன் இந்த வேலப்பணிக்கன்தான். எங்கள் எவராலும் முடியாது அர..."

என்று ஒரு பாகன் சொல்லி முடிக்கு முன்,

"ம் வேலப் பணிக்கனா? இவனா இந்த யானையைப் பிடிக்கப் போகின்றான்? இவன் வெறும் கோழை. வேணுமென்டா இவன்ர மனைவி அரியாத்தைதான் அந்த யானையைப் பிடிப்பாள்" என்று இடைமறித்தான் நீலப்பணிக்கன்.

நீலப்பணிக்கன் வேறு யாரு மல்ல. அரியாத்தையின் மைத்துனன். அரியாத்தையைத் திருமணம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு இருந்தவன். ஆனால் அரியாத்தையின் பெற்றோரோ அதற்குச் சம்மதிக்கவில்லை. அதனால் வெட்கமடைந்தவன் எந்த வழியில் வேலப்பணிக்கனைப் பழிவாங்கலாம் எனக் காத்திருந்தான். இப்போது எல்லோர் முன்னிலையிலும் அவனை அவமானப் படுத்தினான்.

அவமானம் தாங்காது வீடு திரும்பிய வேலன் படுக்கையில் போய் விழுந்தான். சாப்பிடக்கூட மனம் இடங்கொடுக்கவில்லை.

கணவனின் செயல் அரியாத்தைக்குப் புதிதாக இருந்தது. கணவனிடம் சென்று "என்னப்பா இப்பிடி இருக்கிறியள்? என்ன நடந்தது? மன்னர் என்ன சொன்னவர்"? என்று ஆதரவுடன் விசாரித்தாள்.

"அரியாத்தை, யானையைப் பிடிக்கிறதுக்கு மன்னர் உத்தரவுப்படி என்ன எல்லாரும் தெரிவு செய்தாங்க. ஆனா உன்ர மச்சான் என்னைக் கோழையெண்டும், என்னால யானையைப் பிடிக்க ஏலாது எண்டும் சொன்னான்".

"அவன் விசரன். அவன் சொன்னதுக்கு நீங்க ஏன் கவலைப்படுறியள்"?

"அவன் என்னச் சொன்னதால நான் நான் கவலைப்படயில்ல. 'இவனால முடியாது. வேணுமெண்டா இவன்ர மனைவி அரியாத்ததான் அந்த யானையைப் பிடிக்க வேணும்' எண்டு எல்லோருக்கும் முன்னால உன்ர பெயர அவமானப்படுத்திப் போட்டான்".

அப்படியா சொன்னான்? மன்னனுக்கு முன்னால என்ன அவமானப்படுத்தினதுக்காக அந்த யானையை நானே போய்ப் பிடிச்சுவாறன்".

"வேண்டாம் அரியாத்தை. ஆண்களான பாகர்களாலேயே முடியாதது உன்னால முடியாது. நான் போறன்".

"எனக்கு வந்த அவமானத்த நீக்க வேணுமெண்டா நான்தான் அந்த யானையைப் பிடிச்சு வர வேணும். தயவு செய்து எனக்கு அனுமதி தாங்கோ".

வேலப்பணிக்கனிடம் விடைபெற்றுக்கொண்டு அரியாத்தை யானை நிற்பதாகக் கூறப்பட்ட இடத்தை நோக்கிக் கயிற்றுடன் சென்றாள்.

அரியாத்தை யானை பிடிக்கச் சென்ற கதை நாடெல்லாம் பரவியது. "ஆம்பிள்ளையளாலேயே பிடிக்க ஏலாத யானையை இவா பிடிக்கப் போறாவாம்".

"இவாவின்ர பிணம் கூட எடுக்க ஏலுமோ தெரியாது".

"தானாச் சாவத் தேடிப் போகுது விசர்ப்பிள்ளை".

இப்படியாக ஊரில் பலவாறான கதைகள் பரவலாகப் பேசப்பட்டன.

காட்டில் அலைந்து திரிந்து அந்த மத யானையைக் கயிறு போட்டுப் பிடித்த அரியாத்தை, அந்த யானை மீதே ஏறி அரண்மனையை நோக்கி வந்தாள்.

யானை போட்ட பிளிறல் சத்தம் அரண்மனை வரை கேட்கிறது. அரியாத்தை யானையைப் பிடித்த கதை காட்டுத் தீ போலப் பரவியது. அரியாத்தையை வரவேற்பதற்காக அரண்மனை விழாக்கோலம் பூண்டது. பட்டத்து அரசியோ அந்த யானையை தனது பட்டத்து யானையாக்கும் ஆவலோடு காத்திருந்தாள்.

ஆனால் நீலப்பணிக்கனோ...? அவனது வஞ்சக மூளை வேறு விதத்தில் வேலை செய்தது.



"எங்களால முடியாதத இவள் செய்யிறதோ? இதன் மூலம் வேலனைக் கொல்லலாம் என்றால், இவள் அதைக் கெடுத்து விட்டாளே. இவளுக்குச் சரியான பாடம் படிப்பிக்கிறன் பார்" என்று கறுவியவன், அரியாத்தையைக் கொல்லும் சதியோடு தன் மனைவியிடம் சென்றான்.

தனது மனைவியிடம் நஞ்சுப் பொடியைக் கொடுத்து அதை எப்படியாவது வெற்றியோடு திரும்பி வரும் அரியாத்தையின் உடலில் பூசும்படி சொன்னான். அவளும் அதை வாங்கிக் கொண்டாள். யானை மேல் வந்த அரியாத்தையை விழாக்கோலம் பூண்ட அரண்மனையும், மன்னனும், மக்களும் மங்களமாக வாழ்த்தி வரவேற்றனர்.

மன்னன் முன் தலை வணங்கிய அரியாத்தை, அரண்மனைக்கு அருகிலுள்ள 'அத்தி' மரத்தில் யானையைக் கட்டிவிட்டு மன்னர் முன் வந்தாள்.

மன்னன் அவளை அழைத்து "இன்றிலிருந்து நீ 'வேழம்படுத்த வீராங்கனை' என்று அழைக்கப் படுவாய்" என்று புகழாரம் சூட்டினார்.

அரசியோ, அவளது வீரத்தைப் பாராட்டி விலை மதிப்பற்ற பொன்னாடை போர்த்தி மகிழ்வித்தாள். மகிழ்வித்ததோடு நில்லாது விருந்துக்கழைத்து விருந்தும் வைத்தாள்.

விருந்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய அரியாத்தையை நீலப்பணிக்கனின் மனைவியான நீலகேசரி இடைமறித்து, பாராட்டு வழங்குவது போல் அரியாத்தையின் ஆடையைத் தொட்டு தனது வேலையைச் சரியாகச் செய்து முடித்தாள்.

ஏதும் அறியாத அரியாத்தையோ நீலகேசரியிடம் விடைபெற்று வீடு நோக்கிச் சென்றாள். அரியாத்தையின் தலையோ சுற்றுகிறது. மயக்கம், மயக்கமாக வந்தது.

அரண்மனையில் இருந்து வந்து தனது கணவனது மடியிலேயே உயிர்விட்டாள் அரியாத்தை.

இதுதான் அரியாத்தையின் கதை.

'அடங்காப் பற்றெனப் புகழ்சூடி, யாருக்கும் அடங்காத வன்னியர்களினாலே ஆட்சி செய்யப்பட்ட வன்னி மண்ணிலே வளர்ந்து, வன்னி மண்ணின் பெருமைக்கே தன் வாழ்வை அர்ப்பணித்த அரியாத்தை குமுழமுனை, அளம்பில், செம்மலை ஆகிய இடங்களின் இடையிலே அமைந்துள்ளதாகிய 'அதிரியங் கோட்டில்' தன் கணவனுடன் வாழ்ந்ததாக' வேழம்படுத்த வீராங்கனை என்ற நாட்டுக் கூத்தை எழுதிய அரியான் பொய்கை கை. செல்லத்துரை அவர்கள் தன் முகவுரையிலே குறிப்பிட்டுள்ளார்.

இவரது நாட்டுக் கூத்திலே யானையைப் பிடிப்பதற்காக அரியாத்தை பாரிய மந்திரக் கோலும் அங்குசமும் கயிறும் கொண்டு சென்றதாகக் கூறப்பட்டுள்ளது. வன்னி மண்ணிலே இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் சில முதியவர்களிடம், "யானையை அரியாத்தை எவ்வாறு பிடித்திருப்பாள் என்று நினைக்கிறீர்கள்"?

என்று கேட்டபோது, "மந்திரம் போட்டுத்தான் பிடித்திருக்க வேண்டும்" என்றார்கள்.

ஒருவராலுமே பிடிக்க முடியாத மத யானை ஒன்றை எப்படி அரியாத்தை அடக்கினாள் என்பதில் எல்லோருக்கும் குழப்பமிருந்தாலும் யானையை அரியாத்தை. பிடித்தாள் என்பதை எல்லோருமே ஒப்புக் கொள்கின்றார்கள்.

அரியாத்தையின் மரணம் எவ்வாறு நடந்தது என்பதற்கும் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன.

நீலப்பணிக்கனின் சதிதான் காரணம் என்று 'வேழம்படுத்த வீராங்கனை' என்ற நாட்டுக் கூத்து நூல் கூறுகின்றது.

எமது முதியவர்களில் பலரும் பலவிதமாகக் காரணம் சொல்கின்றனர்.

குறிப்பாக ஒருவர் அரியாத்தையைப் பற்றிக் கூறும்போது, யானையைப் பிடித்து வந்து பரிசு பெற்ற அரியாத்தை, 'தனது கணவனுக்குக் கிடைக்க வேண்டிய பரிசும் பெயரும் புகழும் தனக்குக் கிடைத்துவிட்டதே. அதனால் தனது கணவனுக்கு இழுக்கு ஏற்பட்டுவிட்டதே' என்று எண்ணி தானாகவே வெற்றிலையில் 'நஞ்சை' வைத்துச் சாப்பிட்டு இறந்ததாகக் கூறுகின்றார்.

இன்னொருவர், யானையை பிடித்துக் கட்டிய மறுநாட் காலை பார்த்த போது, யானை கட்டியிருந்த மரத்திலே அரியாத்தையின் உடல் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் தொங்கிக் கொண்டு இருந்ததாகவும், அவள் தானாகவே தற்கொலை செய்து கொண்டாளோ அல்லது கொலை செய்யப்பட்டாளோ தெரியாது என்றும் சொல்கின்றார்.

எமது இளைய தலைமுறையினரைக் கேட்ட போது, அவர்களில் பலருக்கு அரியாத்தை என்ற பெண் ஒருவர் இருந்தார், அவர் இப்படி ஒரு செயலைப் புரிந்தார் என்பதே தெரியவில்லை.

ஆனாலும் அரியாத்தையின் வரலாறு சரியாக வரையறுத்துக் கூறக் கூடியதாக இல்லாவிட்டாலும், பண்டாரவன்னியனுக்கு முன் ஆட்சிபுரிந்த அவன் முன்னோர்களில் ஒருவனான சின்னவன்னியன் காலம் என்பது வரலாறு ஒப்புக்கொண்ட உண்மையாகும். அவன் காலம் பதினேழாம் நூற்றாண்டெனக் கூறலாம்.

எமது தமிழினம் அந்தக் காலத்தில் இருந்தே வீரமரபுடைய இனமாக, வீரசாதனை புரிகின்ற இனமாகத்தான் இருந்து வருகின்றது. ஆனால் அவர்களைப் பற்றிக் கூறும் வீரகாவியங்கள் மிகமிகக் குறைவு. அவர்கள் வீரச்செயல்கள் புரிந்த இடங்கள் வரலாற்றுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்படவில்லை. அரியாத்தை யானையைக் கட்டியதாகச் சொல்லப்படும் அத்திமரம் இருந்த இடம் எதுவென்று ஒருவருக்குமே தெரியவில்லை.

*தொடர்ச்சி 15ம் பக்கம் ....*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாளை இறப்போர்க்கு இன்று உணவு ஊட்டும் ஐ.நா.

பெல்கிரேட்டின் புறநகர்ப் பகுதிகளில் இது இப்போது சாதாரண நிகழ்ச்சி. ஏன் கெயிற்றிதீவின் சேரிப் புறங்களிலும் இது நடக்கின்றது. மலைபோல் குவிந்து கிடக்கும் குப்பை கூழங்களைக் கிண்டி உணவுப் பொருட்கள் ஏதும் கிட்டாதா என கெயிற்றியின் சேரிப் புறப்பிள்ளைகள் திணறுகின்றனர். பெல்கிரேட்டிலோ உலோகப் பொருட்கள் போன்று ஏதேனும் விற்கக்கூடிய பொருள்களை கிளறி எடுத்து விற்று தமது உணவுப் பங்கீட்டினைப் பெற பணமாக்க முயல்கின்றார்கள். இங்கு ஒரு துண்டுப் பாணுக்கு -தமது உணவுப் பங்கீட்டிற்கு மக்கள் ஆயிரக்கணக்கில் காத்து நிற்பது முன்னெப்போதும் காணமுடியாத காட்சி. முன்னாள் யூக்கோசிலேவியாவில் இப்போது மிஞ்சியிருக்கும் சேர்பியாவும், மொன்றிநீகிரோவும் பழைய கற்கால நிலைக்குள் தள்ளப்பட்டுவிட்டதாகச் சிலர் கூறுகின்றனர். அண்மையில் சேர்பியா தனது மனநோயாளர் தங்கும் விடுதியொன்றில் தகுந்த உடையின்றி, உணவின்றி, தக்க மருந்துகளின்றி மிக மோசமான அருவருக்கத்தக்க நிலையில் காட்சியளிக்கும் மனநோயாளர் பற்றிய குறும்திரைப்படம் ஒன்றைத் தயாரித்து மேற்கத்தைய மனிதாபிமான உதவி அமைப்புகட்கு அனுப்பிய சேர்பிய அரசின் நோக்கம், இதன் மூலம் தன் நாட்டின் மீது 1992 மே மாதத்திலிருந்து விதிக்கப்பட்டிருக்கும் சர்வதேச பொருளாதாரத் தடையின் சிக்கலான விளைவுகளை வெளிப்படுத்தி உதவிகளைப் பெறுவதற்கே.

முன்னரும் பொருளாதாரத் தடை என்பது ஒரு அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட போதும் தற்போது புதிய ஒழுங்கில் மேற்குலகம் குறிப்பாக அமெரிக்கா இதனை ஒரு மாற்றுவழியாக இராணுவ ரீதியாக பலப் பிரயோகம் செய்வதால் ஏற்படும் எதிர்விளைவுகள் தரும் தொல்லைகளிலிருந்தும் அவமானத்திலிருந்தும் தப்புவதற்கு தக்க கருவியாக -பயன்படுத்தி வருகின்றது. இப்போது தான் மட்டுமல்ல தன்னோடு சேர்ந்து ஐ. நா. வையும் தடைவிதிக்கத் தூண்டுவதால் நிலைமைகள் புதிய பரிமாணத்தை எடுத்துள் என. கியுபா, வடகொரியா, வியட்நாம் போன்றவற்றிற்கு மேல் பல்லாண்டுகாலமாக அமெரிக்க பொருளாதாரத்தடை இருந்து வருகின்றது. ஐ. நா. வுக்கூடாக தற்போது ஈராக், கெயிற்றி, சேர்பியா, லிபியா மீது பல்வேறு வடிவங்களில் தடைகள் நடைமுறையிலுள்ளன. ஆனால் இப்போது எழுந்துள்ள மிகப்பெரிய கேள்வி என்னவென்றால், இத்தடைகள் விதித்ததன் நோக்கங்கள் நிறைவேறியுள்ளனவா? இத்தடைகள் சாதாரண பொதுமக்களை மோசமாகத் தண்டிப்பது சரியா? என்ற சிக்கல்கள் இப்போது ஆராயப்படுகின்றன. அண்மையில் அமெரிக்காவும் ஏனைய 12 ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளும் இதுபற்றிய மீளாய்வொன்றில் குறிப்பாக சேர்பிய, கெயிற்றி மக்கள் நிலைகுறித்து விரிவாக விவாதித்ததாக தெரியவந்துள்ளது.

ஐ. நா. இதுவரை விதித்த தடைகளுக்குள்ளே சேர்பியா மேல் விதித்த தடைபோல் எதுவும் பாரிய வெற்றிகரமானதாக அமையவில்லை என இப்போது கூறப்படுகின்றது. அதிநவீன தொழில் நுட்பங்களை, செய்மதிகளைப் பயன்படுத்தி நியூயோர்க்கில் இயங்கும் ஐ.-நா. வின் தடைகள் மேற்பார்வைக் குழுவிற்கு சேர்பியா நோக்கி டான்யூப் நதிக்கூடாக வரும் எக்கப்பலையும், வீதியூடாக வரும் கனரக வாகனங்களை அதன் தொடங்குமிடங்களையும் உடனடியாக அறியமுடியும். இவை தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்க 26 நாடுகளோடு நேரடித் தொலைத் தொடர்புகள் உடனுக்குடன் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் விளைவாலும் சேர்பியா நடத்தும் போராலும் இன்று தாழ் நிலையை அடைந்துள்ள சேர்பிய மக்கள் நிலையை அண்மையில் நியூஸ் வீக் டைம் சஞ்சிகைகள் புள்ளி விவரங்களாக வெளியிட்டன. தடைகள் காரணமாக சேர்பியாவில் இப்போது பணவீக்கம் 25,-000 வீதம்; நம்பமுடியாத அளவுக்கு நிலைமை உள்ளது. அங்கு புழக்கத்திலிருந்த 'டினார்' நோட்டுக்கள் இப்போது வெறும் காகிதம்; மக்கள் வருமானம் 500 அமெரிக்க டொலரிலிருந்து 15 அமெரிக்க டொலராக வீழ்ச்சி; வேலையற்றோர் நாட்டின் சனத்தொகையின் மூன்றில் இரண்டு பகுதி. எனவே இப்போது ஐ. நா., "தனது தடை சேர்பியா மீது உச்ச அளவில் நடைமுறைப் படுத்தப்பட்டது" எனக் கூறுகின்றது.

இங்கேதான் ஒரு புதிய செய்தி வெளியாகின்றது. இன்று தடை விதித்தும் ஐ, நாவின் குறிக்கோள்கள் நிறைவேறினவா? தடைவிதித்தற்கு ஐ, நா கூறும் இரண்டு காரணங்கள் ; 1) பொசுனியாப் பகுதியில் தடையற்ற உணவு விநியோகப் பணிகளை உறுதிப்படுத்தல். 2)பொசுனியாவில் சேர்பியாவில் இனச் சுத்திகரிப்பு வன்முறையை நிறுத்தித் தீர்வொன்றுக்குத் தள்ளுதல் என்பன, இவையே இந் நோக்கங்களை அடையத் தடைகள், சேர்பிய மக்கட்கு அழுத்தம் கொடுக்க அவர்கள் தமது அரசுக்கு அழுத்தம் கொடுப்பர் அல்லது தூக்கி எறிவர். பொசுனிய சேர்பியருக்கு தமது அரசு உதவுவதைத் தடுப்பர் என ஐ. நா நம்பியது. ஆனால் நடந்ததோ வேறு, ஐ. நாவாலும் எதிர்பாராத சம்பவங்களே இன்று அங்கு நடைபெறுகின்றன. இது வரலாறு.

மிக அண்மையில் சேர்பியாவில் பொதுத் தேர்தல் நடந்தது. தேர்தல் முடிவுகள் சுட்டப்போகும் செய்திக்காக உலகமே காத்துக் கிட ந்தது. இறுதியில் மிஞ்சியது பெரும் ஏமாற்றம். தோற்றுப் போவார் என ஐ. நா. எதிர்பார்த்த சேர்பிய சனாதிபதி சிலோபடான் மிலோசவிக் (SL-OBODAN MILOSEVIC) இன் கட்சிக்கு 101 இருந்து 123 ஆசனங்கள் அதிகரித்து கிடைத்தது. அவரது சேர்பிய தீவிர தேசிய வாதம் அவரைக் காப்பாற்றிவிட்டது. அங்கு எதிர்க் கட்சிகள் உட்பட எல்லாமே இதனை வலியுறுத்தி நின்றன. மாற்றுக் கருத்தே இவ்விடயத்தில் இல்லை. உண்மையிலே நடந்தது ஒரு ஆய்வுக்குரிய செய்தி என சமூகவியலாளரும் உளவியலாளரும் இப்போது அதிசயப் படுகின்றனர். தமது துயர்கட்கு எல்லாம் காரணம் சேர்பிய அரசின் பரந்த சேர்பியா (பொசுனியா, குரோசியா, சேர்பிய பகுதிகள் உள்ளடங்கிய) என்கிற தீவிர பேரினவாதம் என்பதையோ . அல்லது பொசுனிய முசுலிம்கட்கு உரித்தானவற்றைக் விட்டுக் கொடுக்காமையோ என்பதை ஏற்காமல் -மேற்குலகின் தடையே என, மேற்குலகை தமது எதிரியாகத் திட்டித் தீர்க்கும் மனப்பாங்கு எப்படி அங்கு வளர்ந்தது? விசித்திர முரண்பாடு இது. தடைகளும் சருவதேச அரசியல் அழுத்தங்களும் மிலோசவிச்சின் வெற்றிக்கு முக்கிய காரணமாகிவிட்டன. ஏனென்றால் சேர்பிய மக்களோ பொருளாதாரத் தடை என்பது தமது தேசிய கௌரவத்திற்கு இழுக்காக தமது தன்மானத்திற்கு அவமதிப்பாக உள்ளது என உணர்ந்து கிளர்ந்து, தமது தலைவர்பால் முற்றாகச் சாய்ந்தனர்".

இப்போது சேர்பியாவில் தாம் சேர்பியராக இருப்பதற்காகப் பெருமைப்படுவதாகக் கூறுவோர் தொகை அதிகம். டான்யூப் நதிக்கூடாக பெற்றோல் கடத்தி வருவது பெரும் வீரதீர தேசப்பற்றுச் செயலாக அங்கு போற்றப் படுகின்றது. ஐ. நா. என்ன செய்வதென இப்போது மீண்டும் மீளாய்வுகள் செய்ய நேரிட்டுவிட்டது.

கெயிற்றித்தீவிலும் ஐ. நாவின் தடை உள்ள போதும் அதன் கதை வேறுபட்டது. அங்குள்ள இராணுவ அரசு மக்கள் ஆதரவினைப் பெறாதது. மக்களால் மிக விரும்பி தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி அரிஸ்டிட்டை பதவிக்கு வரவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் அரசு, ஐ. நாவால் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு ஒன்றை கடைசி நிமிடத்தில் நிராகரித்த பின் எரிபொருள் உட்பட சில முக்கிய பொருட்கள் கெயிற்றிக்கு செல்வது இப்போது தடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் இத்தடையால் ஏற்கனவே பெரும் வறுமையாலும் கொடும் அடக்கு முறையாலும் வாடும் ஏழை மக்களே

**பாலகுமாரன்**

இராணுவ அரசைவிட மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் கார்வேட் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி வழமையான இறப்புக்களைவிட 1000 மேலதிகமான சிசு மரணங்கள் இப்போது நிகழ்வதாக தெரியவந்துள்ளது. எவரும் கெயிற்றி மக்கள் கொடுக்கும் இவ்விலையை நியாயப்படுத்த முடியாது என இவ்வறிக்கை கூறுகின்றது. மொத்த சனத்தொகையிலே 10 வீதம் அதாவது ஏறத்தாழ 7 இலட்சம் பேர் மனிதாபிமான அமைப்புக்கள் வழங்கும் உணவிலேயே தங்கியுள்ளனர். சிறு குழந்தைகளின் நிலை தாங்க முடியாததாக உள்ளது. இம் மக்களால் எவ்வாறு தம்மை ஒடுக்கும் இராணுவ அரசை அகற்ற முடியும்? இவ்வளவு காலமும் இத்தகைய வல்லாண்மைகட்கு வழிவகுத்த அமெரிக்கா இப்போது ஒதுங்கி மாற்று வழிகளைப் பிரயோகிக்கும் போது, அன்றும் சரி இன்றும் சரி பாதிக்கப்பட்டது, பாதிக்கப்படுவது ஏழை மக்களாகிவிட்டது. 1991 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட இராணுவச் சதிப் புரட்சியே இம் மக்களின் இன்றைய நிலைக்குக் காரணமான போதும், பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் போது அரசியல் மனிதாபிமான இலக்குகளிடையே சமநிலை காணும் வகையில் எவ்வித பொறிமுறைகளும் இல்லையென்றே ஆய்வாளர் கூறுகின்றனர். எனவே தடைகள் விதிக்கப்பட்ட பின் இப்போது நிலமை என்னவென்றால், கெயிற்றிய இராணுவ அரசோ அரிய்யீட்டை வரவிடாமல் தடுப்பதோடு அல்லாமல் மேலும் வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதன் பயனால் நீதி அமைச்சர் அங்கு கொல்லப்பட்டுள்ளார். 2 இலட்சம் மக்கள் தலைநகரிலிருந்து விரட்டப்பட்டனர். இப்போது கிளிண்டனுக்குக் கெயிற்றிய இராணுவம் சவால் விடுகின்றது.



பாடசாலை ஒன்றில் உறைவிடம் தேடிநிற்கும் முஸ்லீம் அகதிகள்

இவை ஒரு பக்கக் கதை. இன்னொரு பக்கத்தில் தனது மேலாதிக்கப் போக்கிற்கு வழிவிடாமல் தடைபோடும் நாடுகட்கு எதிராக வர்த்தகத் தடைகள் விதித்தல் - உதவிகளை நிறுத்தல் என அச்சுறுத்திவரும் அமெரிக்கக் கொள்கையும் வெற்றியடையவில்லை. சிரியாவோ, சூடானோ, ஈரானோ, வடகொரியாவோ இதனால் அழிந்துவிடவில்லை. அது போலவே கியூபாவிற்கு எதிரான 35 வருட காலத் தடை மேலும் இறுக்கப்பட்ட இந்நிலையிலும் காஸ்ரோவை சரணாகதி அடையச் செய்ய முடியவில்லை. அண்மையில் கியூபாவிற்கு எதிரான அமெரிக்கத் தடைபற்றி விவாதித்த கியூபா அரசியல் அறிஞர்கள், காஸ்ரோவின் பிடிமேலும் இறுகவே தடைகள் வழிவகுத்தன என்றும், பனிப்போர் முடிவடைந்த நிலையில் கியூபாவே சந்தைப் பொருளாதார முறையை நோக்கி மெல்ல நகரும் நிலை தோன்றும் நிலையில் தடைகள் அவசியமற்றவை என்றும் கூறினர். எனவே கியூபாவிற்கு எதிரான தடைகள் சர்வதேசச் சட்டங்கட்கு முரணானது என்று அண்மையில் ஐ. நாவின் பொதுச்சபையே 59 வாக்குகள் பெற்று (3 வாக்குகள் எதிர்ப்பாக மட்டும்) தீர்மானம் நிறைவேற்றியது.

இனிவரும் காலத்தில் பொருளாதார மேம்பாடு என்பதே நாடுகளைப் பெரிதும் பாதிக்கின்ற காரணியாகப் போவதால் தடை விதிக்கப்படும் நாட்டோடு தொடர்புகளை வைத்திருந்த அயல்நாடுகள் தமக்கேன் தண்டனை என எதிர்ப்புக் குரல் எழுப்புகின்றனர். ஐ. நாவின் தடையை ஐ. நாவின் உறுப்பினர்களான இவர்கள் இரகசியமாக மீறுவது வழமையாகிவிட்டது. சேர்பியாவிற்கு அருகில் டான்யூப் நதிக்கரை நாடுகளான கங்கேரி, பல்கேரியா, ருமேனியா, கெயிற்றிதீவிற்கு அருகிலுள்ள டொமினிக்கன் குடியரசு இதற்கு உதாரணம். இப்போது கியூபாவில்கூட மெக்சிக்கோ, கனடா என்பன முதலீடுகளை செய்ய முன்வந்துள்ளன. ஈராக்கிற்கு அருகில் ஜோர்தான் இவ்வகையில் வளைகுடாப் போரின் பின் பாதிக்கப்பட்டது முன்னர் தெரிந்ததே.

எனவே இப்போது இலக்கு மாறித் தடைகள் மக்களைத் தாக்குவதால் ஏற்படும் சிக்கல்கள், தமக்கு ஏன் தண்டனை என்கின்ற அயல் நாடுகளின் பெறுமதியான கேள்வி ஏற்படுத்தும் சிக்கல், இவற்றிக்கிடையே பொருளாதாரத் தடையை நிறுத்திவிட்டால் வேறு வழி என்னவென்று ஐ. நா. அல்லாடுகின்றது.

ஆனால், பொசுனியாவில் நீதி நிலவ வேண்டுமானால் தமது இருப்பைக் காப்பாற்றப் போராடும் பொசுனிய முசுலிம்கட்கு ஆயுதங்கள் கிடைப்பதற்கு ஐ. நா. ஏன் தடை விதிக்கின்றது என்ற கேள்வி எழுந்துள்ளது. தடை விதித்தும், அமைதிப்படை அனுப்பியும் மாற்றம் ஏற்படாத

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# டென்மார்க் நாட்டு மாணவர்கள் மத்தியில் ஈழத்தமிழர் உணர்வு

தமிழீழ விடுதலைப் போர் பற்றியும், சிறீலங்கா பெரும்பான்மை அரசின் அடாவடித்தனம் பற்றியும், இன்று சர்வதேச ரீதியில் பல தரப்பட்ட மக்களினாலும் பேசப்பட்டு வருகின்றது. தாயகத்தில் இருந்து இடம்பெயர்ந்து அந்நிய மண்ணில் வாழும் தமிழர்கள் பலதரப்பட்ட நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். தாம் வாழும் நாடுகளில் வெளிநாட்டவர் மீதான எதிர்ப்புக்கள் அதிகரித்து வரும் காலகட்டத்தில், எமது தாயக நிகழ்வினை தாம் வாழும் நாட்டவரிடம் கூறியும் வருகின்றனர். வாடகை மண்ணில் நீண்ட காலமாக வாழ முடியாது என்ற நிலைமை இன்று பலராலும் உணரப்பட்டு வருகின்றது. எமது இனத்தின் மீதான ஒடுக்குமுறையினை பௌத்த மத இனவாதிகளான சிங்களவர் கட்டவிழ்த்து விட்டிருப்பதை சர்வதேசமும் அறிந்துள்ளது.

அண்மையில் டென்மார்க் நாட்டில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவர்களினால் வரையப்பட்ட ஓவியம் இதை சித்தரிக்கின்றது. இவ் ஓவியத்தை வரைந்த மாணவர்கள் தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசு கண்மூடித்தனமான விமான எறிகணைக் குண்டு வீச்சுக்களை நடாத்துவதையும் தாம் புலிகள் மீதே அத்தாக்குதலை மேற்கொள்வதாகவும் பின் உலகிற்கு கூறுவதாகவும் கருத்துப்பட இவ் ஓவியத்தை வரைந்துள்ளனர்.

உலக நாடுகளிடம் நிதி பெற்று அவற்றைக் கொண்டு தமிழர் நிலங்களை பறிக்கவும் அவர்களை கொல்வதற்கும் உபயோகிப்பதை இச்சித்திரம் சித்தரிக்கின்றது. இன்று டென்மார்க் நாட்டு மக்கள் சிறுவர், பெரியர் என்று எமது விடுதலைப் போராட்டம் பற்றி தெளிவான கருத்தினை அறியும் ஆவல் கொண்டுள்ளனர். இதில் டென்மார்க் வாழும் தமிழர்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

ஓர் பாடசாலையில் பணியாற்றும் தமிழ் மகன் மூலமாக எமது தாயகம் பற்றி அறிந்த மாணவர்களின் சிந்தனையின் வடிவம் இப் புகைப்படம் இப் படத்தை வரைந்த மூன்று மாணவர்களும், அவர்களுக்கு உதவிய சக மாணவரும் இப் படத்தில் காணப்படுகின்றனர்.



## பெரும் போருக்கு.....

வத்தினரும், மற்றும் பாதுகாப்பு படைகளும் பெருமளவிலான உயிரிழப்புக்களை சந்திக்க வேண்டி நேரும். இதனை ஈடு செய்வதற்கே சிறீலங்கா ஜனாதிபதி, அரசியல் நாகரீகத்துக்கு அப்பாற்பட்டமுறையில் வகுப்புவாதப் பேச்சுக்களை பேசி வருகின்றார். சமீபத்தில் "நாட்டைத் துண்டாட ஒருபகுதியினர் முயல்கின்றனர். நாட்டை விழுங்கிவிட மறுபகுதியினர் முயற்சிக்கின்றனர்" என மலையகம் வாழ் தமிழர்கள் மேல் சிங்களவர்களை ஏவிவிடும் வகையில் பேசியுள்ளார்.

### முஸ்லீம்கள் மனோநிலை மாற்றம்

இதற்கிடையில் தமிழ் பேசும் முஸ்லீம்கள், சிறீலங்கா அரசாங்கத்தின் மேல் தமது நம்பிக்கை இழப்பை வெளிப்படையாகக் காட்டத் தொடங்கியுள்ளனர். "புலிகள் தலைவர் பிரபாகரன் ஆபத்தான ஒரு நபரல்ல. அவரைச் சந்திக்கக் கிடைத்தால் சந்தித்துப் பேசுவதில் எவ்வித ஆபத்துமில்லை. ரஞ்சன் விஜயரட்னா செய்த சதி வலையில் கிழக்கு முஸ்லீம்கள் சிக்குண்டு, பலத்த இழப்புக்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. கிழக்கில் சிறீலங்காவால் முடுக்கி விடப்பட்ட இனக்கலவரம் வடக்கிற்கும் பரவிவிடலாம் என்ற காரணத்தினால், புலிகள் முஸ்லீம்களை வெளியேற்றி இருக்கலாம். அண்மைக் கால புலிகளின் செயற்பாடுகள் முஸ்லீம்கள் மீது புலிகளை கடினப் போக்கு உடையவர்கள் போல் தென்பட வைக்கலாம். இதனால் அவர்கள், முஸ்லீம்களின் எதிரிகள் எனக் கருத முடியாது. புலிகள் உண்மையில் முஸ்லீம்களுக்கு எதிரானவர்களாக இருந்திருந்தால், வடபகுதி முஸ்லீம்களை அவர்கள் அழித்திருக்கலாம். கிழக்கில் சதிகாரர்களுக்கு துணைபோன முஸ்லீம்கள் வடக்கிலும் துணைபோகலாம் எனக் கருதியே அவர்கள் அப்பகுதி முஸ்லீம்களை வெளியேற்றியிருக்கலாம். எது எப்படிப் போனாலும் இருசமூகத்தையும் பிரித்து வைத்துப் பகைமை கொள்ள தீ மூட்டியவர்கள், அத் தீயிலேயே தாராளமாகக் காய்ந்து விட்டனர். வடுக்களைப் புதுப்பிப்பதை விட புதிய சிந்தனையில் சமாதான நல்வழியில் புலிகளுடன் பேசும் தங்கள் முயற்சியும் பயணமும் வெற்றிபெற வாழ்த்துகிறேன்" என திருகோணமலை சமாதானக்குழுத் தலைவர் எம். ஏ. முகமது குசேன், சிறீலங்கா பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். முகம்மது யாழ்ப்பாணத்துக்கு புலிகளின் தலைமைப் பீடத்தைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடாத்தச் செல்வது குறித்து விடுத்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இலண்டன் பல்கலைக்கழகத்தில் உயர்படிப்பை மேற்கொண்டுள்ள முஸ்லீம் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "நாம் தென்னிலங்கை முஸ்லீம்களால் அனுபவிக்கும் துன்பம், தமிழர்களுடன் எமது உறவு இறுக்கமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது. சிறீலங்கா அரசாங்கம் முஸ்லீம்களை தமது கைப்பொம்மைகளாக இயக்கியதன் விளைவை முஸ்லீம்கள் நன்கு உணர்ந்து விட்டனர்" என்றார்.

### 22, 647 பேர் ஓட்டம்

இதற்கிடை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிர்நிற்கமுடியாது இதுவரை 131 அதிகாரிகள் உட்பட 22, 647 இராணுவத்தினர் சிறீலங்காப் பாதுகாப்புப் படையில் இருந்து விலகி ஓடியிருப்பதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. மூன்று மாதங்களாக தாக்குதல்கள் மந்தமாக இருந்த சூழலில் கூட எண்ணூறு பேர்வரை விலகி தலைமறைவாகி விட்டதாகத் தெரிகிறது. இதனால் போர் என்றால், நேரடியாக இறங்க சிறீலங்கா இராணுவம் தயங்குவதாகவும், சிறீலங்கா ஜனாதிபதி பிடரியில் பிடித்துத் தள்ளுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இன அழிப்பு செய்தாவது தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்வது ஒன்றே, அவரின் அரசியல் நோக்காக இருப்பதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். யார் என்ன கூறினாலும் சமாதான அறைகூவல்கள் அனைத்தையும் புறக்கணித்து, பாரிய யுத்தமொன்றால் தீர்வு காண வேண்டுமென்பதில் சிறீலங்கா ஜனாதிபதி வேகமாகச் செயலாற்றி வருகிறார். ■

## தமிழர் தாயகப் பிரிப்பு...

படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கலைத்ததாகத் தெரிகிறது. இவ்விதம் தேர்தலை சிறீலங்கா எவ்வாறு நடத்தியது என்பதற்கான சான்றுகள் பல வெளியாகத் தொடங்கியுள்ள அதேவேளை சிறீலங்கா கூறும் மற்றொரு போலிப் பிரச்சாரமும் அம்பலமாகத் தொடங்கியுள்ளது. சிறீலங்கா அரசாங்கம் 60 வீதமான தமிழ் மக்கள் வாக்களித்துள்ளதாக ஒரு செய்தியை கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

ஆயினும் உண்மையில் சிறீலங்கா தேர்தல் வாக்காளர் இடாப்பில் இடம்பெயர்ந்த அகதிகள் பெயரை பதிவு செய்ய சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. இன்று வடக்கு கிழக்கில் 3/5 பகுதி மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்கின்றனர் என்பது புள்ளிவிபர உண்மை.

ஆகவே மக்களில் பெரும்பான்மையோர் தேர்தலில் பங்குபற்றாத நிலையில் மிகச்சொற்ப தொகையினரின் பெயர்களைக் கொண்ட தேர்தல் இடாப்பிலிருந்து முறைகெட்ட வழியில் வாக்குகளைப் பதியச் செய்த சிறீலங்கா, தமிழ் மக்களில் அறுபது வீதத்தினர் வாக்களித்தனர் எனக் கட்டுக்கதை கூறத் தொடங்கியுள்ளது.

கிழக்கிலும் வவுனியாவிலும் 1977 பாராளுமன்றத் தேர்தல் இடாப்பு, 1979 இல் புதிய தேர்தல் தொகுதிகள் வரையறுக்கப்பட்ட பின்பு வந்த இடாப்பு, 1981 மாவட்டசபை, 1982 இல் குடியொப்பம், 1988 ஜனாதிபதித் தேர்தல் இடாப்பு ஆகியவற்றை இங்கு பார்ப்போம்.

**1977 தேர்தல் இடாப்பு**

| | |
|---|---|
| வவுனியா | 28, 450 |
| திருகோணமலை | 35, 778 |
| மூதூர் | 30, 389 |
| சேருவாவெல | 31, 250 |
| கல்குடா | 33, 995 |
| மட்டக்களப்பு | 63, 039 |
| அம்பாறை | 49, 006 |
| பட்டிருப்பு | 35, 909 |
| சம்மாந்துறை | 27, 308 |
| கல்முனை | 38, 826 |
| பொத்துவில் | 49, 691 |

புதிய முறையில் தேர்தல் தொகுதிகள் வரையறுக்கப்பட்டதன் பின்னர் 1979 இன் தேர்தல் இடாப்பின்படி

**பிரிவு இல. 14**

| | |
|---|---|
| வவுனியா | 39, 026 |

**பிரிவு இல. 15**

| | |
|---|---|
| திருகோணமலை | 44, 347 |
| மூதூர் | 34, 918 |
| சேருவாவெல | 48, 607 |

**பிரிவு இல. 16 மட்டக்களப்பு**

| | |
|---|---|
| கல்குடா | 42, 248 |
| மட்டக்களப்பு | 73, 589 |
| பட்டிருப்பு | 41, 928 |

**பிரிவு இல. 17 அம்பாறை**

| | |
|---|---|
| அம்பாறை | 59, 347 |
| சம்மாந்துறை | 32, 422 |
| கல்முனை | 33, 183 |
| பொத்துவில் | 60, 336 |

**1981 மாவட்ட சபைத் தேர்தல் இடாப்பு**

| | |
|---|---|
| வவுனியா | 3, 80, 111 |
| மட்டக்களப்பு | 1, 57, 765 |
| திருகோணமலை | 1, 19, 872 |
| அம்பாறை | 1, 35, 286 |

**1982 குடியொப்பத் தேர்தல் இடாப்பு**

| | |
|---|---|
| வவுனியா | 1, 19, 093 |
| திருகோணமலை | 1, 72, 480 |
| மட்டக்களப்பு | 1, 33, 646 |

**1988 ஜனாதிபதி தேர்தல் இடாப்பு**

| | |
|---|---|
| வவுனியா | 1, 42, 723 |
| மட்டக்களப்பு | 2, 15, 585 |
| திருகோணமலை | 1, 52, 289 |

இன்று எவ்வளவு வாக்காளர் பதிவாகியிருந்தனர்? இயற்கை அதிகரிப்பு வீதத்துடன் எவ்வளவாக இருந்திருக்க வேண்டுமென எண்ணிப் பார்த்தால் சிறீலங்கா கூறும் அறுபது சதவீத வாக்காளர் வாக்களித்தனர் என்பதன் பொய்மை விளங்கும்.

இது ஒருபுறம் இருக்க, இத்தகைய போலியான அடிவருடிகள் வேட்பாளர்களாக நின்ற தேர்தலில் கூட வடக்கு -கிழக்கு பிரிப்புக்கு சாதகமாக வாக்குகளை பெறமுடியாது போனது சிறீலங்கா அரசுக்கு கிடைத்துள்ள பலத்த அடி என அவதானிகள் கருதுகின்றனர். அத்துடன் தமிழர் தாயகம் என்பது நிலைபெற்றது ஒன்று என்பதும் அதனை யாராலும் அழிக்க முடியாது என்பதும் இந்தப் பொம்மைத் தேர்தல் மூலம் கூட நிரூபணமாகியுள்ளது. ■

## நாளை இறப்போருக்கு...

நிலையில் பொசுனியாவில் அட்டூழியங்கள் புரிவோரை முறியடிக்க முடியாத நிலையில் போராடுபவர்க்கு உதவுவது ஒன்றே ஐ. நாவுக்கு உள்ள இறுதி வழியல்லவா. ஆனால் இதை ஏற்றுக்கொள்ள விரும்பாமல் சேர்பிய நிலைகள் மேலே விமானத் தாக்குதல்கள் நடத்துவது பற்றி கடந்த 6 மாதகாலமாக ஐ. நாவும் நேட்டோ நாடுகளும் விவாதிக்கின்றனர்.

இந்நிலை நீடித்தால், "நாளை இறப்போர்க்கு இன்று உணவு ஊட்டும் ஐ. நா" என்கின்ற பெயர் மட்டுமே மிஞ்சப் போகின்றது.

1992 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து சேர்பியா மீது சருவதேச பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட போது, சேர்பியா விரைவில் வழிக்கு வந்துவிடும் என்று கருதப்பட்டது. ஆனால் நடந்ததோ எதிர்மாறானது. இப் பொருண்மியத் தடை என்பது தமது தேசிய கௌரவத்திற்கு, தன்மானத்திற்கு பெரும் இழுக்காக சவாலாக இருக்கின்றது என சேர்பிய மக்கள் கருதி தமது ஆட்சியாளருக்கு பெருத்த ஆதரவினைத் தருகின்றனர். அதே சமயம் பொசுனியாவில் சேர்பிய கொடுங்கோண்மைக்கு எதிராகப் போராடும் பொசுனிய முசுலிம் மக்கட்கு ஐ. நா. ஆயுதங்கள் கிடைப்பதையும் தனது ஆயுதத்தடை மூலத் தடுத்து வருகின்றது. அழியும் மக்களைக் காப்பாற்ற முடியாமல் அழிவிலிருந்து தப்ப. அவர்கள் போராடும் போது, ஆயுதத் தடை விதிப்பது அவர்களை மேலும் அழியவே வழிவகுக்கும். இந் நிலையை என்னவென்று சொல்வது என எவருக்கும் தெரியவில்லை. ■

## சிறீலங்காவில் சீன ஆயுதக் களஞ்சியசாலை

சிறீலங்காவில் சீனாவின் ஆயுதக் களஞ்சியசாலை ஒன்றை அமைக்க அனுமதிப்பது குறித்து, சிறீலங்கா அரசு ஆராய்ந்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. சீனாவிற்கு ஆயுதக் களஞ்சியசாலை அமைக்க அனுமதிக்கும் பட்சத்தில், இலங்கை -இந்திய உறவுகள் மீண்டும் பாதிக்கப்படக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும், சர்வதேச ரீதியாக இலங்கை மீதான கண்ணோட்டம் திரும்புவது நிச்சயம் எனவும் கூறப்படுகிறது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நிகழ்வும் நினைவும்

– தில்லன் –

# எமக்கு வெட்டிய குழியில் விழுந்தெழும்பும் பேரினவாதிகள்!

தென் மாகாணத்திற்கான மாகாண சபைத் தேர்தல் இம் மாதம் 25 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு, தேர்தல் பிரச்சாரம் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

கடந்த வருடம் மே மாதம் 17 ஆம் திகதி, வடக்கு -கிழக்கு (தற்காலிகமாக இணைந்த) மாகாண சபைத் தேர்தல் தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெற்ற போது, இத் தென் மாகாண சபைக்கான தேர்தலும் நடாத்தப் பட்டது.

தொடர்ச்சியான அரசியல் தில்லு முல்லுகளின் பின், கலைக்கப்பட்ட தென் மாகாண சபைக்கே மீளவும் தேர்தல் நடாத்தப்படுகின்றது. இத் தேர்தல் சிறீலங்காவின் அரசியலைப் பொறுத்த வரை முக்கியமான தேர்தலாகவும் கருதப்படுகின்றது.

உண்மையில், இதனை மாகாண சபைக்கான தேர்தல் என்று கூறுவதனைவிட அரசியல்வாதிகளுக்கு இடையிலான பலப்பரீட்சை என வர்ணிப்பதே பொருத்தமானதாகும்.

கடந்த வருடம் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலுடன் நோக்கும் போது, சிறீலங்காவின் அரசியலில் இடம்பெற்ற சில மாற்றங்களின் பின் சிறீலங்கா எதிர்நோக்கும் முதல் தேர்தல் இதுவாகும். (தென் தமிழீழத்திலும் வவுனியாவிலும் ஒரு போலி உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்பட்ட போதும், அது தமிழீழ மண்ணில் நடைபெற்ற தேர்தல் என்ற வகையில், இத் தென் மாகாண சபைக்கான தேர்தலை மாற்றங்களின் பின் நடைபெறும் சிறீலங்காவின் முதற் தேர்தல் எனக் குறிப்பிடுகின்றேன்.)

மாற்றங்கள் எனக் குறிப்பிடும்படி அப்படி என்னதான் சிறீலங்காவில் நடைபெற்றுவிட்டது? இது ஒரு நியாயமான கேள்விதான். எனினும் சிறீலங்காவின் அரசியல் சமநிலையில் மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய ஒரு சில நிகழ்வுகளையே இங்கு நான் மாற்றங்கள் எனக் குறிப்பிடுகின்றேன். அவற்றைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. சிறீலங்கா ஜனாதிபதியின் பகிரங்கமான இனவெறி.
2. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்தவரும் தலைவி சிறீமாவோவின் புத்திரருமான அனுரா பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து அமைச்சரானமை.
3. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசாநாயக்கா மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொண்டமை.

4. சூரியகந்தவில் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட உருக்குலைந்த சடலங்களும் எலும்புக்கூடுகளும் ஏற்படுத்தக்கூடிய அரசியல் தாக்கம்.

சிறீலங்காவின் தற்போதைய ஜனாதிபதி டி. பி. -விஜயதுங்கா தான் உரையாற்றும் இடங்களிலெல்லாம் இனவெறியினைக் கக்கி வருகின்றார். "இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை; பயங்கரவாதப் பிரச்சினை தான் உண்டு" என்பது இவரது தொடர்ச்சியான பிரகடனம். அண்மையில் கண்டி 'றின்டிக்' கல்லூரி (TRINITY COLLEGE) கல்லூரியின் பரிசளிப்பு வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, "இந் நாட்டில் 75% ஆன சிங்களவர்கள் இரண்டாம் தரப் பிரசைகளாக இருக்க முடியாது" எனத் தெரிவித்துள்ளார். பௌத்த சிங்கள பேரினவாதம் ஏனைய 25% ஆனவர்களை விழுங்கிக் கொண்டிருக்கும் போதுதான் சிறீலங்கா ஜனாதிபதி இப்படிப் பேசுகிறார். இதன் அர்த்தம் என்னவெனில், ஏனைய 25% ஆனவர்கள் இரண்டாம் தரப் பிரசைகளாக இருங்கள் என்பதாகத்தான் இருக்க முடியும்.

சிறீலங்கா ஜனாதிபதியின் இத்தகைய நிலைப்பாடு சிங்கள மக்கள் தவிர்ந்த ஏனைய தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் ஐ. தே. கட்சிக்கான செல்வாக்கினைக் குறைவடையச் செய்யும் என அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். அதனால், ஜனாதிபதியின் இனவெறிப் பேச்சுக்கள் சிங்கள மக்கள் மத்தியில் கூடுதலான வாக்குகளைத் திரட்டித் தருமோ என்ற மதிப்பீட்டுக்கு தென் மாகாண சபைத் தேர்தல் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வருடம், மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற போது, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தீவிர பிரச்சாரத்தினை மேற்கொண்ட அனுரா, தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்காகத் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார். எனவே இத் தேர்தல், அனுராவினைப் பொறுத்த வரையில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தனது நிலைப்பாட்டினை பலப்படுத்துவது தொடர்பான பரீட்சைக் களமாகும்.

கடந்த தேர்தலின் போது தனிக் கட்சியாகப் போட்டியிட்டு 12.81% ஆன வாக்குகளை (தென் மாகாணத்தில்)ப் பெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (D. U. N. F.)யின் தலைவர் காமினி தற்போது ஐ. தே. கட்சியில். பாவம் அவர். இதுவரை பாராளுமன்ற அங்கத்தவர் பதவியே வழங்கப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினராகி பின்னர் அமைச்சராக வேண்டும். ஏற்கனவே அவருக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, அமைச்சர் சிறிசேனா குரே போன்றோரின் எதிர்ப்பும் உண்டு. காமினியும் தேர்தல் பிரச்சாரத்தில் குதித்துள்ளார். அவருக்கும் தனது நிலையினைப் பலப்படுத்த இது முக்கியமான தேர்தல்.

எதிர்க் கட்சிகளைப் பொறுத்தவரை, பிரதான அணியாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான மக்கள் அணி (PEOPLE ALLAIANCE) நிற்கின்றது. தென் மாகாணமும், ஜே. வி. பியின் காலத்தில், சிறீலங்கா ஆயுதப் படையினரால் பயங்கரமான ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்ட பகுதியாகும். தங்களின் புதல்வர்களைத் தொலைத்த எத்தனையோ பெற்றோரின் சோக வரலாறு இம் மாகாணத்தில் புதைந்துள்ளது. இதனால், சூரியகந்தவில் வெளிவந்த புதைகுழி உண்மைகளால் ஏற்பட்ட உணர்வலைகள், தென் மாகாணத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை மக்கள் அணிக்கு உண்டு. மக்கள் அணியும் தேர்தல் களத்தில் உற்சாகமாக இறங்கியுள்ளது.

இத் தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் அணியும் தங்கள் அரசியல் பலத்தை வெளிக்காட்ட துடித்து நிற்கின்றன. ஜனாதிபதி உட்பட முக்கிய அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் பிரச்சாரக் களத்தில் குதித்துள்ளனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் களத்தில் நிற்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இத் தேர்தல் பிரச்சார வேலைகள், பாராளுமன்றம் கூடுவதனை ஒத்திப் போட்டமைக்கும் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது. இதனைவிட வேட்பாளர்கள் தங்களைச் சாதி அடிப்படையில் அடையாளப்படுத்தி, வீடுதோறும் சென்று வாக்குகளைக் கோருகின்றனர் என்ற செய்தியும் வெளியாகியுள்ளது.

இவற்றை நோக்கும் போது, இத் தென் மாகாண சபைத் தேர்தல் சிறீலங்காவின் அரசியல் நிரலில் (POLITICAL AGENDA) மிக முக்கிய இடத்தினைப் பிடித்துக் கொண்டதனை உணர முடிகின்றது.

இங்கு ஒரு முக்கியமான கேள்வி எழுகின்றது. ஏன் இந்த மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன? என்பதே அக் கேள்வியாகும்.

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண என்று கூறி, இந்திய ஆளும் வர்க்கத்தின் திணிப்பாகிய இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே மாகாண சபைகளாகும். "வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் என சபை உருவாக்கப்பட்டால்

தொடர்ச்சி 4ம் பக்கம் ....

# பெருமெடுப்பிலான படையெடுப்புக்கு சிங்கள அரசு தயாராகின்றது

## ஒரே சமயத்தில் - பல முனைகளினூடு - வடதமிழீழம் மீது தாக்குதல்?

பூநகரித் தோல்வியையும் சிங்கள தேசத்தில் புதைகுழிகள் கண்டறியப்படும் செய்திகளும் சிங்கள மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ள அரசுக்கெதிரான வெறுப்புணர்வுகளையும் -கோபாவேசங்களையும் -திசை திருப்பும் நோக்குடன் தமிழர்கள் மீது ஒரு பெரும் படையெடுப்பை நடாத்தச் சிங்கள அரசு திட்டமிடுகிறது.

'தவளை' இராணுவ நடவடிக்கை மூலம் புலிகள் பெற்றுவிட்ட இராணுவ மேல்நிலையைத் தம்வசப்படுத்த, சிங்கள தரைப்படையின் புதிய தளபதி திடசங்கற்பம் பூண்டுள்ளார். அவ்விதமானதொரு மாற்றத்தை ஏற்படுத்திவிட்டு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்க சிறீலங்கா ஜனாதிபதியும் ஆவலாக உள்ளார்.

எனவே, இவ்வருடத்தை ஒரு போராண்டாகவே சிங்கள அரசு கழிக்க இருக்கிறது.

புதிய போராண்டில் பெரும்பலத்துடன் போரை நடத்துவதற்கு ஏற்றவிதத்தில், ஒரு போர் முறைத் திட்டம் (Strategy) வரையப்பட்டுவிட்டதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமில்டன் வணசிங்கா கூறியுள்ளார். அத்திட்டம் எத்தகையது என்று அவர் கூறாவிட்டாலும் அது வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வடதமிழீழத்தில் - ஒரே சமயத்தில் பல முனைகளூடாக - படையெடுப்பை நடாத்தி நிலங்களை ஆக்கிரமிப்பதுதான், சிங்களப் படைத்துறையின் புதிய திட்டமாக இருக்கும் என நம்பப்படுகிறது. அதேவேளை, தென் தமிழீழத்தில் தனது இராணுவப் பிடியை மேலும் இறுக்கும் நோக்குடன், தமிழர் நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவி, அப்பிராந்தியத்தை விரைவாக சிங்களமயப்படுத்த முயற்சிக்கும் என நம்பலாம்.

ஆனாலும், சிங்களப் படைத்துறையின் புதிய போர்த் திட்டத்தைநடைமுறைப்படுத்த அதற்கு மேலதிக ஆட்பலம் தேவைப் படுகிறது. இப்படியான ஒரு போர்த் திட்டத்திற்காகவே, கடந்த வருடம் ஒன்பது பட்டாலியன்களுக்கு (ஏறக்குறைய 9000 பேர்) தேவையான அளவு ஆட்கள் படையில் சேர்க்கப்பட்டு பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளதாக, பதவி விலகிய முன்னாள் இராணுவத் தளபதி சிசில். வைத்தியரட்ன கூறியுள்ளார்.

இருந்தபோதிலும், பூநகரித் தாக்குதலின் பின் படையினர் மத்தியில் எழுந்துள்ள போரிடும் உறுதிச் சிதைவும் சிங்கள அரசுக்கு பெரும் கவலையைக் கொடுத்துள்ளது. சிங்கள இராணுவ இயந்திரத்துள் எழுந்துள்ள இந்த நெருக்கடி நிலையைச் சீர்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை படைத்துறைத் தலைமை எடுத்துவருகின்றது. படையினர்க்கான வசதிகள் மற்றும் சலுகைகளை அதிகரித்து படையினரின் நலன்களை மேம்படுத்த முயலும் அதேவேளை, விமானத் தாக்குதல்கள் மூலம் தமிழ் மக்களைக் கொன்று படையினரை உற்சாகப்படுத்த முயல்கின்றது.

இருந்தபோதிலும், வெறுமனே இந்த உற்சாகமூட்டல்கள் படையினர்க்கு போரிடும் உறுதியை வழங்கிவிடாது. அதனைக் களத்தில் ஈட்டப்படும் இராணுவ வெற்றிகள் மூலமே பெறமுடியும். இதன் பொருட்டு நன்கு திட்டமிட்ட ரீதியில் ஒரு பாரிய படையெடுப்பை நடாத்த, சிங்களப் படைத்துறைத் தலைமை தயாரிப்புக்களைச் செய்து வருகின்றது.

பலவீனப்பட்டுப் போயுள்ள சிங்கள இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்தும் தேவையாக ஒரு படையெடுப்பு நடைபெற வேண்டிய அவசியம் சிங்களப் படைத்துறைத் தலைமைக்கு எழுந்துள்ளதைப் போல ஐ. தே. க. அரசாங்கத்திற்கு பல்வேறு அரசியற் காரணிகளுக்காக ஒரு படையெடுப்புத் தேவைப்படுகிறது.

சிங்களப் படைத்துறையின் பிரதம தளபதி என்ற பொறுப்பை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவே வகிக்கிறார்.

எனவே தோல்வி கண்ட அல்லது அவமானப்பட்ட ஒரு இராணுவத்தின் பிரதம தளபதி என்ற நிலையில் இருந்தபடி இவ்வாண்டு இறுதியில் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள அவர் விரும்பமாட்டார்.

எனவேதான் ஒரு படையெடுப்பின் மூலம் இராணுவ வெற்றியை ஈட்டி வெற்றி பெற்ற இராணுவத்தின் பிரதம தளபதி என்ற அங்கீகாரத்துடனேயே ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்க விரும்புகிறார். அத்துடன் பிரேமதாசா காலத்து தென் பகுதிப் படுகொலைகள் இப்போது வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. இவை சிங்கள மக்களை ஆத்திரமூட்டியபடி உள்ளன. இப்புதை குழி விவகாரத்தை ஜனாதிபதித் தேர்தலுக்குரிய சிறந்த ஆயுதமாகப் பயன்படுத்த எதிர்க்கட்சிகளும் முனைந்துள்ளன.

ஆனால், தமிழர்கள் மீதான ஒரு பாரிய இராணுவ வெற்றி, இவையாவற்றையும் மழுங்கடித்துவிடும் என்று அரசு எண்ணுகிறது. இவ்விதமாக, வெளிப்படையாகத் தெரியும் பல்வேறு காரணிகளை வைத்துப் பார்க்கும் போது, ஒரு பாரிய படையெடுப்புக்கான சூழல் உருவாகுவதை புரிந்து கொள்ள முடியும்.

இந்தக் கோடை காலம் தொடங்கியவுடன், குறிப்பாக வட தமிழீழம் மீது அதிலும் குறிப்பாக குடாநாட்டின் மீது ஒரு பாரிய படையெடுப்பை சிங்களப் படைகள் நடாத்த வாய்ப்புக்கள் உண்டு.

இந்தப் படையெடுப்பிலிருந்து தமிழ் மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள ஒரேயொரு வழிதான் உண்டு. தமிழரின் படைபலத்தைப் பெருக்கி எதிரிக்கு தக்க பாடம் படிப்பிப்பது தான் அந்த வழி! ■

## ஆனை கட்டிய ...

அந்த இடத்தில் ஒரு நினைவுச் சின்னம்கூட இல்லை. மாறாக அழிந்து, காடுகள் வளர்ந்து போய், பற்றைகளும் முட்களுமாக இருக்கின்றது.

அழிந்துபோன எமது வீரவரலாறுகள் எல்லாவற்றுக்கும் புத்துயிர் கொடுத்து, உலவ விடவேண்டிய பெரும் சமூகப் பொறுப்பு ஒன்று எம்முன் இருக்கின்றது. அரியாத்தையைப் போல இன்னும் எத்தனையோ பெண்களின் வீரவரலாறுகள் காலவெள்ளத்தால் அள்ளுண்டு போயிருக்கலாம். ஆனால் அந்த வரலாறுகளைத் தேடி எடுத்து, எமது அடுத்த தலைமுறைகளிடம் சமர்ப்பிக்க வேண்டிய கடமை எல்லோருக்கும் உரியது. ■

**உலகமங்கை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# விழித்தெழு

அடுப்படியில் வெந்து வெந்து
அறிவையுமா அவித்து விட்டாய்?
நீர் கூட பொங்குகிறதே
நீ ஏன் பொங்கவில்லை?
அடக்கு முறைகளுக்கு
அடிமைச் சாசனம் எழுதிவிட்டாயா?
குட்டிடக் குனிந்தால் குலமகள்
ஏனென்று கேட்டால் கெட்டவள்
எத்தனை பட்டங்கள் பெண்ணுக்கு,
இன்னுமா பொறுமை நெஞ்சினிலே?

ஏட்டைத்தொடு
எழுத்தாணி கையிலெடு
பூட்டிய விலங்கை
உடைத்து எறி
மாடாக இருந்து மடிந்தது போதும்,
கட்டிலுக்கும் தொட்டிலுக்கும் மட்டுமா நீ?
எல்லைகள் காக்கவும்
தொல்லைகள் நீக்கவும்
ஆகாதோ உன்னால்?
படையணி நடத்தி,
பாரினை ஆண்டு,
ஆணோடு பெண்ணும் சரிசமமாக
மடமையைக் கொழுத்தி விழித்தெழு!
கொத்தடிமைத் தனத்தை
கூண்டோடு ஒழித்து,



இனவாத அரசிற்கு
இடியாக மாறு
பெண்ணல்ல நாங்கள்
பெரும் புயலென்று கூறு.
காவலரண் மேடைதனில்
காவலுக்கு நில்.
பேதங்கள் பேசுவதில் பயனில்லை
சாதனையில் சாதிப்போம்
சற்றே விழித்தெழு
கண்ணீர் வடித்து நீ கலங்காதே
காவியம் பாடவும்
ஆயுதம் ஏந்தவும்
பெண்ணே புறப்படு,
உடனே விழித்தெழு!




■ திருமதி மனோன்மணி

இம் மாதம் 8ஆம் திகதி தமிழீழத்தில் சர்வதேச மகளிர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேலுள்ள படங்கள் 1993ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தில் எடுக்கப்பட்டது.


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்